1242

1242

TAMILAGA ILAKKIYAK KOVAI

BOOK I

FOR

FORM IV

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1941
MADRAS

1/41

COMPILED AND EDITED

BY

VIDWAN S. G. GANAPATHI IYER, B.O.L.,

Tamil Pandit, Seva Sadan High School, Chetpat, Madras

and

VIDWAN MISS M. MASILLAMANI, B.A., L.T.,

Tamil Lecturer, Women's Christian College, Madras.

948

PUBLISHERS
VREC Ld
VENKATRAMA & Co.
MADRAS

VENKATRAMA & CO.

4, CORPORATION FRUIT MARKET G.T., MADRAS

Copyright Reserved] 1941 [Price Annas 12.

தமிழக இலக்கியக் கோவை

முதற் புத்தகம்

(நான்காம் பாரத்துக் குரியது)

494.81186

தொகுப்பாளர்கள்:

வித்துவான் ச. கு. கணபதி ஐயர், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர்
ஸேவாசதனம் உயர்தரப் பாடசாலை, சென்னை.

வித்துவான் மேரி மாசில்லாமணி அம்மாள், பி. ஏ., எல். டி.,
தமிழ் விரிவுரையாளர்,
பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1941
MADRAS

பிரசுரகர்த்தர்கள்:

வேங்கடராமா அண்டு கம்பெனியார்

நெ. 4, கார்ப்பரேஷன் பழக்கடை,

ஜி. டி. சென்னை.

உரிமை பதிவு] 1940 [விலை அணா 12

First edition ... 1940

P31,9

Printed at The Liberty Press, G.T, Madras.

முகவுரை

தமிழக இலக்கியக் கோவை என்ற இப்புத்தக வரிசை துரைத்தனத்தார் உயர்தர வகுப்புக்களுக்கென்று வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தை ஒட்டித் தயாரிக்கப்பெற்றவை யாகும். கட்டுரைகள் யாவும் கூடியமட்டில் மாணவர்க்கு உற்சாக மூட்டுவனவாக அமைந்துள்ளன. பழைய நூற்செய்திகளைப் புதிய முறையில் வெளியிடுவதற்கேற்ற பயிற்சியை நம் மாணவர்கள் பெறுவதற்கு அநுகூலமான இரண்டொரு கட்டுரைகள் தக்காங்கு இவற்றில் இடம்பெற்றுள்ளன.

நீளமான கட்டுரைகளைச் சேர்த்துப் பாடங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் பலருடைய கட்டுரைகளைப் படிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு இல்லாமற் போகின்றதென்பது கருதி, சுருக்கமான பல கட்டுரைகளை இப்புத்தகங்களில் சேர்த்திருக்கிறோம்.

இவற்றில் சேர்க்கப்பெற்றுள்ள செய்யுட்பகுதி நம் மாணவர்க்கு எவ்வகையிலும் உற்சாகத்தையும் கவிதையினிடத்து ஆர்வத்தையும் ஊட்டுமென்பது எங்கள் அபிப்பிராயமாகும். இவற்றின் குறிப்புரை செய்யுள் நயங்கள் பலவற்றை விளக்கிச் செல்லும் சிறப்பைப் பெற்றுள்ளதென்பது அக்குறிப்புரையை ஒரு முறை படித்துப் பார்ப்போர்க்குப் புலனாகும்.

இங்ஙனம்:

தொகுப்பாளர்கள்.

நன்றியுரை

இம் முதற் புத்தகத்தில் வந்துள்ள கட்டுரைகளில் 'கபட சந்நியாசி', 'ஆடும் இலக்கியமும்', 'காற்ருடி', 'அரைகுறைப் படம்' என்பன 'கலைமகள்' என்ற சிறந்த மாதப் பத்திரிகையிலிருந்து எடுத்துக்கொள்ளப் பெற்றன. 'இராஜேந்திரன் காலத்திலிருந்த நாட்டின் நிலைமை' என்பது மயிலாப்பூர், சென்னை அலையன்ஸ் கம்பேனி சொந்தக்காரர் அனுமதியின் பேரில் 'கங்கை கொண்டசோழன்' என்ற புத்தகத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப் பெற்றதாகும். 'உலக மாயம்' என்பது இராமச்சந்திரபுரம் (திருச்சி ஜில்லா) அன்பு நிலையத்தார் வெளியிட்டுள்ள திருநூல் என்ற புத்தகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டதாகும்.

இக்கட்டுரைகளையும் இதிற்கண்ட பிற கட்டுரைகளை யும் வெளியிட எங்களுக்கு அனுமதி யளித்தருளிய ஆசிரியர்களுக்கும் பிரசுரகர்த்தர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தை நன்றியறிதலுடன் தெரிவித் துக் கொள்ளுகின்ருேம்.

இங்ஙனம்:

தொகுப்பாளர்கள்.

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

பக்கம்

க. கடவுள் வாழ்த்து

1. பொது வணக்கம் 1

உ. நீதி

1. நாலடியார் 2
2. திருக்குறள் 4
3. அறநெறிச் சாரம் 6
4. நீதிநெறி விளக்கம் 7

ங. காதை

1. சிலப்பதிகாரம் 8
2. கம்ப ராமாயணம் 10
3. நள வெண்பா 18
4. வில்லி பாரத வரலாறு 22
5. குசேலோபாக்கியானம் 26
6. புலவர் புராணம் 36

ச. இனிய பகுதிகள்

1. கண்ணன் குழலூதும் சிறப்பு 39
2. உதவா மலைகள் 39
3. குரங்கும் பலாப்பழமும் 40
4. பனையின் சிறப்பு 41
5. மறம் 41
6. கவிஞன் கர்வம் 42

ரு. தனிப் பாடல்

1. அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் சிறப்பு 44

பக்கம்

2. வினுவுத்தரம் 45
3. மன்னனது குரு பக்தி 45
4. சோற்றைப் புகழ்ந்தது 45
5. புலவரின் நன்றியறிவு 46
6. பொருத்தமற்ற பெயர் 46
7. புகழ்ச்சியை இகழ்ச்சியாக்கியது 46
8 பாணாற்றுப்படை 46
9. நாரைவிடு தூது 47
10. கம்ப ராமாயணச் சிறப்பு 48

உரைநடைப் பகுதி

1. முற்கால இந்தியா—கிராமம் 51
திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்

2. கம்பரைப் பற்றிய பழமொழிகள் 55
வித்துவான் கி. வா. ஜகந்நாதையரவர்கள், பி. ஓ. எல்.

3. கபட சந்நியாசி 59
ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், ஜி. பி. வி. ஸீ.

4. ஆடும் இலக்கியமும் 63
வித்துவான் ச. கு. கணபதி ஐயர், பி. ஓ. எல்.

5. இந்தியக் கிராமப் பொருளாதாரம் : ஆடு மாடுகள் 71
ஸ்ரீ. ஜே. எஸ். பொன்னையா அவர்கள், எம். ஏ.,
பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

6. எது பவித்திரம்? 77
ஸ்ரீ. ஆர். தேசிகன் அவர்கள், எம். ஏ.,
மாகாணக் கல்லூரி, சென்னை.

பக்கம்

7. காற்ருடி 82

ராவ்பகதூர் சி. எம். இராமசந்திர செட்டியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., எப். ஆர். ஜி. எஸ்., (லண்டன்.)

8. இராஜேந்திரன் காலத்திலிருந்த நாட்டின் நிலைமை 87

ஸ்ரீ. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள்

9. சுற்றுப் பிரயாணங்களும் பயனும் 95

ஸ்ரீ ஏ. சிதம்பரநாத செட்டியாரவர்கள், எம். ஏ.

10 புழுப் பூச்சிகள் 100

வித்துவான் எஸ். முத்துவையங்காரவர்கள், பி. ஏ., (ஆனர்ஸ்), எல். டி.

11. இலக்கியமும் விஞ்ஞானமும் 106

வித்துவான் எம். எஸ். செல்லம் ஐயரவர்கள், பி. ஓ. எல். தலைமைத் தமிழாசிரியர், ஸி. ஆர். ஸி. ஹைஸ்கூல், பிரம்பூர், சென்னை

12. அரைகுறைப் படம் 110

ஸ்ரீமதி சீதாதேவி

13. கலாசாலைப் படிப்பு 113

வித்துவான் ஏ. கே. ஆதித்தரவர்கள், தமிழாசிரியர் கிறிஸ்தவக் கலாசாலை, சென்னை.

14. சிறை யிருந்த செல்வி 117

ஸ்ரீ ஆர். பி. சேதுப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.

15. டாக்டர் ஐயரவர்களின் தரிசனம் 121

வித்துவான் எம். மாசில்லாமணி அம்மாள், பி. ஏ., எல். டி., தமிழ் விரிவுரையாளர், பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை.

16. உலக மாயம் 125

சுவாமி சுத்தானந்த பாரதியார்

"இருந்தமிழே உன்ஞ லிருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மென்ருலும் வேண்டேன்."

—தமிழ்விடு தூது.

OFFICE OF THE REGISTRAR OF ...
11 MAR 1941
MADRAS

செய்யுட் பகுதி

க. கடவுள் வாழ்த்து

பொது வணக்கம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. (1)

எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. (2)

—மாணிக்க வாசகர்.

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருஉயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேஉனக் கேவுப தேசமிதே.

—பட்டினத்தடிகள்.

கதிரவன் கிரணக் கையாற்
கடவுளைத் தொழுவான் புட்கள்
சுதியொடு மாடிப் பாடித்
துதிசெயும் தருக்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்
பூதந்தம் தொழில்செய் தேத்தும்
அதிர்கட லொலியால் வாழ்த்தும்
அகமேநீ வாழ்த்தா தென்னே.

—வேதநாயகம் பிள்ளை.

உ. நீதி

1. நாலடியார்

துன்பமடையாதவர்

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனல்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. (1)

மேன்மக்கள்

அங்கண் விசும்பின் அகநிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் ;—திங்கள்
மறுவாற்றும், சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின். (2)

மதிப்பும் அவமதிப்பும்

அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால ;—நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார். (3)

பண்புடையாரின் இயல்பு

கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலும் உரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண். (4)

நல்லினம் சேர்தல்

ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம் ;

குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின். (5)

மனத்தான் மறுவில ரேனுந்தாம் சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர் ;—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனம் தீப்பட்டக் கால். (6)

தாளாண்மை

உறுபுலி ஊனிரை யின்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியும் தின்னும் ;—அறிவினால்
காற்றொழி லென்று கருதற்க ; கையினான்
மேற்றொழிலும் ஆங்கே மிகும். (7)

நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை ;—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம். (8)

ஏற்றத் தாழ்வுக்குத் தானே காரணம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். (9)

செல்வத்தின் இயல்பு

நாறுத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்பாவாய்,
நீறாய் நிலத்து விளியரோ ;—வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து. (10)

—சமண முனிவர்கள்.

2. திருக்குறள்

ஊக்கமுடைமை

[அஃதாவது மனம் மெலிதலின்றி வினை செய்வதற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்.]

உள்ள முடைமை யுடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (1)

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (2)

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (3)

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (4)

மடியின்மை

[அஃதாவது கருதியன செய்யுங்கால் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தால் மடி வருதல் நோக்கி இஃது ஊக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.]

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (5)

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. (6)

மடிமை குடிமைக்கண் தங்கில்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும். (7)

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். (8)

ஆள்வினையுடைமை

[அஃதாவது இடைவிடாத மெய்ம் முயற்சியுடையனாதல். மடிகெடுத்தாலும் வினைமுயற்சியால் அன்றி ஆளப்படாமையின், இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.]

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (9)

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்(து)
ஆள்வினை யின்மை பழி. (10)

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (11)

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (12)

இடுக்கணழியாமை

[அஃதாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தானாக, பொருளின்மையானாக, மெய்வருத்தத்தானாகத் தனக்கு இடுக்கண் வந்துழி, அதற்கு மனம் கலங்காமை. அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.]

வெள்ளத் தனைய இடும்பை யறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும். (13)

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுத லிலன். (14)

இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துட்
டுன்ப முறுத லிலன். (15)

இன்னாமை யின்ப மெனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. (16)

—திருவள்ளுவ நாயனார்.

3. அறநெறிச் சாரம்

அறம்

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். (1)

ஒழுக்கம்

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பிற்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின். (2)

எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சிற்
கொள்ளிவைத் தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றின்
பிறிதென்னும் வேண்டா தவம். (3)

வயிற்றுப்பாடு

போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாம் தொண்டேபோல்—ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு. (4)

உண்மைச் சுற்றம்

நல்லறம் எந்தை ; நிறையெம்மை ; நன்குணரும்
கல்வியென் தோழன் ; துணிவெம்பி ;—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ பொருளாய
இச்சுற்றத் தாரின் எனக்கு. (5)

ஆராய்ச்சியில் நடுநிலைமை

காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றா கெடும். (6)

—திருமுனைப் பாடியார்.

4. நீதி நெறி விளக்கம்

தற்பெருமையின் குற்றம்

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம். (1)

அடைந்தாரைக் காத்தல்

களைகணாத் தம்மடைந்தார்க் குற்றுழியும் மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்கள் தாம். (2)

ஊக்கமுடையாரின் இலட்சணம்

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். (3)

பொருளீட்டுவோர் கவனிக்கத்தக்கவை

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளும் திருவும்—தவம்விற்றூங்
கூனோம்பும் வாழ்வும் உரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்தல் தலை. (4)

இன்சொலின் இன்றியமையாமை

ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓஓ கொடிது கொடிதம்மா; நாகொன்று
தீவினைக் கம்மியனல் வாய்ப்பூட் டிடப்படின்மற்
றுவா இவரென்செய் வார். (5)

—குமரகுருபர சுவாமிகள்.

௩. காதை

1. சிலப்பதிகாரம்

கண்ணகியும் பாண்டியனும்

கண்ணகி வாயிலோனிடம் தன் வரவை அரசனுக்கு உணர்த்தச் சொல்லல்

“வாயி லோயே, வாயி லோயே,
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே,
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே, யறிவிப் பயே,” என

வாயிலோன் அவள்வரவை மன்னனுக்கு அறிவித்தல்

வாயிலோன், “வாழியெங் கொற்கை வேந்தே வாழி,
தென்னம் பொருப்பிற் றலைவ, வாழி ;
செழிய, வாழி ; தென்னவ, வாழி ;
பழியொடு படராப் பஞ்சவ, வாழி ;

*　　　　*　　　　*　　　　*

செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும் ;
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே ;
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே ” என

அநுமதியின்மேல் கண்ணகி உட்செலல்

“வருக, மற்றவட் டருக வீங் ” கென
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி

பாண்டியன் வினா

“நீர்வார் கண்ணினை, யெம்முன் வந்தோய்,
யாரை யோநீ, மடக்கொடி யோ ” யெனத்

கண்ணகி தான் இன்னவள் என்று விளக்கல்

“தேரா மன்னா, செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்ப

புள்ளுறு புண்கண் தீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே; யவ்வூர்
ஏசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகளே யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா, நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே" யெனப்,

பாண்டியன் கள்வனைக் கோல்லுதல் நியாயமே எனல்

பெண்ணணங்கே, கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று;
வெள்வேற் கொற்றம் காணெ"ன வொள்ளிழை

கள்வன் அல்லனென்று கண்ணகி மெய்ப்பித்தல்

"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே,
என்காற் சிலம்பு மணியுடை யரியே",யெனத்
"தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி!
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
தரு"கெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே,

மன்னன் தன் குற்றமுணர்ந்து உயிர்விடல்

மணிகண்டு, தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ வரசன்! யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயு"ளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே.

—இளங்கோவடிகள்.

2. கம்ப ராமாயணம்

விபீடணன் அடைக்கலப் படலம்

வீபீடணனை ஏற்றுக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை
இராமர் காட்டல்

மாருதி வினைய வார்த்தை
செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
"பேரறி வாள, நன்று,
நன்றெ"னப் பிறரை நோக்கிச்
"சீரிது மேலிம் மாற்றம்
தெரிவுறத் தேர்மி" னென்று
ஆரிய னுரைப்ப தானன்
அனைவரு மதனைக் கேட்டார். (1)

"மற்றினி உரைப்ப தில்லை
மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி யன்ன
தன்றெனிற் பிறிதொன் றானும்
வெற்றியே பெருக தோற்க
வீகவீ யாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ
புகலெமைப் பகர்கின் றானை? (2)

"இன்றுவந் தானென் றுண்டோ?
எந்தையை யாயை முன்னைக்
கொன்றுவந் தானென் றுண்டோ?
புகலது கூறு கின்றான்
தொன்றுவந் தன்பு பேணுந்
துணைவனு மவனே பின்னைப்
பின்றுமென் றாலு நம்பாற்
புகழன்றிப் பிறிதுண் டாமோ? (3)

"இடைந்தவர்க் கபயம் யாமென்(று)
இரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி யாலம்
உண்டவற் கண்டி லீரோ;
உடைந்தவர்க் குதவா னாயின்
உள்ளதொன் றீயா னாயின்
அடைந்தவர்க் கருளா னாயின்
அறமென்னா மாண்மை யென்னாம்! (4)

"பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றோ? (5)

"உய்யநிற் கபய மென்றான்
உயிரைத்தன் னுயிரி னோம்பாக்
கையனு மொருவன் செய்த
உதவியிற் கருத்தி லோனும்
மையற நெறியி னோக்கி
மாமறை நெறியி னின்ற
மெய்யினைப் பொய்யென் றானும்
மீள்கிலா நரகின் வீழ்வார். (6)

"சீதையைக் குறித்த தேயோ
தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வ னென்று
பேணிய விரதப் பெற்றி?

வேதிய ரபய மென்றார்க்(கு)
அன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற
அவ்வுரை கடக்க லாமோ? (7)

"காரிய மாக, வன்றே
ஆகுக, கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின்
இதனின்மேற் சிறந்த துண்டோ?
பூரிய ரேயுந் தம்மைப்
புகல்புகுந் தோர்க்குப் பொன்றா
ஆருயிர் கொடுத்துக் காத்தற்
கெண்ணிலா வரசர்க் கென்னும்? (8)

விபீடணனை அழைத்துவருமாறு சுக்கிரீவனை ஏவல்

"ஆதலா னபய மென்ற
பொழுதத்தே யபய தானம்
ஈதலே கடப்பா டென்ப(து);
இயம்பனீ ரென்பால் வைத்த
காதலா லினிவே றெண்ணக்
கடவதென், கதிரோன் மைந்த,
கோதிலா தவனை நீயே
என்வயிற் கொணர்தி"யென்றான். (9)

சுக்கிரீவன் செல்லுதல்

ஐயுற வெல்லாந் தீரும்
அளவையா யமைந்த தன்றே
தெய்வநா யகன துள்ளம்
தேறிய வடைவே தேறிக்
கய்புகற் கமைவ தானன்
"கடிதினிற் கொணர்வ"லென்னா
மெய்யினுக் குறையு ளான
ஒருவன்பால் விரைவிற் சென்றான். (10)

சுக்கிரீவனும் விபீடணனும் தழுவிக்கொள்ளல்

தொல்லருங் கால மெல்லாம்
பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார்
பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே;
ஒல்லைவந் துணர்வு மொன்ற
இருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத்
தழுவின ரெழுவுத் தோளார். (11)

இராமரைத்தொழ விபீடணனைச் சுக்கிரீவன் அழைத்தல்

தழுவினர் நின்ற காலைத்
"தாமரைக் கண்ணன் தங்கள்
முழுமுதற் குலத்திற் கேற்ற
முறைமையா லுவகை மூள
வழுவிலி லபய முன்பால்
வழங்கின னவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவி" னென்னுக்
கதிரவன் சிறுவன் சொன்னுன். (12)

வீபீடணனின் மெய்ப்பாடு

சிங்கவே றனையான் சொன்ன
வாசகஞ் செவிபுகா முன்
கங்குலி னிறத்தினுன் தன்
கண்மழைத் தாரை கான்ற
அங்கமு மனம தென்னக்
குளிர்ந்ததவ் வகத்தை மிக்குப்
பொங்கிய வுவகை யென்னப்
பொடித்தன வுரோமப் புள்ளி. (13)

விபீடணன் வியத்தல்

"பஞ்செனச் சிவக்கு மென்கால்
　　தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக் கிளைய வென்னை
　　வருகவென் றருள்செய் தானே!
தஞ்செனக் கருதினானே
　　தாழ்சடைக் கடவு ளுண்ட
நஞ்செனச் சிறந்தே னன்றோ
　　நாயக னருளி னாயேன்! (14)

"மறுளுறு மனத்தி னானென்
　　வாய்மொழி மறுத்தான்; வானத்
துருளுறு தேரி னானும்
　　இலங்கைமீ தோடு மன்றே!
தெருளுறு சிந்தை வந்த
　　தேற்றமீ தாகிற் செய்யும்
அருளிது வாயிற் கெட்டேன்
　　பிழைப்பரோ வரக்க ராயோர்! (15)

"தீர்வரு மின்னல் தம்மைச்
　　செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ்
　　செய்கையிற் பிழைப்ப துண்டோ?
கார்வரை நிறுவித் தன்னைக்
　　கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய
　　அமிழ்துபண் டளித்த தன்றே! (16)

இராமரின் தோற்றம்

அள்ளிமீ துலகை வீசும்
　　அரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் டிரையிற் றாகிப்
　　பிறிதொரு திறனுஞ் சாரா

வெள்ளிய கடலின் மேனாள்
விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தா னென்னப்
பொலிதரும் பண்பி னானை. (17)

கோணுதற் கமைந்த கோலப்
புருவம்போற் றிரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின்
பொலிமணல் பரந்த வைப்பிற்
காணுதற் கினிய நீள
வெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின்
மணியென வயங்கு வானை. (18)

கற்றைவெண் ணிலவு நீக்கிக்
கருணையா லமிழ்தங் காலும்
முற்றுறு கலையிற் றூய
முழுமதி முகத்தி னானைப்
பெற்றவ னளித்த மோலி
இளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி
பொலிகின்ற சென்னி யானை (19)

வீடணன் இராமரைக் கண்டு வியப்புறுதல்

வீரனை நோக்கி யங்க
மென்மயிர்ச் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் "செங்கண்
அஞ்சன மலையன் றாகில்
கார்முகில் கமலம் பூத்த
தன் றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி
அறநிறங் கரிதோ!" வென்றான். (20)

அரக்கர் பாக்கியவான்கள் எனல்

"பெருந்தவ மியற்றி னோர்க்கும்
பேர்வரும் பிறவி நோய்க்கும்
மருந்தென நின்றான் தானே
வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தன னின்ற தென்னா
மியம்புவ தெல்லை தீர்ந்த
அருந்தவ முடைய ரம்மா
அரக்க"ரென் றகத்துட் கொண்டான். (21)

இராமரைச் சேவித்தல்

கரங்கள்மீச் சுமந்து செல்லுங்
கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களு முருக நோக்குங்
காதலான் கருணை வள்ளல்
இரங்கின னோக்குந் தோறும்
இருநிலத் திறைஞ்சு கின்றான்
வரங்களின் வாரி யன்ன
தாளிணை வந்து வீழ்ந்தான். (22)

இராமரின் உறுதிமொழி

ஆழியா னவனை நோக்கி
அருள்சுரந் துவகை தூண்ட
"ஏழினோ டேழாய் நின்ற
உலகுமென் பெயரு மெந்நாள்
வாழுநா ளன்று காறும்
வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கட லிலங்கைச் செல்வம்
நின்னதே தந்தே"னென்றான். (23)

விபீடணனை உடன்பிறந்தோனாகக் கூறுதல்

“குகனொடு மைவ ரானேம்
 முன்பு ; பின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானேம் ;
 எம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய,
 நின்னொடு மெழுவ ரானேம் ;
புகலருங் கானந் தந்து
 புதல்வராற் பொலிந்தா னுந்தை.” (24)

இராமர் விபீடணனுக்கு மகுடம் சூட்டும்படி இலக்குவனிடம் கூறல்

“உஞ்சனே னடியனே ”னென்(று)
 ஊழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை
 அழகனு மருளி னோக்கித்
“தஞ்சநற் றுணைவ னான
 தவறிலாப் புகழான் றன்னைத்
துஞ்சலில் நயனத் தைய,
 சூட்டுதி மகுட” மென்றான். (25)

—கம்பர்.

3. நள வெண்பா

நளன் தமயந்தியைப் பிரிதல்

பாழ்மண்டடபம் கண்டு நளன் "அதில் துயில்வோம்" எனல்

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேலைதனில்—அங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து. (1)

"மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை,—சோர் கூந்தன்
மாதராய், நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா" யென்றான் புலர்ந்து. (2)

நளனுக்குற்ற சிறுமைக்குத் தமயந்தி வருந்துதல்

"வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா" வென்றழுதாள் கொண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. (3)

நளன் தமயந்தியைத் துயிலச் செய்தல்

"தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதால் பேர்யாமம்;—நீயுமினிக்
கண்மேல் துயில்கை கட"னென்றான் கைகொடுத்து
மண்மேல் திருமேனி வைத்து. (4)

வெறும் தரையில் அவள் தூங்குவதற்கு நளன் வருந்துதல்

"புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றான்படுத்துத்
தன்கண் துயில்வாளைத் தான்கண்டும் என்கண்
பொடியாதால், உள்ளாவி போகாதால், நெஞ்சம்
வெடியாதால்?" என்றான் விழுந்து. (5)

"வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் துயின்ருள் மற்(று)
ஆரே துயரடையார் ஆங்கு?" (6)

நளன் தமயந்தியின் ஆடையில் பாதியைக் கிழித்துக்கொண்டு அரிதில் புறப்படல்

காரிகைதன் வெந்துயரம் காணுமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கும் ஒருயிர்போல் எய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னங்கு. (7)

ஒற்றைத் துகிலும் உயிரு மிரண்டாக
முற்றுந்த னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து. (8)

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோல வாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். (9)

"தீக்கா னகத்துறையும், தெய்வங்காள், வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்(று)
ஏதிலன்போல் போகின்றேன் யான்." (10)

தாருவெனப் பார்மேல் தருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரிருளில்
செங்கா னகஞ்சிதையைத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து. (11)

நளனைக் காணாது தமயந்தி வருந்துதல்

உடுத்த துகிலரிந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி—அடுத்தடுத்து,
"மன்னே", யெனவழைப்பாள் மற்றுமவனைக்காண(து)
"என்னே! யிஃதென்" னென் றெழுந்து (12)

அழல்வெஞ் சிலைவேடன் அம்புருவ ஆற்றாது
உழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்டு
எழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேல் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. (13)

சூரியோதயம்

தையல் துயர்க்குத் தரியாது தா்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். (14)

அவள் பலவாறு கூறி வருந்துதல்

"செய்தபிழை யே"தென்னும், "தேர்வேந்தே", என்றழைக்கும்,
"வெய்துதுய ரக்கரைகா ணே"னென்னும்,—"பையவே
என்னென்ன தென்" என்னும்; "இக்கானின் விட்டேகும்
மன்" என்ன வாடும் மயர்ந்து. (15)

"வெறித்த இளமான்காள், மென்மையில்காள், இந்த
நெறிக்கண் நெடிதூழி வாழ்வீர்;—பிரித்தெம்மைப்
போனாரைக் காட்டுதிரோ" வென்னப் புலம்பினாள்
வானாடர் பெற்றிலா மான். (16)

பிரிந்துபோன நளன் இரங்கல்

"கொம்பர் இளங்குருகே, கூறா திருத்தியால்
அம்புயத்தின் போதை அறுகாலால்—தும்பி
திறக்கத்தேன் ஊறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனாக் கொன்று." (17)

"புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்-இன்னருள்கண்(டு)
அஞ்சினன் ஆவி அழிந்தான் அறவுயிர்த்து
நெஞ்சினனெல்லாம் நினைந்து. (18)

"காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ உரை. (19)

"பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே, வேலைக் கழிக்குருகே,—யானுடைய
மின்னிமைக்கும் பூணுளவ் வீங்கிருள்வாய் ஆங்குணர்ந்தால்
என்னினைக்கும் சொல்வீ ரெனக்கு. (20)

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல, ஆர்கலியே, மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று?" (21)

நளன் அயோத்தியை அடைதல்

முன்னீர் மடவார் முறுவல் திரள் குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்கும் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கும் நன்னாட் டரசு. (22)

—புகழேந்திப் புலவர்

4. வில்லிபாரத வரலாறு

திருமுனைப்பாடி நாட்டின் பெருமை

அவ்வை பாடலுக்கு நறுநெய்பால் பெருகி
யருந்தமி ழறிவினுற் சிறந்து
பவ்வநீ ராடைத் தரணிமான் மார்பிற்
பயிலுமுத் தரியமும் போன்று
மொய்வரால் கெண்டை வாளைசேல் மலங்கு
முதலிய வினமெதிர் கொள்ளத்
தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத்
திருமுனைப் பாடிநன் னாடு. (1)

பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற்
பாவலர் பாதிநா ளிரவின்
மூவரு நெருங்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு
தேவரு மறையு மின்னமுங் காணுச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரு மதித்தோர் மூவரி லிருவர்
பிறந்தநா டிந்தநன் னாடு. (2)

வேறு

கம்பலைக் கழல்நற் சேனைக்
காவலர் கரங்கள் நீக்கிப்
பைம்புலத் துழுநர் தங்கள்
பலவகை விளைவு மீட்டி
ஐம்புலத் தவர்க்கு மீந்தாங்
கறத்தினை வளர்த்த லாலே
செம்புலக் கிழத்திக் காவி
யன்னதச் செல்வ நாடே. (3)

வேறு

வில்லிபுத்தூரரின் பெருமை

எண்ணு மாகட லேழுமன் றிருகட லாகப்
பெண்ணை மாநதி நறுநெய்பால் பெருகுமப் பழனப்
பண்ணை நீள்வளம் பல்குசீர்ப் பழையநன் னாட்டில்
வண்ண நான்கினு முயர்ந்துளோ ரொருமுனி வந்தான். (4)

ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதி பதியாய்
வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து
பைந்து ழாய்முடிப் பரமனைப் பலகவித் துறையும்
சிந்தை யான்மொழிந் தன்பர்தம் திருவுளம் பெற்றோன்.(5)

தென்னர் கேரளர் செம்பிய ரெனப்பெயர் சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய வரிசையா லுயர்ந்தோன்
முன்ன ரெண்ணிய முத்தமிழ்ப் பாவல ரெவரும்
பின்னர் வந்தொரு வடிவுகொண் டனரெனப் பிறந்தோன்.

தார காயண வண்டலை தண்டலைச் சனியூர்
வீரராகவ னருள்பெறு வில்லிபுத் தூரன்
ஊர ராமுடி மண்மிசை யுயர்புகழ் நிறுத்தித்
தீர காகளம் பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன். (7)

வேறு

ஆட்கொண்டான் பெருமை

எங்குமிவ னிசைபரப்பி வருநாளில் யாமுரைத்த
விந்த நாட்டிற்
கொங்கர்குல வரபதியாட் கொண்டானென் றொருவண்மைக்
குரிசி லுன்றி
வெங்கலியின் மூழ்காமற் கருநடப்பேர் வெள்ளத்து
வீழாமல் நான்காஞ்
சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல் கலங்காமற்
றலைகண் டானே. (8)

மற்றவனிப் புவியாளும் வளவனுக்கு முடிகவித்து
வழுதித் தெவ்வைச்
செற்றவனுக் கவனியெல்லாஞ் செங்கோன்மை நிலையிட்டுச்
செல்வ மெல்லாம்
கற்றவருக் கிருகையுடைக் கற்பகம்போ லினிதளித்துக்
கமல மாதும்
கொற்றவையு மனங்களிப்பத் தன்னுமம் மேருவினுங்
கோட்டி னனே. (9)

தென்னுட்டில் வடநாட்டிற் குணநாட்டிற் குடநாட்டிற்
றெவ்வ ரோடக்
கன்னுட்டி யமர்பொருது கங்கைநீ ரூட்டுவித்துக்
கண்டன் வேங்கை
எந்நாட்டு மெழுதியவன் திருமரபோர் பெற்றபுகழ்
யாவர் பெற்ருர்?
அந்நாட்டுக் கொற்றமெல்லா மக்குரிசில் புகழொடவ
தரித்த தன்றே. (10)

ஆற்றியமெய்ச் செல்வத்தா லளகையைவென் றிருங்கவினு
லமர ரூரை
மாற்றியபொற் றடமதில்சூழ் வக்கபா கையினறத்தின்
வடிவம் போலத்
தோற்றியவக் கொங்கர்பிரான் சூழ்தமிழா னுட்கொண்டான்
சுற்றத் தோடு
போற்றியவிப் புவிமுழுதுந் தன்றிருப்பேர் மொழிகொண்டே
புரந்தா னம்மா. (11)

ஆட்கொண்டானின் விருப்பத்துக்கிணங்க வில்லியார்
பாரதம் செய்தாரென்பது

பிறந்துய்யக் கொண்டவனிப் பேருலகம் பெருவாழ்வு
கூரு நாளில்
நிறைந்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ ரனைநோக்கி
" நீயு நானும்

பிறந்ததிசைக் கிசைநிற்பப் பாரதமாம் பெருங்கதையைப்
பெரியோர் தங்கள்
சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ்மொழியின் விருத்தத்தாற்
செய்க" வென்ருன். (12)

இருக்காதி மறைமொழிந்தோ னியம்பியவிப் பெருங்கதையை
யாருங் கேட்பச்
சுருக்காகப் புராணமுறை சொல்லுகவென் றலினவனுஞ்
சொல்ல லுற்ருன்
பெருக்காளர் முதலாய பெருங்குலத்தோ ரிக்கதையின்
பெற்றி கேட்டார்
செருக்காக வவன்மைந்தன் வரந்தருவா னிப்பதிகஞ்
செப்பி ஞனே. (13)

—வில்லிபாரதம் : சிறப்புப் பாயிரம்.

5. குசேலோபாக்கியானம்

சுசீலை குசேலரைத் துவாரகைக்கனுப்பல்

சுசீலை தன் மனக் குறையைக் கூறத் துணிதல்

கற்புடைய வருந்ததியே முதன்மடவார் புகழவரும்
கற்பின் மிக்காள்
பொற்பமையா மிடியென்னும் சாகரத்து ளழுந்திமனம்
புண்ணே யாகிப்
பற்பலநாள் செலவொருநா ளமயமறிந்துளம்துணிந்து
பண்பிற் போற்றிச்
சொற்பெறுநற் புகழ்க்கணவன் முகநோக்கி யெண்ணியவை
சொல்ல லுற்ருள். (1)

வே று

குழந்தைகளின் பசிப்பிணியைப்பற்றிக் கூறல்

"கொழுந்துவிட் டெரியு முத்தழல் வளர்க்கும்
கோதிலா முனிவ, நஞ் சிறுர்கள்
அழுந்துபட் டேங்க வெழும்பசி யொழிக்க
அனமிலா துயங்கின ரந்தோ!
முழங்குமீ ரொன்பான் புராணநன் கோர்ந்தோர்
மூரலா லுயிர்நிற்கு மென்னு
வழங்குவ ரச்சொல் மறிதிரைக் கடல்சூழ்
மண்ணிடத் துண்மையே யாமே. (2)

வறுமையின் கொடுமையைக் கூறல்

"தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை யுலர்தர வாட்டும்;
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும்;
சாற்றரு முலோபத்தை மிகுக்கும்;

தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும் ;
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே. (3)

“தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை ;
சாற்றுமெண் ணங்கள்வா ழிடமாம் ;
தரித்திரம் பற்பல துக்கமுந் தோன்றத்
தக்கபே ராகர மென்ப ;
தரித்திரம் நன்மை சாலொழுங் கென்னும்
தழைவனம் தனக்கழல் தழலாம் ;
தரித்திரங் கொடிய வெவற்றினுங் கொடிதத்
தகையதை யொழித்தல்நன் றாமே. (4)

‘செல்வம் வேண்டிக் கண்ணன்பால் செல்க’வெனல்

“யாதவர் குலத்திற் றோன்றிய வரசர்
யாவர்க்கு மதிபனு மிணையில்
மாதவ னுடனீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார் ;
ஆதலி னப்பீ தாம்பரன் மருங்கி
லணைந்தவன் பாற்பெறுஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநம் சிறுவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும். (5)

“இளமையில் நின்னோ டிருங்கலை கற்ற
எழிலிபோல் வண்ணன்நிற் கண்ட
அளவையே யெல்லாப் பேசரு வளமும்
அளிக்குவ னையம தின்றால் ;
பளகரு நேச னொருவனைப் படைத்தல்
பருந்தனப் பொதிபெற்றாற் போன்மென்
றுளமிகத் தெளிந்தோர் புகலுநன் மாற்றம்
உண்மையாம் பொய்மையா காதே. (6)

"கண்ணனைத் துளப மாலிகை நிறத்திற்
கமலைவாழ் தரவருள் புரிந்த
மண்ணிய மணியைத் தினந்தினம் போற்றும்
மாசறு தவத்தின ருள்ளத்
தெண்ணிய வெண்ணி யாங்களப் பவனை
எய்திநம் சிறுருயச் செல்வம்
நண்ணிவா" வென்று நங்கைசொற் றிடலும்
நற்றவக் குசேலனீ துரைக்கும். (7)

வேறு

யாவும் விதிவழி நடக்குமென்று குசேலர் கூறல்

"மக்களுக் கிரங்கி வாடு
மடத்தகை யணங்கு கேட்டி
தக்கமுற் பவத்தி லான்ற
தருமம்நன் கியற்றி னோர்கள்
ஒக்கவிப் பவத்தி லின்பம்
ஒருங்கனு பவிப்ப ரின்றேல்
மிக்கவெந் துயரத் தாழ்வர்
இதற்குளம் மெலித லென்னே! (8)

'விலங்கினம் மக்களினும் மேல்' என்றல்

"மைந்தர்கள் தம்மைப் போற்ற
வளநிதி வேண்டு மென்றாய்;
நந்திய பறவை கானம்
நயந்துறை விலங்கு முன்று
வந்தபல் லுயிர்க்குச் சேம
வைப்புண்டோ, வருவா யுண்டோ,
எந்திடத் தேனும் போயொன்
றிரப்பது தானு முண்டோ? (9)

"அல்லது 'நாளைக் கென்செய்
வா'மெனுங் கவலை யுண்டோ,
எல்லையி லொன்றி னொலொன்
றிடிப்புண்டு வாழ்த லுண்டோ,
ஒல்லுமவ் வுயிர்கள் தம்முள்
உணவிலா திறந்த துண்டோ?
சொல்லரி பரந்த உண் கண்
துடியிடைப் பேதை மாதே! (10)

'கடவுள் உன் மக்களைக் காப்பார்' என்றல்

"கல்லினுட் சிறுதே ரைக்கும்
கருப்பையண் டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி யண்ணல்
ஒல்லுநின் மைந்தர்க் காவா
தொழிவனோ, ஒழியான் உண்மை;
மெல்லியால், கொண்ட துன்பம்
விடுவிடு மறந்து மெண்ணல். (11)

"ஆதலின் நினது மைந்தர்க்
காயுளுள் ளளவை காறும்
ஓதிரு வினைக்குத் தக்க
உணவுண்டு புந்தி மாழ்கேல்
ஏதுவந் தாலும் ஊழால்
எனநினைந் திருத்தல் வேண்டும்
மாதர்வாள் முத்த மூரல்
மயில்மருள் நடைப்பூங் கொம்பே. (12)

உண்மைநூல் அறியாரின் தன்மையைக் காட்டல்

"வளநிதி படைத்தோ மென்றும்
வடிவவில் லுடையோ மென்றும்
அளவில்சேய் ஈன்றோ மென்றும்
அனுபவத் தமைந்தோ மென்றும்

இளமையிற் சிறந்தோ மென்றும்
எழில்நல முடையோ மென்றும்
உளமகிழ் கூர்வர் சற்றும்
உண்மைநூல் உணர்ச்சி யில்லார். (13)

செல்வரின் இழிவைக் கூறல்

"ஒருசிறு தரும மேனும்
உஞற்றிடார் ; இரப்போர் வந்து
"தருமிகர் கரத்தாய்" என்று
சாற்றினும் கொள்ளா ராகிக்
கருணைசற் றின்றி யெல்லை
கடந்திடத் துரந்து மீள்வர் ;
மருவுபல் கிளையு மோம்பார் ;
வளம்படைத் தென்பெற் றூரால்! (14)

"முறைதவிர் கொடுங்கோன் மன்னர்
முனிவுக்கு நனியு மச்சம் ;
கறைகெழு களவு செய்வார்
கரத்திற்கும் அழற்கு மச்சம் ;
மறைவரு தாய மாக்கள்
வெளவுவ ரென்று மச்சம் ;
அறைபொருள் பெற்ற ரல்லர்,
அச்சமே பெற்றூர் போலும்! (15)

"ஒல்லொழுக் கினரைத் தீய
ஒழுக்கரென் றுரைக்கச் செய்யும் ;
புல்லொழுக் கினரைத் தூய
புலத்தரென் றுரைக்கச் செய்யும் ;
நல்லகற் புடைய மாதர்
நலத்தையஞ் சாமை செய்யும் ;
பல்வகைத் துயருஞ் செய்யும்
பாழ்ம்பொருள் பற்று ளார்க்கே. (16)

செல்வத்தின் இழிவைக் கூறல்

"'கோடிபொன் னளிப்ப" னின்றே
கோடிர்; ஓர் மாத்தி ரைக்குள்
ஊடிய கிளைக்கோர் வார்த்தை
யுரைத்தடை குவ'னென் றூலும்
தேடிய கால தூதர்
சிமிழ்த்தல்விட் டொழிவ ரேகொல்,
வாடிய மருங்குல் நங்காய்,
மாண்பொருட் பயன்கண் டாயோ! (17)

"பொருவரு பந்த மெல்லாம்
புணர்த்திடும்; தெய்வ சிந்தை
ஒருவமே விட்டு நிற்கும்;
உறக்கமும் இறக்கச் செய்யும்;
கருவினுட் புகுத்தும்; இன்ன
கரிசுகண் டதனு லன்றோ
இருநிலத் திடைவெ றுக்கை
யென்மனர் புலமை சான்றோர். (18)

"சிறியரே மதிக்கு மிந்தச்
செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
வாயுளார் மூக ராவர்;
பறியணி செவியு ளாரும்
பயில்தரு செவிட ராவர்;
குறிபெறு கண்ணு ளாரும்
குருடராய் முடிவ ரன்றே. (19)

"பல்கதிர் விரித்துத் தோன்றிப்
பாடுசெய் கதிரே போல
மல்லல்நீ ருலகிற் றோன்றி
மறைந்திம்; 'நும்மை விட்டுச்

செல்வ'மென் றுறுவ தற்கும்
செல்வமென் றுரைக்கும் பேர்நன்
றல்லலே விளைப்ப தாகா
தரும்பெறற் செல்வம், பாவாய்! (20)

தரித்திரம் நிலையற்றது என்றல்

"தரித்திர மென்று பல்கால்
சாற்றினை ; யெதிர் மறுத்தல்
பரித்திடு மச்சொல் தன்மைப்
பன்மைமுற் றாக வல்லோர்
விரித்துரை பொருள்நீ சற்றும்
விளங்கிட வுணர்ந்தா யல்லை,
அரித்தடங் கருங்கண் மாதே,
ஆதலின் நிலைத்த தன்றால். (21)

'கண்ணனிடம்போய், கேவலமான செல்வத்தையா
கேட்பது!' என்றல்

"பாற்கட லடுத்த மீனப்
பால்விரும் பாது மற்ற
ஏற்குமா விரும்பி னாற்போல்
எம்பிரான் திருமுன் சார்ந்து
நாற்கதி கடக்கு மின்பச்
செல்வத்தை நண்ணி டாமல்
சேற்கருங் கண்ணாய், துன்பச்
செல்வமோ நண்ணு வேன்யான்! (22)

இரப்பதன் இழிவைக் காட்டல்

"மானமற் றிழிவு பூண்டு
வளமனைக் கடைதோ றெய்தி
ஈனமுற் றிரந்தி ரந்திவ்
வுடல்பருத் திடச்செய் தாலும்

தூநகைக் கரிய வாட்கட்
சுடர்த்தொடி நிலைப்ப தன்று
பேனமார் வெள்ள நீரிற்
பிறந்திடுங் குமிழி போலும்." (23)

குசேலர் கூறியது உண்மையென்று கொண்டும் மக்களின்
பொருட்டுச் சுசீலை மேலும் வாதித்தல்

அந்தண னுரைத்த மாற்றம்
அனைத்துமஞ் செவியா லேற்று
நந்தலி லுண்மை யீதென்
றுணர்ந்துந்தான் நயந்து பெற்ற
மைந்தர்பால் வைத்த வாசை
மயக்கரு ளாகிப் பின்னும்
புந்தியின் விரும்பிப் பாதம்
போற்றிநின் றிதனைக் கூறும். (24)

வேறு

முயற்சியின் இன்றியமையாமையை வற்புறுத்தல்

"மானிட னொருவன் தனக்கருஞ் செல்வம்
வாய்க்கவென் றனுதினம் முயற்சி
தானுகற் றுவனேல் கடவுளு மதனைத்
தந்தளிக் குவனதா லன்றோ
ஆனபே ரறிஞர் 'திருவினை முயற்சி
யாக்குமம் முயற்சியில் லாமை
ஈனமா ரின்மை புகுத்திடு மா'லென்
றியாருநன் குணர்தர நவில்வார். (25)

"மக்களே தேவர் நரகரென் றறிஞர்
வகுக்குறு முயர்திணை யாதி
தக்கபல் லுயிர்க்கும் சக்கர முதலாச்
சாற்றுமைம் படைகரத் தேந்தும்

மைக்கடல் மேனி வள்ளல்வேண் டியவீ
வானென வாய்மலர்ந் தனையால்;
மிக்கபன் முயற்சி புரிகிலார் தமக்கவ்
விண்ணவன் யாங்ஙன மருளும்? (26)

"கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங்
கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வ மடைகுவ னேகொல்?
அருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுடைக் கரத்தா லெடுத்துண் தெங்ஙன்
வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்பன்?
உடல்பவந் தனக்கோ ராகர மாகும்
உடல்நனி வாட்டுமெய்த் தவத்தோய்? (27)

'எம்மைக் காத்தல் உமது கடன்' என்றல்

"வெண்டிரை வீசும் கருங்கடற் புடவி
விண்ணகம் பாதல மிவற்றுள்
மண்டிய உயிர்க ளெவற்றையுங் கமலை
மார்மினன் புரப்பனே யெனினும்
அண்டர்கள் புகழும் ஐய, நீ யுயிர்த்த
அரியமக் களையுமென் றனையும்
பண்டைநூற் கியையப் பாதுகாத் தளித்தல்
பகரும்நின் கடன்" எனப் பகர்ந்தாள். (28)

வேறு

இரக்கச்செல்வோர் செல்வரிடம் பெறும் சிறுமையைக்
குசேலர் கூறல்

"ஒன்றும் வேண்டல ராயினும் செல்வர்பால்
உறுமிடி யவர்சார்ந்தால்,
'இன்று வந்தமை யாதினைக் கருதிமற்
றிவ'ரென வுளத்தெண்ணிக்
கன்று மாறுபல் குறிப்புரை நவிற்றுவர்;
காதலி னவர்பாற் போய்
மன்ற வந்தது சிறுமை யேயிவர்க்
கன்றிமற் றிலை யறி பாவாய். (29)

'கையுறையின்றி எவ்வாறு செல்வேன்' எனல்

"இந்த வாறிவ னுரைத்தலென் னெனவுளத்
தெண்ணிடே லெக்காலும்
பந்த மானிடர் தன்மையிற் றெனப்பகர்ந்
தேன்; பரம் பொருளாய
சந்த மாமறைத் தலைவன்பா லுறுவது
தகாதென்றே னலன்கண்டாய்;
எந்த வாறுகை யுறையிலா தையன்முன்
யான்படர் குவன் மாதே!" (30)

வேறு

சுசீலை அவல் தயார்செய்து குசேலரை அனுப்புதல்

என்றுரைத்த கொழுநனுரை கேட்டுமகிழ்ந்
திதற்கென்னே செயலென் றெண்ணி
அன்றுமுத லுபவாசந் தானிருந்து
மாமுனிவன் அரிதிற் றேடி
நன்றளிக்கும் நெல்லினிற்றன் னொருபாகம்
வேறெடுத்து நலக்கச் சேர்த்துத்
துன்றியவந் நெல்லையொரு தினத்தறலில்
நனைத்துவறுத் தெடுத்துத் தூய்தா (31)

கறையிட்டு நானி காண வுலக்கைகொடு
மிக்கிடித்துக் கரிசு போக்கி
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி யோர்பால்
மறையிட்ட வொழுங்குடையாள் முடிந்துகொடுத்
"தினிதுபோய் வருக" வென்றாள்;
சிறையிட்ட பவம் நீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்ல லுற்றான். (32)

—வல்லூர்த் தேவராச பிள்ளை.

6. புலவர் புராணம்

சத்திமுற்றப் புலவர்

புலவரின் இயல்பு

எத்தி சைக்கணே தமிழ்ப்பெருந் தேயத்தி னிடந்தோய்
சத்தி முற்றமென் றிடும்பெயர்த் தனிநகர்ப் பிறந்தோன்
அத்தி நூறடு மருந்திறற் சீயவே றனையான்
பத்தி யுந்தமிழ்ப் புலமையும் தோய்தரு பண்போன். (1)

அவர் மதுரைக்கு வரல்

மனைவி தன்னெடு நெடுந்தின மனமிக மாழ்கி
இனைய வன்துயர் களைவதற் கேதுவே தென்னும்;
நினைவிற் றேற்றிய வாறுதென் மதுரையின் நிருபன்
தனைவிழைந் தொர்நன் ளினிற் றனிநடந் தனனே. (2)

[மதுரையில் அரசனைக் காணப்பெருது வாயில் காப்போரால் தடையுண்டு பல பகல் துன்புறுவாராயினர்.]

பாண்டியன் நாரைமூக்குக்கு உவமை யாதென்றமைக்கு அவன் சபைப்புலவர்கள் தக்க விடைகாணுமல் வருந்தியது

அனைய நாளிலவ் வூரிறை தன்னவைப் புலவோர்க்
"கினைய தாமென நாரைவா யினைப்புகன் றிடுவார்
மனையின் மாமகள் மருவிடச் செய்வ"லென் றிசைத்தான்;
புனையு மாண்பிலா தவர்மிகப் புலர்ந்தன ரம்மா. (3)

நகரிசோதனைக்குச் சென்ற வேந்தன் சத்திமுற்றப் புலவர் கூறிய உவமையைக் கேட்டு அவரை அரண்மனைக்கு அழைப்பித்தல்

ஒருதி னத்திரா வினிலர சுருவும்வா ளேந்தி
தெருவெ லாந்திரிந் தாங்குறு தேரரு குறலும்
பொருவில் நாரையொன் றரற்றியே வான்வழி போய
தருமை நாவல னதனடிக் கிடந்துபாட் டறைந்தான். (4)

நாரை யேயென விளித்ததன் வாய்பனங் கிழங்கின்
சீரை மேயதும் கால்சிவந் ததுஞ்சொலிச் சிறப்பித்
தூரை யுந்தனோர் மனைவிதன் துயரையு முறையுட்
கூரை சோர்ந்ததா தியமிடிப் பெருமையுங் கூறி. (5)

தான்கி டப்பதும் கைகொடு மெய்புதைத் ததுவும்
ஊன்கி ளர்ந்தவேல் மன்னன்முற் செலமுய லுழைப்பும்
தேன்கி ரித்தலை யிருல்சொரிந் தெனத்தகு தீஞ்சொல்
வேன்கிளத்திடப் பாடலொன் றிசைத்தனன் விரைந்தே. (6)

உடனவ் வேந்துறு முவகையெவ் வளவென்பே னோரேழ்
கடலு மேயிணை யாம்; அரண் மனையிடங் கதுவிப்
படரி லுத்தம னொருவன்பா லவ்வயிற் படுத்தாற்
சுடரு தித்தபின் அருமையாற் கொடுவரச் சொன்னான். (7)

புலவர் அரசனைக்கண்டு ஓர் பாடலைப் பாட, வேந்தன்
அரைப் பாட்டில் புலவரை நிறுத்தல்

விடியற் காண்டலும் வேந்தனுள் வியன்தமிழ்ப் புலவற்
கடிவ ணங்குத லின்றியே நயம்பகர்ந் தழைத்துக்
கடிகொள் வேம்பணி வான்மலர்க் கண்ணெதி ருய்த்தான்;
நெடிய மாலிவ னேயென நினைத்துடன் நிகழ்த்தும். (8)

"வெறும் புற்கைக்கலந் தஞ்சுகம் சோருமென் வீட்டோர்
எறும்புக் கார்பத மில்லைமன்னா"வென அரைப்பா
நறும்பொற் புச்சொலால் நவில்தலும் நிறுத்தின னிராசன்;
அறும்பட் சத்தனோ வென்னவை யுற்றன னவனே. (9)

அரசன் மேற்கொண்ட விளையாட்டு

அக்கு றிப்பறிந் தமரர்கோன் முடிவிழ வடர்த்தோன்
இக்கு றைக்கவி யுரைக்குநாள் பின்னுள தென்று
மிக்கு யர்ந்தவா டையும்பணி களும்புனை வித்துத்
தொக்கு றுஞ்சபை யிடையொரா தனத்துறச் சொல்லி (10)

மன்னன் மாயவன் வங்கிச மென்பது வயங்க
அன்ன வேதியக் குசேலனுக் கவன்செய்திட் டதுபோல்
இன்ன பாவல னறிவுறு திவன்மனை யாங்குத்
தன்ன ரண்மனைத் திருவொடு பொலிவுறச் சமைத்தான்.(11)

அனைய சீர்செயச் சென்றவன் வந்தபின் அந்தப்
புனையி ழைக்கலைக் கவினுறு புலவனை "நீநின்
மனையிற் சென்றுசின் னுள்வதிந் திவண்வரு"கென்றோர்
தினையொக் கும்பொனும் நல்கிடா தேசெல வுய்த்தான்.(12)

[அரசன் ஒன்றும் கொடாமைக்கு வருந்திப் புலவர் தம் ஊர் திரும்பினர்.]

தம் செல்வமேம்பாட்டைப் புலவர் காணல்

நகரிற் சென்றுதன் மனையொடு மனைவியை நாடி
நிகரில் செல்வமாங் கமைந்ததால் களியியல் நிறைந்து
தகர வார்குழ லாளிடம் நடந்தன சாற்றி
இகல்பொல் லார்களும் தொழும்படி யிரண்டொர்நா ளிருந்து.(13)

[பிறகு, 'வெறும் புற்கையும் அரிதாம்' என்று தாம் முன்பு தொடங்கிப் பாதியில் விட்டுவந்த பாட்டினை இனிதாக முடித்து வேந்தனுக்குத் தம் நன்றி யறிதலைத் தெரிவித்துவர எண்ணித் திரும்பவும் மதுரைவந்து சேர்ந்தார்.]

புலவர் தம் பாடலை முடித்தல்

"என்னி ருங்கலிக் குறும்பினை வேருட னீர்ந்து
நன்னி லைக்குடி தாங்குநின் நட்படைந் திட்ட
பின்னி கல்தெறும் பூட்கைமால் கரிபெருங் கவளம்
தின்னிற் சிற்சில தெவிட்டிய தே"யென முடித்தான். (14)

அரசனது பாராட்டும் இருவர்தம் மகிழ்ச்சியும்

பின்னும் சிற்சில பெருங்கவி யவன்மிசைப் பெய்தான்;
மன்உ வந்து"நின் கவியொன் றின் பெருமையை மதிக்கில்
என்னு டைச்சகா யம்பெரி தாங்கொலோ" வென்றான்;
என்நுவன்றிடப் பால! வாங்கிருவரும் மகிழ்ந்தார். (15)

—முருக தாஸர்.

௪. இனிய பகுதிகள்

1. கண்ணன் குழலூதும் சிறப்பு

குறித்தமுகில் பந்தரிட்டுக்
குறுந்துளிதூற் றிடவாயர்
தறித்தமர மத்தனையும்
தழைத்தலர்ந்து பழுத்துதவக்
கடும்புலிக ளயர்ந்துசித்ர
காயமெனும் பெயர்விளக்கக்
கொடும்பணிகள் மாலையவாய்க்
குலரத்ன விளக்கேற்றக்
கருங்கல்தான் வெண்ணெயெனக்
கரைந்தோட விரைந்தோடி
வருங்கற்றான் இமைப்பொழிய
மழவிடையங் கயர்ந்துநிற்ப
மிகவிளங்கோ வியரெழுத
வெள்கியத்ரி பங்கியுடன்
சுகவிளங்கோ வியர்மழலை
தொனித்தகுழல் இசைத்தோய்கேள்.

—அழகர் கலம்பகம்.

2. உதவா மலைகள்

குறத்தி சொல்லியது

தங்கமகா மேருவினில்
தண்குடிசை தொடுத்தோம்;
சாபமலை யென்றுரைத்தார்
தாபமொடு விடுத்தோம்;
சங்கரனார் கைலைமலை
தனிலுறையச் சென்றோம்;
தவப்பூத கணங்கள்கண்டோம்
சிவப்பிரீதி யென்றோம்;

திங்களணி காளத்தி
கண்டதனை நயந்தோம்;
திண்ணன்கண்ணைப் பறித்ததுமுன்
இன்னதென்றார், பயந்தோம்;
அங்குலவு குற்றால
மலையினுறப் போனோம்;
அருவியின்மூழ் கிடுவிரென்றார்;
நழுவிவர லானோம். (1)

ஏறிவட வேங்கடத்தில்
இருக்கவிடம் பார்த்தோம்;
இன்னதுமால் கொண்டமலை
என்றுரைத்தார் தீர்த்தோம்;
ஈறிலுயர் பழனிமலை
இனிதெனவே குறித்தோம்;
இடும்பன்மலை எனப்புகன்றார்,
திடங்கொளதை வெறுத்தோம்;

தூறுமுகில் சூழுமொரு
தூயமலை தொட்டோம்;
தூங்கல்மலை இங்கிதென்றார்,
ஆங்கதனை விட்டோம்;
கூறுபுகழ்ச் சேரலன்றன்
குவடணைந்தோம் அப்பால்;
கொல்லியிது என்றுரைத்தார்;
தள்ளிவந்தோம் இப்பால். (2)

—சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம்

3. குரங்கும் பலாப் பழமும்

ஒண்கதிர் பரப்பும் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்

புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலும் முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிரால்
தொடுத்தபொற் சுளைபல எடுத்துவாய் மடுப்பது
மானிட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரின் நிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கும் நறும்பணை மருதம்.

—திருவாரூர் நான்மணி மாலை

4. பனையின் சிறப்பு

அழகுற்றதொர் மதுரேசனை அமரேச னெனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்;
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகு மப்பா!
பழுதற்றதொர் சான்றாண்மை பயின்றார்தின முயன்றால்
பலமுண்டதன் நலமுண்டவர் அறிவார்பல கலைநூல்;
எழுதப்படும் ஏடுண்டது வீடுந்தர வற்றால்
எழுதாததொர் திருமந்திரம் இளம்பாளையு ளுண்டே.

—மதுரைக் கலம்பகம்.

5. மறம்

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்!
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்;

மற்றதுதான் திருமுகமே யானு லந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்றவிள வரசானல் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்பப் பேசு வாயே. (1)

வேறு

பேச வந்த தூதசெல் லரித்த வோலை செல்லுமோ?
பெருவ ரங்கள் அருள ரங்கர் பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள் பதிபுகுந்து பாரடா;
வாச லுக் கிடும்படல் கவித்து வந்த கவிகையே;
மகுட கோடி தினைய ளக்க வைத்த காலும் நாழியும்;
வீசு சாம ரங்குடில் தொடுத்த கற்றை; சுற்றிலும்
வேலி யிட்ட தவர்க ளிட்ட வில்லும் வாளும் வேலுமே(2)

—திருவரங்கக் கலம்பகம்.

6. கவிஞன் கர்வம்

வாழ்க்கை நதிக்கரையில்—நிதம்
வந்திடு காட்சிகளில்
வீழ்ச்சி யிலாத பல—இன்ப
விளைவினைக் கண்டிடுவோம். (1)

இன்ப நிகழ்ச்சிகளில்—நின்ற
இனிமை மணம் நுகர்வோம்;
துன்பக் கனவினிலும்—ஒரு
சோதியைக் கண்டுவப்போம். (2)

மலையை அளந்திடுவோம்;—அதன்
மாட்சி தெரித்துயர்வோம்;
அலையைப் பிளந்திடுவோம்;—கடல்
ஆழத்தைக் கண்டுரைப்போம். (3)

கற்பனை யாம்குதிரைக்—கொரு
கடிவாளம் இல்லை ; யது
வெற்பினி லேறிவரும் ;—அந்த
விண்ணினி லும்பறக்கும். (4)

உள்ளத் துள்ளே யொளித்த—இன்ப
உணர்ச்சியைக் காட்டிடுவோம் ;
பள்ளத்துள் ளேபுதைந்த—செல்வப்
பரப்பை எடுத்தளிப்போம். (5)

காதல் அழகை யெல்லாம்—உள்ளக்
காதுக் கினிதாகச்
சாதல் இலாதபடி—இசை
சாற்றிப் பொறித்திடுவோம். (6)

வீர விளையாட்டை—மனம்
வீறுகொண் டேதுடிக்கக்
காரத் தொடுங்குமுறும்—பல
கவிதை உரைத்திடுவோம். (7)

குனிந்து குனிந்துமனம்—மிகக்
கோழையா னோர்களையே
மூனைந்து நிமிர்ந்துநிற்க—எரி
மூட்டிக் கவிவளர்ப்போம். (8)

—ஜோதி.

ரு. தனிப் பாடல்

1. அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் சிறப்பு

இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தகம் ஏந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றுன் கனமுத் தமிழையுமே. (1)

—பரராச சிங்கம்.

பொங்குதமி ழயோத்தியில்வாழ் தசரதனென் போனிடத்தும்
பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவரிருவர்
தோன்றி னரால்
அங்கொருவன் ஒருகலைமா னெய்திடப்போய் வசைபெற்றுன்
அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமா னெய்திடப்போய்க் கவிதையினு
லிசைபெற் றுனே. (2)

—கந்தபுராணக் கச்சியப்பர்.

முன்னுட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான் மீகனும்உன்
முன்நில் லாமல்
தென்னுட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்தும்
சென்று சேர்ந்தார்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவிவீர
ராக வாநீ
பொன்னுட்டுப் புலவருடன் வாதுசெயப் போயினையோ
புகலு வாயே. (3)

—கயத்தாற்று மன்னன்.

2. வினுவுத்தரம்

'இரவல னேயுனக் கில்லாத
தென்ன இதயமென்ன
பரவுண வேது சுவையற்ற
தென்னசொற் பான்மையென்ன
தரவுரை செய்திட' வென்று
னதற்கொன் றும் சாற்றிலன்யான்
'வரதிரு வேங்கட ஞதா'வென்
றேன்பொன் வழங்கினனே. (4)

—இராமசந்திர கவிராயர்.

3. மன்னனது குருபக்தி

ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையில் தரித்த பிரானென்று நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மானெட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே.

—கூத்தரும் குலோத்துங்கனும்.

4. சோற்றைப் புகழ்ந்தது

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புள்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும். (6)

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டாள்
கடகஞ் செறிந்தகை யாள். (7)

—ஔவையார்.

வாரு மொத்தகுடி நீரு நாமுமக
தேவ னுறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான் ;
நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாகு மேகும் ; அவன் முன்றில் வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்குமுயர் வேம்பு நிற்கும்வளர்
பனையு நிற்கும்அதன் அருகிலே
அரசு நிற்கும்அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை யாளமே.” (11)

—கம்பர்.

9. நாரை விடு தூது

நாராய், நாராய், செங்கால் நாராய்,
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்,
நீயும்நின் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின் எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு,
“எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்” எனுமே. (12)

—சத்திமுற்றப் புலவர்.

5. புலவரின் நன்றியறிவு

ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா, கம்பன்
இறக்கும்போ தேனு மினி. (8)

—கம்பர்.

6. பொருத்தமற்ற பெயர்

அலையான் கவடுபடான் ஆருடனும் காயான்
இலையென்ப தோர்நாளு மில்லை;—கலைநேர்ந்த
சாலைமுத்து க்ருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல். (9)

—சவ்வாது புலவர்.

7. புகழ்ச்சியை இகழ்ச்சியாக்கியது

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக் கிடான்கவசம்—துன்றும்
வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று. (10)

—கூத்தரும் புகழேந்தியும்.

8. பாணாற்றுப் படை

"தேருளைப் புரவி வாரணத் தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்ன, நின்
தேய மேதுனது நாம மேதுபுகல்?"
"செங்கை யாழ்தடவு பாண, கேள்;

10. கம்பராமாயணச் சிறப்பு

அம்பிலே சிலையை நாட்டி
அமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானும்
தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல்
கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே
நரருக்கின் றமுத மீந்தான். (13)

வேறு

இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்குநீழ லிருந்தாலும்
செம்பொன்மேரு அனையபுயத்
திறல்சேரிராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற்போல்
கற்றோர்க்கிதயம் களியாதே. (14)

—இராமாயணம்: தனியன்கள்.

உரைநடைப் பகுதி

திருப்பாவை

1. முற்கால இந்தியா—கிராமம்

முற்கால இந்தியர் கோலிய கிராம அமைப்பு இன்னும் வீழ்ந்துபடவில்லை. ஆனல் அதன் ஆட்சிமுறை வீழ்ந்து பட்டது. முற்கால இந்தியரின் கிராம வாழ்க்கை, வாழையடி வாழையென நீண்டகாலம் வளர்ந்துவந்தது. மற இருள் சூழ்ந்துள்ள இக்காலத்திலும் பண்டைக் கிராம மணம் ஒரோ வழியாதல் கமழ்ந்து கொண்டிருக் கிறது. இதனல் அமைப்பின் பெற்றி இனிது விளங்குதல் காண்க.

முற்கால இந்தியர் கிராமத்தை அமைத்த திறம் வியக் கற்பாலது. அவ்வமைப்பு வகைகளை விரித்துக் கூறப் புகுந்தால் அவைகட்கு இடம் போதாது. முற்கால இந்தியர் வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றைப் பெரிதும் கிராமத்தி லேயே அமைத்துக்கொண்டனர். கிராமத்தின் ஒரு பகுதி, மக்கள் உறைதற்கென்று ஒதுக்கப்பட்டது. அப்பகுதியில் மக்கள் வீடு கட்டிக்கொள்வார்கள். வீடுகளிற் பெரும்பான் மையன ஓலைகளால் வேயப்பட்ட கூரை நிலையங்கள். கூரை நிலையங்கள் அடைப்புடையன வாயினும், அவை களில் ஒளியும் காற்றும் நன்கு உலவும். ஒவ்வொரு வீட் டின் புறக்கடையில் நெல்லி, அத்தி, விளா, முருங்கை, கிச்சிலி, நாரத்தை, எலுமிச்சை, வாழை, பலா, மா முதலிய மரங்கள் பொலிந்துகொண்டிருக்கும்; காய்கறிச் செடிகள் வைக்கப்பட்டிருக்கும். முன்புறத்தில் ஆல், அரசு, வேம்பு முதலிய மரங்கள் நிழல்செய்யும். தெருக்கள் அழகாக அமைக்கப்பட்டிருக்கும். முற்காலக் கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்தவர்க்கும் சொந்த வீடு உண்டு; குடிக்கூலி முறையே கிடையாது.

கிராம எல்லைப்புறங்களை மலையோ காடோ பொழிலோ ஆறோ அழகு செய்யும். கிராமத்தைச் சுற்றிலும் பெரிதும்

வயல்களே நிரம்பியிருக்கும். வெளியிடமும் மேட்டு நிலமும் விடப்பட்டிருக்கும். கேணி, குளம், ஏரி, வாய்க்கால் முதலியன தண்மை வழங்கும். கோயில், பள்ளி, சத்திரம், சாவடி முதலிய அறச்சாலைகளுண்டு. வெளிப்புறத்தில் சுடுகாடிருக்கும்.

கிராமத்தில் பலதிறத் தொழிலாளர் இருப்பர். அவர், ஆசிரியர், உழவர், நெய்வோர், பண்டமாற்றுவோர், இடையர், தச்சர், தட்டார், குயவர், வண்ணார், மருத்துவர், கணிதர், புலவர், பல்லியர், சிலம்பர், மல்லர் முதலியோர். இப்பெயர்கள் யாவும் முன்னாளில் தொழில் பற்றி வந்தன; பிறப்பையொட்டி வந்தனவல்ல; பின்னாளில் பிறப்பையொட்டி ஆளப்பட்டன.

ஒரு கிராமத்தில் விளையாத பொருள்கள் மற்றக் கிராமங்களினின்றும் பண்டமாற்று முறையில் தருவிக்கப்படும். பண்ட மாற்றுவோர் பல கிராமஞ் சுற்றி வருவர். நன்னாட்களில் கிராமத்தார் வேலை செய்யார். அந்நாட்களில் வீடுகள் அணி செய்யப்படும்; விழாக்கள் நிகழ்த்தப்படும்; ஊர்வலமும், ஆடல்பாடலும், இன்ன பிறவும் கிராமத்தைத் தெய்வலோக மாக்கும்.

கிராமக் காரியங்களைக் கவனிப்பதற்கென்று ஒருசபை அமைக்கப்பட்டிருக்கும். அதன்கண் பெரிதும் அறவோர் அமர்ந்து வினையாற்றுவர். அச்சபைக்கு அடங்கிய காவலன், வெட்டியான், தலையாரி முதலியோரிருப்பர். சபை மரத்தடியில் கூடுவது வழக்கம். சிலவிடங்களில் தேர்தல் வாயிலாகவும் சபை அமைக்கப்படும்.

இன்னும் பழைய கிராமச் சிறப்புக்களைப் பலபடக் கூறிச் செல்லவேண்டுவதில்லை. அவைகளுள் ஒன்றைமட்டும் ஈண்டுச் சிறப்பாக வலியுறுத்த விரும்புகிறேன். அது கிராமம் கிராமத்தார் சொத்தாகவே பாவிக்கப்பட்டதென்

பது. கிராமம் கிராமத்தாரின் பொதுவுடைமையாக இருந்தது. அவ்வத் தொழிலாளர் தத்தம் தொழிலைக் குறைவறச் செய்து கிராமத்தை நன்முறையில் ஓம்புவர். கிராமத்தா ரனைவரும் ஒரு மனிதரைப்போலக் கடனாற்றுவர் என்று சுருங்கச் சொல்லலாம்.

பொது வேலைகட்கென்று கூலியாள் அமைக்கும் முறையே அந்நாளில் கிடையாது. பொது வேலைகளை எவ்வித ஊதியமுமின்றிக் கிராமத்தாரே செய்வர். காடளிக்கும் பொருளெல்லாம் பொதுமையிலேயே பயன்பட்டு வந்தன. கால்நடைகள் காடுகளில் மேய்ந்துவரும். எவ்விதக்கட்டுப்பாடுங் கிடையாது. **கூடிவாழும் அறமே கிராமமாகக் காட்சி அளித்தது.**

பொதுமை அறவின்பத்தை நுகர்ந்துவந்த மக்களிடை எத்தகை வாழ்க்கை மணங் கமழ்ந்திருக்கும்? அவர்களிடை அன்பு மணங் கமழ்ந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? உண்மையும், நிறையும், ஒப்புரவும் மக்கள் வாழ்க்கையின் பயனாக விளைந்துவந்தன.

பிற நாட்டினின்றும் நமது நாடு போந்து நாட்டைப் பார்வையிட்ட மெகஸ்தினஸ் முதலியோர் பண்டை இந்தியக் கிராமங்களைப்பற்றிச் சில குறிப்புக்கள் வரைந்துள்ளனர். அன்னார், 'ஒவ்வோர் இந்தியக் கிராமமும் ஒவ்வொரு சிறிய சுதந்திரக் குடியரசா யிருக்கிறது' என்றும், 'கிராம மக்கள் உண்மைக்கும் ஒழுக்கத்துக்கும் உறையுளாக விளங்குகிறார்கள்' என்றும் பொறித்த குறிப்புக்களை இக்காலத்தவர் கண்கொண்டு பார்ப்பாராக.

முற்கால இந்தியர் தங்கிராம மென்னும் அன்பு நிலையத்துக்குக் கொண்ட அறக்கால் எளிதில் அசைவுறுவதன்று. எத்துணையோ புயல்கள் அதன்மீது வீசின; அஃது அசையவில்லை. இன்னும் அக்கால் அசைவுபடாமலே இருக்கிறது.

இந்தியாவின்மேல் பலர் படையெடுத்தனர். அவருள் கொலைஞரும் கொள்ளையரும் இருந்தனர். கொலை கொள்ளைப் படைகள் கிராமங்கள் வழியே செல்ல நேர்ந்தபோதெல்லாம் அப்படைகட்குக் கிராமங்கள் இரையாகவில்லை. படைகளின் ஆரவாரம் கிராமங்கட்கு எட்டியபோதே மக்கள் கட்டாகக் கிராமங்களை விடுத்து விலகி நீண்டதூரம் போய்விடுவார்கள். கொடிய படைகள் நீங்கிய பின்னர் மக்கள் தம்தம் கிராமம் போதருவார்கள். படைகள் கொலை புரிதற்கு மக்கள் அகப்படுவதில்லை; கொள்ளையிடுதற்குப் பொன் பொருள் கிடைப்பதில்லை. கிராமச் செல்வங்களாகிய மலைகளையும், ஆறுகளையும். நிலபுலங்களையும் எப்படைகளால் என்ன செய்தல் முடியும்? சோலைகளும், கூரை வீடுகளும், சட்டி பானைகளும் படைகளால் அழிக்கப்படலாம். அவைகள் மீண்டும் எளிதில் அமைக்கப்படலா மல்லவோ? கிராமங்களின் எளிய இயற்கைப் பொதுமை அறவாழ்வைச் சிதைத்தல் எவராலும் இயலாது. முற்கால இந்தியர் கொண்ட கிராமக் கால் உரமானது; மிக உரமானது.

2. கம்பரைப் பற்றிய பழமொழிகள்

ஒரு நாட்டின் இலக்கிய வரலாற்றில் பழமொழிக்குத் தனி இடம் உண்டு. தமிழிலோ தொல்காப்பியரே 'முது சொல்' என அதைக்கூறி அதைத் தனியே ஓர் இலக்கிய வகையாக்கினர். ஜனங்களின் உள்ளத்தே காலப்போக்கிலே உண்டாகும் நிகழ்ச்சிகள் ஊறிஊறிப் பழமொழிகள் பிறக்கின்றன. அவற்றில் சரித்திரம் இருக்கும்; கவிதை நயம் உண்டு; கலைத்திறம் உண்டு; சிறந்த வேதாந்த உண்மைகளும் காணலாம்.

தமிழர் பழமொழிகளைத் தனியே போற்றி வந்ததோடு தமிழ்ப் பாடல்களிலும் பதித்து அழகு செய்தனர். சங்ககாலத்து நூல் வரிசையாகிய பதினெண் கீழ்க்கணக்கில் "பழமொழி" என்றே ஒரு நூல் இருக்கின்றது. அதில் நானூறு பழமொழிகள் நானூறு வெண்பாக்களில் பதித்து வைக்கப்பட்டுள்ளன. பிற்காலத்திலும் 'தண்டலையார் சதகம்' என்ற நூலில் செய்யுள்தோறும் பழமொழியைக் காணலாம். அதற்குப் பழமொழி விளக்க மென்று ஒரு பெயரும் உண்டு. கோவிந்த சதகம், இரத்தின சபாபதி மாலை முதலிய சிறு நூல்களில் பழமொழிகள் பல அமைந்துள்ளன.

பழமொழிகள் உயிருள்ள இலக்கியம்; தமிழ் நாட்டார் அனைவரது மனத்திலும் பட்டு ஊன்றிய செய்தி பழமொழியாகப் பரிணமிக்கிறது.

கம்பர் தமிழ் நாட்டுப் பெரும் புலவர். அவருடைய புகழ் தமிழ் நாட்டிற் பரவி நிலைத்து விட்டது. அவரைப் பற்றிய செய்திகள் சில பழமொழியாயின.

இலக்கண நூலுரைகளிற் கம்பரைப் பற்றி ஒரு பழைய வாக்கியம் உதாரணமாகக் காணப்படுகின்றது.

"கல்வியிற் பெரியன் கம்பன்" என்பது அது. கம்பர் பல நூல்களைப் படித்தவர்; கல்விக்கு உரையாணியாக இருந்த வர், என்ற ஞாபகம் தமிழர்களுக்கு இருந்துவந்த தென் பதை அப் பழமொழியால் உணரலாம்.

"மும்மைத் தமிழுணர்ந்த முதியோரு மற்றுளோரும், முரலாற்றுங் கடற்பாரிற் "கம்ப சூத்திர முது சொன் மொழிப" என்பது ஒரு பாட்டு. இதில் 'கம்ப சூத்திரம்' என்னும் முது சொல்லை முதியோரும் மற்றோரும் கூறுவரென்ற செய்தி காணப்படுகின்றது. சூத்திரமென்பது சில எழுத்துக்களால் பல்வகைப் பொருள்களைச் செறித்து நுட்பமாகக் கண் ணுடியைப் போல் காட்டவல்லதென்று இலக்கணநூல் கூறும். கம்பரும் தமது விரிந்த மனோபாவத்தைச் சுருங்கிய உருவத்திலே அமைப்பவர். ஆயுந் தொறும் தொறும் அப் பொருள் விரிந்துகொண்டே போகும்.

"கம்ப சித்திரம்" என்பது ஒரு பழைய வழக்கு. கண் ணினுற் காணும் பொருளை ஓவியப் புலவன் தீட்டுவது போலக் கருத்தினுற் காணும் பொருளைக் காவியப் புலவன் தீட்டுகிறுன். தனது இராமாயணப் பெருங் காவியத்திலே கம்பன் அமைத்துள்ள 'உயிரோவியங்'களுக்குக் கணக்கு வழக்கே இல்லை.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது ஒரு பழமொழி. மனிதனுக்கும் மரத்திற்கும் எவ்வளவோ வித் தியாசம். இலக்கணம் மனிதனை ஆறறிவுடையவனென் றும் மரத்தை ஓரறிவுடைய தென்றும் கணக்குச் சொல் கிறது. அந்த மரங்கூடத் தன் ஓரறிவையும் பசுமையை யும் இழந்து விட்டால் வெறுங்கட்டையாகி விடுகிறது. அதிலே ஜீவனில்லை, வளர்ச்சியில்லை. அந்தக் கட்டைக் கும் கவியின் அம்சம் வந்து விடுகிறதாம்! இரும்பிலே மின் சாரம் பாய்ந்ததுபோலக் கட்டையிலே கவித்துவம் பாய்கிற தாம். பழமொழியின் வார்த்தைகளுக்கு அப்படியப்படியே

பொருள் கொள்வது அபாயம். கம்பர் இருந்த இடமுழுவதும் கவிதையாகிய மின்சாரம் பாய்ந்திருக்குமென்பதே கருத்து. அவர் வீட்டு வேலைக்காரி கூடப் பாடியிருக்கிருள்.

'**கம்பர் போன வழி**' என்பது ஓர் அழகிய பழமொழி. அதற்கு இரண்டு வகையாகப் பொருள் சொல்வார்கள்; கம்பர் கவிச் சக்கரவர்த்தி. அவர் வகுத்த நெறி தமிழர்களுக்குச் சிறந்த சட்டம். இலக்கணத்துக்கு அவர் கட்டுப் பட்டவர் அல்லர். அவர் செல்லும் மார்க்கமே இலக்கணமாகிவிடும். 'கம்பர் போன வழி' என்ற இப் பழமொழி அவரது தனித்தலைமையைக் காட்டுகின்றது.

மற்ருெரு வகையாக இப் பழமொழிக்குப் பொருள் கூறுவதுண்டு; அந்தக் காலத்தில் கம்பர் எங்கே சென்ருலும் அவரோடு நூற்றுக் கணக்கான மனிதர்கள் கூடியிருப்பார்களாம். அவருடைய தரிசனத்திற்காகவும், அவர் பேச்சைக் கேட்பதற்காகவும் எவ்வளவோ பேர் ஆவலாக வந்து கூடுவார்கள். ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்கு அவர் செல்லும்போது ஒரு பெரிய கூட்டம் அவரைத் தொடருமாம். அந்தக் காலத்தில் அழகிய பாதைகள் இல்லை. அந்தக் கூட்டம் செல்லும்போது வழியிலுள்ள விளை நிலங்களிலுள்ள பயிர்களை மிதித்துக் கொண்டு செல்ல நேரும். அதனுல் அந்த நிலங்களையுடையவர்களுக்குச் சிறிது நஷ்டம் உண்டாகும். வழக்கப்படி அவர்கள் நிலத்திற்குரிய வரியை வாங்கும் அதிகாரிகள் கம்பர் போனவழியில் இருந்த நிலங்களில் உண்டான நஷ்டத்தை அறிந்து அதற்குரிய வரியின் பங்கைக் கழித்து விடுவார்களாம். கணக்கில் 'கம்பர் போன வழி கண்டு கழித்தது' என்று எழுதி விடுவார்களாம். தமிழ் நாட்டாருக்குக் கம்பரிடத்திருந்த பித்து இதனுல் வெளியாகிறது.

'**தமிழுக்குக் கதி இருவர்**' என்று சிலர் கூறுவர். தமிழ்ப் பாஷையின் பெருமைக்கு முக்கிய காரணமானவர்கள் இரு

வரென்பது அவர்களுடைய கருத்து. அவ்விருவருடைய பெயர்களின் முதலெழுத்தும் கநீ என்பதில் உள்ளன. கம்பர், திருவள்ளுவர் என்னும் இருவருமே அங்ஙனம் பாராட்டப் பெறுபவர். பாரதியாரும்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை
உண்மைவெறும் புகழ்ச்சியில்லை"

என்று தாம் கூறும் மூன்று புலவர்களில் முதல் இரண்டு ஸ்தானத்தை இவர்களுக்குத்தானே கொடுக்கிறார்!

3. கபட சந்நியாசி

ஒரு சிறிய ஊரிலே ஒரு பெரிய வீட்டுக்கு ஒரு பாலிய சந்நியாசி வந்தான். அவனைக்கண்ட அந்த வீட்டு எசமானி எழுந்து நின்று அஞ்சலி செய்து, 'சுவாமிகள் இங்கே வந்தது என் பாக்கியம்' என்று உபசார வார்த்தை கூறி வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்று ஆசனமிட்டு இருக்கச் செய்து, 'சுவாமிகள் இங்கே வந்து நெடுங்காலமாய் விட்டதே. எங்கே போயிருந்தீர்கள்?' என்றாள்.

சந்நியாசி, 'நான் பல தேச யாத்திரை செய்து வந்தேன். முன் நான் இந்தப் பிராந்தியத்தில் தங்கியிருந்தபோது, மழைக்காலமா யிருந்தது. இப்போது வசந்தகாலமா யிருக்கிறது. இந்தப் பிரதேசம், அப்போது போலில்லாமல் இப்போது சுவர்க்கம்போ லிருக்கிறது' என்றான். அங்கே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை 'சுவர்க்கம்' என்றதைக் கேட்டவுடன் 'சாமி, நீ சொர்க்கம் பார்த்தையா? அது எப்படி இருக்கும்?' என்றது.

சந்நியாசி :—ஆ! அது மிக அழகாயிருக்கும். அங்கே எல்லாரும் சந்தோஷமா யிருக்கிறார்கள். அவர்களில் நமக்குத் தெரிந்தவர்களும் சிலர் இருக்கிறார்கள்.

குழந்தை :—அப்படியா! அங்கே என் அக்காளைப் பார்த்தையா?

சந்நியாசி :—ஆம், பார்த்தேன்; அவள்மட்டும் சந்தோஷமாயில்லை.

குழந்தை :—ஏன் சந்தோஷமா யில்லை யென்று கேட்டையா?

சந்நியாசி :—கேளாதிருப்பேனா? கேட்டேன். அவள் 'என்னையொத்த பெண்களெல்லாம் பட்டுச் சேலைகளும்,

இரத்தினுபரணங்களும் அணிந்திருக்கிருர்கள். நான்மட்டும் நகை யொன்று மில்லாமல் இந்தச் சாதாரணமான சேலை யோடிருக்கிறேன். அப்படி இருக்கும்போது எப்படிச் சந்தோஷமா யிருப்பேன். என் தாய், நான் நோயாய்க் கிடந்தபோது, என் மெலிந்த உடம்பில் அழுந்தி நோய் செய்யுமென்று என் நகைகளையும் நோய்பட்ட தேகக் கழிவுகள் பட்டு அசுத்தமாய்விடு மென்று என் பட்டுச் சேலையையும் களைந்து வைத்தாள். நான் நோயாய்க் கிடந்தபோது உடுத்திருந்த சேலைதான் இது. என் தாய் என் நகைகளையும் சேலைகளையும் அனுப்புவாளென் றிருந் தேன். அவள் பேராசைக்காரி; இன்னும் அனுப்பவில்லை' என்று வருத்தப்பட்டாள்.

குழந்தை:—ஐயோ! அக்காள் வருத்தப்படுகிருளாமே; அம்மா! அக்காள் நகைகளையும், சேலைகளையும்-அவளுக்கு அனுப்பிவிடு.

எசமானி:—சாமி, நீங்கள் விளையாட்டாகக் குழந்தை யோடு பேசுகிறீர்களா? உண்மையாகவே என் மகளைப் பார்த்தீர்களா?

சந்நியாசி:—உண்மையாகவே பார்த்தேன்; அவளை நான் இங்கே பல தடவை பார்த்தபோது இருந்தபடி அவள் சந்தோஷமா யில்லை.

எசமானி:—அவள் தங்களிடம் ஏதேனும் சொன்னுளா?

சந்நியாசி:—'நீங்கள் என் தாயிடம் என் சேலைகளையும் நகைகளையும் வாங்கிவந்து கொடுப்பீர்களானுல், உங்களுக் குக் கோடி புண்ணியம். அவைகளில்லாமலிருந்தால் இங்கே ஒருவரும் என்னை மதிக்கிருர்களில்லை. எனக்கு நாணமா யிருக்கிறது' என்ருள்.

எசமானி:—(கண்களில் நீர் ததும்பப் பெருமூச்சுடன்) அவள் எங்கே யிருந்தாலும் சந்தோஷமா யிருக்கவேண்டு

மென்பதுதான் என் பிரார்த்தனை. சுவாமிகளே, கிருபை செய்து, நான் கொடுப்பவைகளை அவளிடம் கொண்டு போய்ச் சேர்ப்பீர்களா?

சந்நியாசி :—சுவர்க்கலோக முழுதும் சுற்றிப் பார்த்து விட்டேன். இனி அங்கே போகவேண்டியதில்லை. ஆயினும் தங்கள் சொல்லைத் தட்ட மனமில்லாததாலும் தங்கள் மகளைச் சந்தோஷம் அடையச் செய்ய வேண்டு மென்ற விருப்பம் இருப்பதாலும் உங்கள் கருத்துப்படி செய்வேன்.

இதைக்கேட்ட எசமானி, இறந்துபோன மகளின் நகைகள் சேலைகள் அடங்கிய பொக்கணத்தை எடுத்துக் கொண்டு வந்து, 'சீக்கிரம் போய் அவளிடம் கொடுங்கள்' என்று கொடுக்க, வாங்கிக்கொண்டு சந்நியாசி புறப்பட்டுப் போனான்.

அவன் போனவுடனே குதிரையேறி வெளியே போயிருந்த எசமானன் திரும்பி வந்தான். அவனிடம் எசமானி அப்போது அங்கே நடந்ததைச் சொன்னாள். அவன், மோசம் நேர்ந்ததென்று தெரிந்து, சந்நியாசி எந்த வழியே போனானென்று கேட்டான். குழந்தை, 'இதோ, இந்த வழியேதான் சொர்க்கத்துக்குப்போனான்' என்று கையை நீட்டிக் காட்டியது.

எசமானன், உடனே வாசலில் நிறுத்தியிருந்த குதிரை மேலேறி விரைந்துபோனான். குதிரைக் காலடிச் சத்தம் கேட்ட சந்நியாசி திரும்பிப் பார்த்துத் தன்னைத் தொடர்ந்து வருபவன் தன்னைப் பிடிக்க வருகிறானென்று தெரிந்து ஓடலானான். குதிரை கிட்ட வந்துவிடவே, ஒரு மரத்தி லேறினான். குதிரையிலிருந்திறங்கி எசமானனும் மர மேறிச் சந்நியாசி யிருந்த கிளைக்குப்போக, அவன் அதன் நுனிக்குப்போய் அதைப் பிடித்துக்கொண்டு தொங்கி, கீழே குதித்துக் குதிரை மேலேறி வேகமாக ஓட்டலானான். எச

மானன், 'அம்மை சேலை நகை கொடுத்தாள். அப்பன் குதிரை கொடுத்தான்!' என்று சொல்லென்று ஒத்துச் சொல்லச் சந்நியாசி, 'சொல்லுவேன், சொல்லுவேன்' என்று சத்தமிட்டுச் சொல்லிக்கொண்டு தப்பிப்போனான்.

எசமானன், 'அணிலேறவிட்ட நாய்போல' ஏமாறித் தலை கவிழ்ந்து நடந்து வரக்கண்ட குழந்தை, 'குதிரை எங்கே?' என, 'உன் அக்காளுக்கு உன் அம்மை சேலை நகை அனுப்பினாள்; நான் குதிரை அனுப்பினேன்' என்றான்.

குழந்தை, 'நானும் சொர்க்கம் போகவேணும்; போனால், எனக்கும் எல்லாம் அனுப்புவீர்கள்' என்றது.

4. ஆடும் இலக்கியமும்

ஆட்டின் இயல்புகளைக் குறித்து நம் முன்னோர்கள் பல படியாக ஆராய்ந்து தம் நூல்களில் குறித்துள்ளார்கள். ஆட்டைப்பற்றி மட்டுமல்ல; பல விலங்குகளைப்பற்றியும், பறவைகளைப்பற்றியும், பிற பிராணிகளைப்பற்றியும் அங்கங்கே குறித்திருக்கிறார்கள். நாம் சிரமப்பட்டுப் பொறுமையுடன் அவற்றையெல்லாம் துருவித் தேடிப் பிராணி சாஸ்திரிகளின் ஆராய்ச்சி முடிபுகளைக்கொண்டு ஒப்பு நோக்கினால், தமிழ் மொழியில் ஒரு விலங்கு நூலையோ, பறவை நூலையோ மிக அழகாக எழுதிவிடலாகும். உதாரணமாக இங்கே ஆட்டைப்பற்றி எழுதுகிறேன்.

'**அஜகஜாந்தரம்**' என்பது ஒரு வழக்கு. இரண்டு மனிதருக்குள் பேதத்தைப் புலப்படுத்தும்போது, 'அவனுக்கும் இவனுக்கும் அஜகஜாந்தரம்' என்கின்றோம். அஜம் என்பது ஆடு; கஜம் என்பது யானை. அஜத்தையும் கஜத்தையும் முறையே சிறுமைக்கும் பெருமைக்கும் எல்லையாக வைத்துப் பலர் இத்தொடரை எடுத்தாளுகிறார்கள். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இத்தொடருக்கு வேறு வகையில் பொருள் காண்கிறார். கரும்புத் தோட்டத்திற் புகுந்த யானை, இரசமுள்ள கரும்பையே விரும்புகின்றது; அத்தோட்டத்தில் நுழைந்த ஆடோவென்றால் சாரமற்ற கருப்பந்தோகையையே கறிக்கின்றது. 'அவனுக்கும் இவனுக்கும் அஜகஜாந்தரம்' என்றால் அவ்விருவரில் ஒருவன் சாரமுள்ள விஷயங்களைக் கிரகிப்பவன் என்றும், மற்றவன் சாரமற்ற விஷயங்களையே கிரகிப்பவனென்றும் பொருள்கொள்ள வேண்டுமென்பது சிவப்பிரகாசரின் கருத்து. யானை, ஆடு இவற்றின் இயல்புகளை நன்கு அறிந்து இந்தப் புலவர் மேற்கூறிய பொருளைக் கொண்டுள்ளார்.

கற்பிக்கும் விஷயங்களை எளிதில் மனத்திற் கொள்ளாதவனை இகழ்ச்சியாக 'ஆட்டு மூளை யுடையவன்' என்பது மற்றொரு வழக்கு. ஆட்டுமூளை அவ்வளவு மந்தமானதா என்ன ? ஒருவர் சென்ற வழியையே கண்மூடிகளாகப் பலர் பின்பற்றிச் சென்றால் அவர்களையெல்லாம் சிலர் 'ஆடுகள்' என்று பரிகசிக்கின்றனர். கடை மாணுக்கரை 'ஆட்டைப் போன்றவர்கள்' என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஓரிடத்தில் வேண்டிய அளவு புல் முளைத்திருந்தாலும் ஆடு அவ்விடத்தில் வாயை வைத்துச் சிறிது கறித்த பிறகு வேறோரிடத்தை நாடிச் செல்லும். அங்கேயும் தங்கி முற்ற மேயாமல் பிறிதோரிடத்தைத் தேடிச் செல்லும். அதுபோல் கடைமாணுக்கர் நல்லாசிரியரைத் தலைப்பட்டும், அவரிடம் பல நாளிருந்து கல்வி பயிலாமல் சின்னாளில் நீங்கி வேறோர் ஆசிரியரைத் தேடிச் செல்வார்கள். மேய்ச்சலால் ஆட்டின் வயிறும் நிறையும்பாடில்லை: இம்மாணவர்களின் கல்வியும் இச்செயலால் முற்றுப்பெறுவதில்லை. இந்த உவமையைப் பலர் அடிக்கடி எடுத்தாண்டபோதிலும் அவர்களுள் சிலராவது 'ஆட்டிற்கு இந்த இயல்பு இருப்பது ஏன்?'என்று தெரிந்துகொண்டதாகக் காணேன்.

இக்காலத்தில் ஆடு வீட்டில் வளர்க்கப்படும் பிராணியாக மாறிவிட்டது; பல்லாயிர வருடங்களுக்குமுன் அது மலைப்பிரதேசத்தில் வாழ்ந்துவந்த மிருகமாகும். எந்தப் பிராணியினிடத்திலும் பரம்பரைக் குணங்கள் அமைந்திருத்தல் இயல்பு. தற்காலப் பிராணிகளுக்கு அவற்றுள் சில பரம்பரைக் குணங்கள் அநாவசியமாக இருந்தாலும் அவற்றினிடம் அவ்வியல்புகள் அமைந்திருக்கின்றன. மலையில் தம் இஷ்டம்போல் வாழ்ந்துவந்த ஆடுகளுக்குச் சில இயல்புகள் அவசியமாக வேண்டியிருந்தன. இக்காலத்தில் நம் பட்டி ஆடுகளுக்கு அவ்வியல்புகளிற் பல வேண்டியதில்லை என்றாலும், அமைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் ஆராய்வோம்.

மலைகளின்மேல் சுற்றித் திரியும் விலங்குகளுக்குக் குளம்புகள் கூர்மையானவைகளாகவும் பிளவுபட்டனவாகவும் இருக்கும். இந்த வசதியினால், பிற பிராணிகள் ஏற முடியாத செங்குத்தான பாறைகள்மேலும் இவ்விதப் பிராணிகள் ஏறிவிடும். ஆபத்துநேரும்போது தற்காப்புக்காக இவை மலைப்பிரதேசங்களில் செங்குத்தான இடங்களைத் தேடி ஓடும். பிற பகைவிலங்குகள் அவற்றைப் பற்றிக்கொள்ள அந்த இடத்திற்குச் செல்வது இயலாத காரியமாகும். நம் பட்டி ஆடுகளிடம் இக்குணம் அமைந்திருக்கிறது. இப்பொழுது நீங்கள் ஓர் ஆட்டை வெருட்டிப் பாருங்கள். அது மேட்டுப் பிரதேசத்தை நாடித் தப்பித்துக்கொள்ள முயலும். ஒரு குட்டிச்சுவரின் அருகில் சில ஆடுகள் நிற்பதைக் கண்டு நான் அவைகளை வெருட்டினேன். பல ஆடுகள் சுவரின்மேல் ஏறிக்கொண்டதைக் கண்டேன். வீட்டில் வளரும் ஆடுகளுக்கு இது பரம்பரைக் குணம் என்று நாம் உணரவேண்டும்.

ஆட்டிற்குக் கடவுள் பலமான குரலை அமைத்திருக்கிறார். மலைப்பிரதேசத்தில் அவை மேயும்போது புதர்கள், பாறைகள் முதலியன ஆடுகளில் ஒன்றை மற்றொன்று பாராமல் மறைத்துவிடுவது இயல்பு. ஆகையால் ஆடுகள் ஒன்றை ஒன்று அறிந்துகொண்டு ஒன்றுசேருவதற்குப் பலமான குரலோசை அவசியமல்லவா? கிளிகளும் கூட்டங் கூட்டமாக வாழ்பவை. பச்சைக்கிளிகள் இலைகள் நிறைந்த மரங்களில் வாழுங்காலையில் ஒன்றன் இருப்பிடம் மற்றொன்றுக்குத் தெரியாது. குரலைக்கொண்டு தான் அவை ஓரிடத்தில் கூடும். அதற்காகவே கிளிகளுக்கும் பெருங்குரல் அமைந்திருக்கின்றது.

தாயின் குரலோசையைக் கேட்டு ஆட்டுக்குட்டி அதனிடம் வருகிறது. அது குட்டியை அதன் குரலால் அறிந்து கொள்ளாமல் மோப்பத்தினாலேயே அறிந்து கொள்ளுகின்றது. ஒரு குட்டியை அதன் தாயிடம்கொண்டு

விடாமல் வேறு ஆட்டினிடம் விட்டால், அது முதலில் அந்தக் குட்டியை மோந்து பார்க்கின்றது. தன் குட்டியல்ல வென்பதை உணர்ந்துகொண்டதும் அதனை இடித்துத் தள்ளிவிடுகின்றது. மாட்டினிடமும் இத்தகைய குணம் இருக்கிறது. தன் கன்று அணுகும்போதும் தாய்ப் பசு முதலில் அதனை மோந்து பார்த்த பிறகே பால் கொடுக்க இசைகின்றது.

ஆடுகள் மேய்ச்சலுக்குப் புறப்படுங்காலையில் பலத்திலும் அநுபவத்திலும் முதிர்ந்த ஓராடு முன்னால் வழி காட்டிச் செல்லும்; மற்ற ஆடுகள், கட்டளைக்கு இராணுவம் கீழ்ப்படிவதுபோல், ஒழுங்கு தவறாமல் அதனைப் பின்பற்றிச் செல்லும். யானைகளும் இந்த முறையைக் கைக்கொள்ளுமாம். முதலில் செல்லும் யானையை நூல்கள் **யூதநாதன்** என்று குறிக்கின்றன. மலைப்பிரதேசங்களில் மேடுகளும் பள்ளங்களும் வழியில் தடையாகப் புலப்படுவது இயல்பன்றோ? அதனால் முன்னால் செல்லும் ஆடு ஜாக்கிரதையாக வழிகாட்டிச் செல்லவேண்டுமல்லவா? முதலில் செல்லும் ஆடு ஓரிடத்தைத் தாண்டிச் சென்றால் மற்றவையும் அந்த இடத்தைத் தாண்டியே செல்லும். முன் சென்ற ஆடு காரணமின்றித் தாண்டியிராது என்பது பின் தொடர்பவைகளின் கருத்து. ஓராட்டு மந்தை செல்லும் வழியில் முதலாட்டின்முன் ஒரு மூங்கிலைத் தடையாக நிறுத்துங்கள். அஃது அதனைத் தாண்டிச்செல்லும். இரண்டொன்று அவ்வாறு தாண்டிச் சென்றபின் மூங்கிலை எடுத்துவிடுங்கள். எடுத்துவிட்ட பிறகும் அந்த இடத்தை மற்ற ஆடுகளும் தாண்டிச் செல்வதைக் காண்பீர்கள். இது பரம்பரைக் குணம் என்று உணரல்வேண்டும்.

மலைகளில் புல்லும் தழைப்புதர்களும் இங்கும் அங்குமாகவே இருக்குமாகையால் மலையாடுகள் ஓரிடத்திலேயே இருந்து வயிறார மேயாமல் இங்கு மங்கும் திரிந்து

மேயும் வழக்கத்தை இக்காலத்து ஆடுகளும் தம் முன் சந்ததியினிடமிருந்து பெற்றிருக்கின்றன.

கூட்டம் கூட்டமாகக் கூடி வாழும் பிராணிகள் சிதறிக் கிடக்கும் சமயத்தில் அவற்றில் சிலவற்றிற்கு ஆபத்து நேரிடுவதாக வைத்துக்கொள்ளுவோம். அவ்வித ஆபத்துக் காலத்தில் சிதறிக் கிடக்கும் எல்லாப் பிராணி களும் ஓரிடத்தில் வந்து சந்தித்த பிறகே தப்பிச் செல்ல முயலும். இச்சந்தர்ப்பங்களில் அபாயம் தோன்றிய இடத்துக்கே எல்லாப் பிராணிகளும் சென்று தீமைக்கு உள்ளாவதும் உண்டு. இந்த இயல்பு ஆடுகளிடம் சர்வ சாதாரணமாக அமைந்துள்ளது.

செம்மறியாடுகளின் கொம்புகள் திருகலாக அதன் இருபுறங்களிலும் உடலை நோக்கி வளைந்து சுருள்போல் அமைந்திருக்கின்றன. கொம்பு உள்பட தலையின் அகலத் தைக் கணக்கெடுக்குங்கால், மொத்த அகலம் உடலின் எந்தப் பாகத்தின் அகலத்தைக் காட்டிலும் சிறிதளவு அதிகமாகவே இருக்கும். பூனைக்கும் எலிக்கும் மீசை மயிர் எப்படி உதவி செய்கின்றது? இடுக்கான வழிகளில் அவை செல்லும்போது மீசை மயிர் தடையுண்டால், அவ்வழியாக அதற்குமேல் தம்மாற் செல்ல முடியாதென்று பூனையும் எலியும் பின் தங்கிவிடும். அவ்வாறு செம்மறியாடு தன் கொம்புகளோடு தலையை நுழைக்க முடியாத பாறை, புதர் இடுக்குக்களில் செல்லாது. செம்மறியாட்டிற்குக் கொம்பு உடலை நோக்கி உட்புறம் சுருண்டிராவிட்டால் மலைப்புதர் களிற் செல்லும்போது கொம்புகள் கொடிகளிற் சிக்குண்டு ஆடு வருந்தவேண்டி வருமல்லவா!

அந்தக் கொம்புகளின் தட்டையான அகன்ற பாகம் வெளிப்புறம் தெரியுமாறு அமைந்திருப்பதை நாம் பார்க்க லாம். இது தற்காப்புக்காக. ஆடு தன் தலையால், கொம்பு களின் பலத்தைக் கொண்டு, பிற பிராணிகளுடன் போரா டும் இயல்புடையது. அதனால் முட்டப்படும் பிராணிக்கு

அடி பலமாகப் படுவதற்காகவே கொம்பின் தட்டையான பாகம் வெளிப்புறமாக அமைந்திருக்கின்றது. வீரங்காட்டிப் போர்செய்வதில் ஆட்டைப்போன்ற விலங்குகளை நாம் காண்பது அருமை. ஆட்டுச் சண்டை சிலருக்கு உற்சாக மளிக்கத் தக்கது. முன் காலத்தில் தமிழ்நாட்டார் இவ் விதச் சண்டைகளில் வெறிகொண்டிருந்தார்கள். செல்வச் செருக்கினையுடைய மாந்தர்கள் ஆடுகளின் புண்ணைக் கருதாராய்ப் பின்னும் போரை விரும்பி, ஆடுகளைச் சண்டைக் குத் தூண்டி வேடிக்கை பார்ப்பதைத் தமிழ்நூல்கள் பல வற்றிற் காணலாம். வீரர்கள் போரொழிந்த காலங்களில் ஆட்டுச் சண்டைகளில் ஈடுபட்டுவந்தார்கள். இது **'தகர் வென்றி'** என்று புறத்திணை யிலக்கணத்திற் கூறப்படும்.

செம்மறியாட்டின் வீரம் போற்றத்தக்கதொன்றும். எந்த மிருகத்தினிடத்திலும் அது சண்டைக்குத் தயாராக நிற்கத் தக்கது. மந்தைக்கு ஆபத்து வாராமற் பாதுகாப்ப தும் இந்தச் செம்மறியாடுதான். எவராவது தன்னை எதிர்க் கத் தயாராகின்றனர் என்பதைச் சிறிதளவு அறிந்தாலுங் கூட, செம்மறியாடு அவர்கள்மேல் பாயத் துணிந்துவிடும். ஆட்டுக்குட்டிகள் விளையாட்டாக இந்தப் பயிற்சியைப் பழகிக்கொள்வதை நாம் பலமுறை பார்த்திருக்கிறோ மல்லவா! சேலம் ஜில்லா வேலூரில் ஓரிடத்தில் பயங்கர மான நாய் ஒன்று இருந்தது. அந்நாய், தான் இருக்கும் தெரு வழியாக எத்தகைய மாடு, எருமை, கழுதை முதலியவற்றையும் வரவிடுவதில்லை. அந்த நாயைக் கண் டால் அவை ஓடிவிடும். ஒருநாள் செம்மறியாடொன்று அவ் வழியாக வந்தது. அதனைக் கண்டு அந்த நாய் தன் வழக்கம்போல் குரைத்துக்கொண்டு அதன்மேற் பாயச் சென்றது. உடனே ஆடு எதிர்ப்புக்குத் தயாராகத் தலை யைக் காட்டிக்கொண்டு முன் சென்றது. பிறகு நாய் பிற் படத் தொடங்கியது. ஆனால் ஆடு அதனோடு நில்லாமல் நாயைத் துரத்த ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் நாய்

வீட்டிற்குள் ஓடி மறைந்தது. அந்த ஆடு பிறகு வெற்றி பெற்றதற்காகக் கம்பீரத்தோடு அந்த வீட்டின் தலைவாசலில் நெடுநேரம் நாய் வருமென்று காத்திருந்துவிட்டு அப்பாற் சென்றது.

போர் செய்யும்போது ஆடு தன் முன்னங் கால்களைத் தூக்கிக்கொண்டு தலையால் இடிக்க முயலும். சில சமயங்களில் இரண்டோரடி பின் சென்று ஓடிவந்து தாக்குவதும் உண்டு. பந்தயங்களில் நிகளத்தையும், உயரத்தையும் (Long Jump and High Jump) தாண்ட விரும்புகின்றவர்கள் பின்சென்று ஓடிவந்து தாண்டுவதை ஆட்டினிடமிருந்தே கற்றுக்கொண்டார்கள் போலும்!

சில ஆடுகள் முன்னங்கால்களை மண்டியிட்டுத் தீனி தின்பதைக் காண்கின்றோம். மலை ஆடுகள் அக்காலத்தில் பாறைகளின் சரிவுகளில் முளைத்திருக்கும் புல்லைப் பாறையின் மேலிருந்த வண்ணமாக முன்னங் கால்களை மடித்துக் குனிந்து தின்றுவந்த பழக்கம் பரம்பரைக் குணமாக இவற்றுக்கு அமைந்ததுபோலும்!

ஆடு, தன்னை வளர்ப்பவனை நன்கு அறிந்துகொண்டு அவன் செல்லுமிடங்களுக்கெல்லாம் தானாக அவனைத் தொடர்ந்து செல்லும் இயல்புடையது. இது சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரால் குறிக்கப்பட்டிருக்கிறது.*

ஆட்டிற்குச் சந்தோஷமுண்டானால் அது தன் புறவாயினை நக்கித் தன் மகிழ்ச்சியை அறிவிக்கும். அது தன் எஜமானன்மேல் உராய்ந்து தன் அன்பைக் காட்டுவதுமுண்டு.

ஆட்டுக்குட்டி எப்பொழுதும் துள்ளி விளையாடும் இயல்புடையது. என்றைக்காவது அது துள்ளி விளையாடாமற் போகுமானால் அச்செயல் உற்பாதத்தின் அறிகுறி என்று சிலப்பதிகாரம் (பக்கம் 442, 451) கூறும்.

---

* சிலப். நாடுகாண், 5-8 விசேட வுரை.

மந்தை வெளிகளில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கையில் மழை வந்துவிட்டால் அவைகள் படுந் துன்பத்தை அளவிட்டுக் கூற லியலாது. மழைத் துன்பந்தான் அதற்குப் பெருந்துன்பம். அச்சமயங்களில் ஓராடு மற்ரேர் ஆட்டின் பின்னங்கால்களுக் கிடையில் தன் தலையை வைத்துக்கொண்டு அவஸ்தையுறுவதைக் காணலாகும். 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்' என்ற பழமொழியால் ஆடு மழைத் துன்பத்தைப் பெரிதாகக் கருதுவது ஊகிக்கப்படுகிறது. மழை வரப்போவதை முன்னதாகத் தெரிவிப்பவைகளில் ஆடும் ஒன்ருகும். மேய்ச்சலுக்காக ஆடுகளைப் பட்டியிலிருந்து வெளிப்படுத்துகையில் அவை வெளிவராமற் பட்டியிலேயே அடைந்திருக்க விரும்புமாயின், அன்று மழை வரும் என்று நம் குடியானவர்கள் உணர்ந்திருக்கிருர்கள்.

புராணம் முதலிய நூல்களில் ஆட்டைப்பற்றிய பல செய்திகள் கூறப்படுகின்றன. கும்பகருணனை வேறுவகைகளில் துயிலெழுப்ப முடியாத அரக்கர்கள் ஆடுகளைக் கொண்டு அவனை மிதிப்பித்து எழுப்பினர்களாம். நாரதர் வேள்வியினின்று எழுந்த ஓராட்டுக்கிடாய் உலகையே அழிக்கத் தலைப்பட்டகாலையில் முருகக் கடவுள் அதனை அடக்கி வாகனமாகக் கொண்டாராம். அக்கினிதேவனுடைய வாகனமும் ஆடுதான். சிவபெருமானை மதியாத தக்கன் தன் தலையை இழந்து பிறகு ஆட்டுத் தலையோடு உயிர்பெற்று இவர் விஷயமாகச் சமகம் என்ற நூலை இயற்றினன் என்று கந்தபுராணம் கூறும்.

தமிழிலக்கியங்களில் ஆட்டைப்பற்றிய செய்திகள் இன்னும் சில உள. விரிவஞ்சி அவற்றை இங்கே கூருமல் இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

---

6. எது பவித்திரம்?

மாசிமகக் கொண்டாட்டம். கடற்கரையில் நிமிர்ந்த கூட்டம்; எள்ளுப் போட்டால் எள் விழாது. கடலில் கொந்தளிப்பில்லை, அமைதியாயிருந்தது. அமைதியாயிருக்கிற கடல் ஆபத்தென்று சிலர் நீரில் இறங்குவதற்கு அஞ்சினர். சாதாரண ஜனங்கள் பயமின்றி முழுகினர். விசாலமான மணற் பரப்பில் போடப்பட்டிருந்த அழகிய பந்தலில் பகவான் கருட வாகனத்தில் வீற்றிருந்தார். கடல் பகவானுக்கு முன் திரைக் கைகொட்டிக் களி நடனம் புரிந்தது.

ஜனங்கள் வருவதும் போவதுமாயிருந்தனர். அவர்கள் ஈரத் துணிகளிலிருந்து சொட்டுச் சொட்டெனச் சொட்டும் நீர்த்திவலைகளினால், மணற்பரப்பு மழை பெய்தது போலாயிற்று.

நான் நீராடிவிட்டு ஒரு கட்டுமரத்தின்மீது உட்கார்ந்து கொண்டே ஓடுகிற ஜன வெள்ளத்தை நோக்கினேன். ஸ்நானம் செய்ய என் நண்பரொருவர் அங்கு வந்தார்.

"என்ன, நீராட்டமெல்லாம் முடிந்துவிட்டது போல இருக்கிறதே!" என்று சிரித்துக்கொண்டு என்னைக்கேட்டார்.

"இல்லை" யென்றேன் நான்.

"இல்லையா? துணி ஈரமாயிருக்கிறதே!"

"துணி ஈரமாயிருந்தால் ஸ்நானம் ஆயிற்று என்று சொல்லிவிடலாமோ? நெஞ்சில் ஈரமில்லையே."

"என்ன நீங்கள் சொல்வது விளங்கவில்லையே! பிதிர் போட்டாற்போலப் பேசுகிறீர்களே; சித்தம் சுவாதீனத்தில் இல்லையோ?"

"ஆமாம், இல்லை. சித்தம் சுவாதீனத்திலிருந்தால், ஒருவாறு ஸ்நானமாயிற்று என்று துணிந்து சொல்லியிருப்பேன். மனத்தில் மாசுபோயிற்ரு? ஸ்நானம் செய்கிற தென்ருல் மனம் செம்மையடைவதுதான்."

"இந்த நோக்கத்தோடு சல்லித்துப் பார்த்தால் கோடியிலொருவன்கூட தேறுவது சந்தேக"மென்று மொழிந்தார் என் நண்பர்.

"சரீரத் தூய்மைகூட இந்திரிய நிக்கிரகந்தான்."

"சரிதான், வேதாந்தத்தில் விழுந்துவிட்டீரோ? இது எத்தனை நாளாக?"

"சிந்தித்துப் பாருங்கள், நான் சொல்லுகிறதில் உண்மை இருக்கிறதா என்று."

"நீங்கள் கூறுவதில் உண்மையில்லையென்று நான் சொல்ல முன்வரவில்லை. அப்பேர்ப்பட்ட மஹான் உலகத்தில் இருக்கிருஞ? — சந்தேகந்தான். நீங்கள் கேட்ட கேள்விகளெல்லாம் ஒழுங்கான கேள்விகளே. அவைகளுக்கு நீங்களே பதில் அளிக்கவேண்டும். எதில் தோய்ந்தால் மனம் தூய்மை அடையும்?"

"அதுதான் தெரியவில்லை. தவிக்கின்றேன். அது ஆராயவேண்டிய விஷயந்தான். ஆழ்ந்த சிந்தனையில் தான் அக்கேள்விக்குப் பதில் பிறக்கும்."

* * * *

என் நண்பர் என்னை விட்டகன்ருர். என்னைப்பற்றி என்ன எண்ணிக்கொண்டு போனுரோ; ஒரு பைத்தியம் என்று அவர் நினைத்திருக்கக்கூடும். "இதுமாதிரி நுட்பமான விஷயங்களில் பைத்தியம் பிடிக்கவேண்டியதுதான்," என்று எண்ணமிட்டது என் ஏழைமனம். சிந்தனைக்கடலில் மூழ்கினவனுய் வீட்டிற்கு மெள்ள ஊர்ந்தேன். வழியில் கண் தெரியாதவன் ஒருவன் தம்புருவை மீட்டிக்கொண்டு,

"கங்கை யாடிலேன் காவிரி யாடிலேன்
கோங்கு தண்கும ரித்துறை யாடிலேன்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலேன்?"

என்று உருக்கமாய்ப் பாடினன்.

என் உள்ளமும் அப்பாட்டிற்கெதிரொலி கொடுத்தது. அன்று முழுவதும் என் மனத்தில் ஒலித்தவை இவ்வடிகளே.

"கங்கை யாடிலேன், காவிரி யாடிலேன்
கோங்கு தண்கும ரித்துறை யாடிலேன்?"

* * * * *

மனச் சமாதானமொன்றுமில்லாமல் ஏதோ பொழுது போக்காகக் கம்பராமாயணம் அயோத்யா காண்டத்தை ஆலஸ்யமாகப் புரட்டிக்கொண்டே போனேன். சட்டென ஒரு கம்பச் சித்திரம் உயிர் பெற்றெழுந்தது என்முன்.

தெய்வ கங்கை நதிக்கரையில் ஓர் அழகிய வனம். அவ்வனத்தின் நடுவில் ஒரு பர்ணசாலை. அப்பர்ணசாலைக்குள் விருத்த மாதவர்களுக்கு நடுநாயகமாய் இராமன் அமர்ந்திருக்கிறான். சுற்றியுள்ள தபோதனர்கள் இராமனுடைய அழகில் ஈடுபட்டு அதைத் தங்கள் கண்களால் 'மதுரவாரி யமுதென மாந்துகிறார்கள்.' இலக்குமணன் பர்ணசாலைக்குக் காவற் சேவகஞ் செய்கிறான்.

அப்பர்ணசாலையை நோக்கி ஒருவன் வருகிறான். அவனைப் பார்த்தால் ஆயிர மரக்கலத்திற்குத் தலைவன் எனத் தோன்றுகிறது. காலிற் பெரிய செருப்பு. இருள் திரண்டதுபோல உருவம். அவன் முதுகில் இன்னுமொரு கும்மிருள் விழுகிறது; அது அவனுடைய தலைமயிர். மலையொத்த தோளையுடையவன். கால்களோ சுழித்தோடும் கங்கையின் ஆழத்தைக் கண்டதுபோல விளங்குகின்றன. உடல் புலால் நாற்றம் வீசுகிறது. முகத்திற் சிரிப்பில்லை. சீற்றமிலாமலே தீயெழ நோக்குகிறான். கூற்றமும் அஞ்சும் குரலையுடையவன்.

கொட்டு முழக்கோடு வந்த சுற்றத்தை அப்பால் நிற்கச் செய்து குகன் தனியாய்ப் போகிறான்.

"நாயடியேன் உன் சேவடி காண வந்திருக்கிறேன்" என்று பர்ணசாலையிலுள்ளவர்கள் அனைவரும் கேட்கும்படி உரத்துக் கூவினான். இப்படிக் கூவவே இலக்குமணன் அவனைக் குறுகி "நீ யார்?" என்று வினவுகிறான்.

"உங்களுடைய திருவடி காண வந்திருக்கிறேன்" என்று பதில் கூறுகிறான் குகன்.

"உன் பெயர் என்ன?"

"குகன்"

"நீ இங்கேயிரு, நான் உள்ளே போய் உன் வரவை என் தலைவனிடம் சொல்லி வருகிறேன்" என்று இலக்குமணன் பர்ணசாலைக்குள் நுழைகிறான்.

இராமனைப் பார்த்து "கணக்கில்லாத மரக்கலங்களுக்குத் தலைவனான குகன் உங்களைப் பார்க்க வந்திருக்கிறான்" என்று சொல்லிய உடன், இராமன் "அழைத்து வா" என்று அழகாகத் தலையை அசைத்தான்.

தன்னுடைய சரீரத்தை வளைத்து வாய் புதைத்து குகன் நிற்கிறான்.

"நீ இங்கே உட்கார்" என்கிறான் இராமன்.

குகனுக்குச் சம்மதமில்லை. தான் காணிக்கையாகக் கொணர்ந்த மீனையும் தேனையும் முன் வைத்து "உங்கள் திருவுளம் என்ன?" என்று கேட்கிறான் குகன்.

தபோதனர்களைப் பார்த்து முறுவல் கொள்கிறான் இராமன். இந்தக் குகனிடத்தில் உள்ள அன்பு இந்த மகரிஷிக் கூட்டங்களிலுங்கூட, கிடைக்காது போலிருக்கிறதே என்று தோன்றுகிறது, அந்த மந்தஹாஸத்தைக் கண்ணுறுகிறவர்களுக்கு. "அன்பு தழுவி வந்திருக்கிறது உன் காணிக்கை; அது தான் பவித்திரம்" என்றான் இராமன்.

"அரியதாம் உவப்ப உள்ளத்
தன்பினல் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த
வென்றல் அமிர்தினும் சீர்த்தவன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற்
பவித்திரம் எம்மனோர்க்கும்
உரியன இனிதினுமும்
உண்டன மன்றே" வென்றன்.

இந்தக் கம்பச் சித்திரத்தில் என் மனத்தில் எழுந்த கேள்விக்குச் சமாதானம் கண்டேன். "மனத்தூய்மை யடைய ஒரு மார்க்கம் கண்டேன், கண்டே"னென்று என் உள்ளம் பூரித்தது. "கடலின் அலைகளில் உடலைக் கழுவுவார்க்குத் தூய்மை யில்லை! அன்பலைகளில் உள்ளத்தை அலம்புவார்க்கே அகத்தூய்மை ஏற்படும்" என்ற பெரிய உண்மை எனக்கு உதய மாயிற்று. அந்த உண்மையில் தான் எனக்குச் சாந்தமும் பிறந்தது.

7. காற்றூடி

நம் சிறுவர்களும், பெரியவர்களும் கையாண்டுவரும் விளையாட்டுகள் எத்தனை காலமாக நாட்டில் வழங்கி வருகின்றன என்பதையும் அவைகளைக் குறித்த செய்திகளை நமது மாபெரும் புலவர்கள் எவ்வாறு எடுத்தாண்டிருக்கின்றார்கள் என்பதையும் ஆராய்வது ஓர் அரிய ஆராய்ச்சியாகும். இவ்வித ஆராய்ச்சியை ஆங்கிலம் முதலிய மேல் நாட்டு மொழியாளர்கள் கைக்கொண்டு அதில் அவர்கள் அறிந்த பலன்களை வெளியிடுவதுண்டு. உதாரணமாக, ஆங்கிலக் கவிச்சக்கரவர்த்தியான ஷேக்ஸ்பியர் என்ன என்ன விளையாட்டுகளைத் தம் நூலில் எடுத்தாண்டிருக்கின்றார் என்பதை ஓர் அரிய பெரிய ஆராய்ச்சியாகக்கொண்டு ஓர் ஆங்கில ஆசிரியர் ஒரு நூல் இயற்றி யிருக்கின்றார். அதைப்போன்ற ஓர் ஆராய்ச்சி நூல் நமது தமிழில் எந்தப் புலவரைப்பற்றியும் இதுவரை யாரும் வெளியிடவில்லை. நமது மக்கள் இத்தகைய ஆராய்ச்சிகளையும் கைக்கொள்வது நமது மொழிக்குச் செயத்தகுமோர் பேருதவியாகும்.

காற்றூடி அல்லது பட்டம் என்பது எந்தச் சிறு பிள்ளையும் அறிந்த ஒரு விளையாட்டுப் பொருளாகும். காற்று வீசும் பருவங்களில் காகிதங்களினால் பல உருவங்கள் அமைத்து அவற்றை நூலில் கட்டி ஆகாயத்தில் பறக்க விடுவது நம் சிறுவர்கள் விரும்பத்தக்க ஒரு விளையாட்டு ஆகும். இக் காற்றூடிகள் பலவித உருவங்களைக் கொண்டுள்ளன. காகிதம் மடங்காமல் இருக்கும்பொருட்டு இலேசான குச்சிகளைச் சேர்த்து இணைப்பதுண்டு. சாதாரணக் காற்றூடிகள் சதுரமாக இருக்கும். அவைகள் நேராக நிற்பதற்காகக் கட்டும் கயிற்றிற்கு, சூத்திரம் என்று பெயர். பெரிய காற்றூடிகள் கீழே விழாதபடி நிமிர்ந்து நின்று அசையும்பொருட்டு அவைகளுக்கு வால்களைக் கட்டுவதுண்டு. காற்றூடி விடுபவன் தன் கையில் பிடிக்கும்

நூலினை அளவாகவிட்டு ஆகாயத்தில் உயர எழும்பும்படியாகச் செய்வான். இவ்விதம் உயர எழும்புவதிலும் அவைகளைப் பறக்கவிடும் சிறுவனுடைய யுக்திக்குத் தக்கபடி மேல் எழும்பும். சில சமயங்களில் இரண்டுபேர் பந்தயங் கட்டிக்கொண்டு காற்ருடிகளைப் பறக்க விடுவதுண்டு. அவைகளில் எது அதிக உயரம் பறக்குமோ அதை உடையவனே ஜயித்தவனவான். சில சமயங்களில் ஒருவனுக்கொருவன் போட்டி போட்டுக்கொண்டு ஒருவன் மற்றவனுடைய நூலினை அறுக்கச் செய்வான். அவ்விதம் செய்தால் நூலறுந்த காற்ருடி அறுத்தவனுடைய பொருளாகிவிடும். இவ்விதமான பந்தயப் போட்டிக்காக நூலினைப் பக்குவப் படுத்தும்போதே பசையைச் சேர்த்து அதனேடு கண்ணுடிப் பொடிகளையும் கலந்து பூசுவதுண்டு. அவ்விதம் செய்து எதிரியின் காற்ருடியைச் சுலபமாக அறுத்து விடுவதுண்டு. இவ்விதமான போட்டிப் பந்தயங்களில் அடிக்கடி கலகங்களும் நேரிடும்.

சாதாரணக் காற்ருடிகளே யன்றிப் பல உருவங்கள் அமைந்த வேறு கற்ருடிகளும் உண்டு என்று முன்னமே சொன்னேம். சில காற்ருடிகளைக் கருடனைப் போலவும், கிளியைப் போலவும், மற்றப் பட்சிகளைப் போலவும் கட்டுவதுண்டு. சில காற்ருடிகளை மனிதனைப் போலவும் விளக்குக் கூண்டுகள் போலவும் கட்டி விடுவதுண்டு. ஒலி உண்டாக்கும் பொருட்டுக் காகிதங்களைக் கத்தரித்துக் கொடிகளைப் போலவும், தோரணங்களைப் போலவும் காற்ருடிகளுக்குச் சேர்த்திக் கட்டுவதுண்டு. காற்ருடிகளைக் கோத்துப் பிடிக்கும் நூலின் வழியாகப் பல காகித உருவங்களைச் செய்து செலுத்துவதும் உண்டு. அவைகள் காற்றின் விசையால் நூலின் வழியாக மேல் ஏறிச்செல்லும். இவைகளை எல்லாம் சிறுவர்கள் பார்த்துப் பெரிதும் மகிழ்ச்சி கொள்வார்கள்.

இக் காற்ருடிகளை நமது நாட்டில் மாத்திரமே யன்றிப் பிற நாடுகளிலும் சிறுவர்கள் விட்டு விளையாடி வருவதைக்

காணலாம். சீன தேசத்தில் காற்ருடி விடும் பழக்கம் மிக அதிகம். சீனர்கள் நாள் முழுவதும் காற்ருடிவிடும் விளையாட்டிலேயே காலம் கழிப்பது உண்டாம். ஐரோப்பியர்களிலும் காற்ருடிவிடும் பழக்கம் உண்டு. 'சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்' என்னும் பழமொழிபோல உபயோகமற்றதாகவும் வீண்காலம் கழிப்பதற்காகவும் சிறுவர்கள் கையாண்டுவரும் இக் காற்ருடியினுலே பல நற்பலன்களும் கிடைத்திருக்கின்றன. அமெரிக்க நாட்டில் **பெஞ்சமன் பிராங்க்லின்** என்ற நிபுணர் சிறுபிள்ளையா யிருக்கையில் ஒரு மழை நாளில் வானம் முழுவதும் கறுத்து இருண்ட மேகம் சூழ்ந்திருக்கையில் ஒரு காற்ருடியைப் பறக்க விட்டார். சிறிது நேரத்தில் இடியும் மின்னலும் எழுந்தன. திடீரென்று ஒரு மின்னல் காற்ருடியின் வழியாகச் சென்று அவருடைய உடம்பில் பாய்ந்தது. ஆனுல் தெய்வச் செயலாக மின்சாரம் பாயாத ஒரு பொருளின் மேல் அவர் நின்றுகொண் டிருந்ததினுல், அவர் பிழைத்துக் கொண்டார். ஆனுல், அச் சம்பவத்தால் ஓர் அதிசயமான உண்மையை அவர் கண்டுபிடித்தார். அதாவது : ஆகாயத்திலுள்ள மின்னலும் இங்கே நாம் இரண்டு பிசின் வஸ்துக்களைத் தேய்ப்பதினுல் உண்டாகும் மின்சாரமும் ஒரே சக்தி என்பதுதான். இவ்விதம் அவர் கண்டு பிடித்ததிலிருந்து மின்சாரத்தின் தத்துவ ஞானத்தை அதிகமாக்கிப் பின்னர் அதனை அபிவிருத்தி செய்து உலகத்திற்கு அவர் அளித்தார்.

காற்ருடியினுல், நாம் அடைந்த மற்ருெரு பெரிய பயன் தற்கால ஆகாய விமானமாகும். காற்ருடி பறக்கவிடுதலைப் பலவிதமாகப் பெருக்கிப் பார்த்ததில், சில கலைஞான விற்பன்னர்கள் ஆகாயத்தில் மனிதர்களும் பறக்க முடியும் என்பதைக் கண்டு பிடித்தார்கள். இவ்விதமான அறிவிலிருந்துதான், கால அடைவில் தற்கால ஆகாய விமானங்கள் ஏற்பட்டன என்று சொல்ல முடியும்.

இவ்விதப் பலன்களைக் கொடுத்துவரும் காற்ருடி பண்டைக் காலத்தில் நமது தமிழ் நாட்டில் இருந்ததா என்ற ஒரு கேள்வி இப்போது பிறக்கலாம். நமது தமிழ்க் கவிஞர்களில் இரண்டு பெரிய புலவர்கள் காற்ருடியை உவமையாகக் கொண்டிருக்கிருர்கள். கல்வியில் பெரிய **கம்பனூர்**, அனுமான் கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்லுகையில் வழியில் தடுத்த ஓர் அரக்கியின் வாயில் புகுந்து வயிற்றைக் கீறி அவளுடைய குடலை இழுத்துக்கொண்டு ஆகாயத்தில் மறுபடியும் பறக்கையில் அவ்வனுமானுடைய உருவம் ஒரு காற்ருடி பறந்ததுபோல் இருந்தது என்று அழகாக வர்ணித்திருக்கின்ருர்.

"சாகா வரத்தலை வரிற்றிலக மன்னுன்
ஏகா வரக்கிகுடர் சோண்டே னெழுந்தான்
மாகா லசைப்பவட மண்ணினுற வாலோ
டாகாய முற்றகத லிக்குவமை யானுன்"

என்ற அவரது செய்யுளில் **கதலி** என்பதற்குக் காற்ருடி அல்லது பட்டம் என்பது பொருள். அனுமான் மனித உருக்கொண்ட காற்ருடிபோல் இருந்தாராம். அவரது வால் பட்டத்துக்குள்ள வாலாகத் தோன்றியதாம். அரக்கியின் குடல் பட்டம் பறக்கவிடுகின்ற நூல் போன்றதாகும். இவ்வுவமை இயற்கைக்கு எத்துணை ஒத்திருக்கின்றது பாருங்கள்! கம்பர் காலத்திலும் மனித உருக்கொண்ட பட்டம் விடுவது வழக்கம் போலும்.

காற்ருடியை எடுத்தாளும் மற்ருெரு பெரும் புலவர் **சேக்கிழார்** ஸ்வாமிகள் ஆவார். அப்புலவர் பிரான் ஏனுதி நாயனர் சரிதத்தில், நாயனர் அதிசூரனுடைய படையோடு போர் புரிந்தபோது அங்கே வெட்டுண்டு கிடந்த போர் வீரர்களினுடைய குடல்களைப் பிடுங்கிக்கொண்டு மேலே பறக்கும் கழுகு, பருந்து, என்பவைகள் விளையாட்டுப் பயிற்சியுடைய சிறுவர்கள் பறக்கவிடும் காற்ருடிகளை ஒத்திருந்தன என்று கூறுகின்ருர்.

8. இராஜேந்திரன் காலத்தில் இருந்த நாட்டின் நிலைமை

அரசியல் முறை

இராஜேந்திரன் காலத்தில் அரசியல் எவ்விதம் நடைபெற்றது என்பதையும், நாட்டுமக்கள் எவ்விதநிலையில் வாழ்ந்து வந்தனர் என்பதையும் அறிவதற்குரிய சாதனங்கள் பல உள்ளன. அவ்வரலாறுகளை ஆராய்ந்து எழுதினல் அதுவே ஒரு தனி நூலாக விரியும். ஆதலின் மிகவும் சுருக்கமாக முக்கியமான விஷயங்களுள் சிலவற்றை மட்டும் கூறுவோம்.

சோழர்கள் ஆட்சி முறையை, 'தனியரசன் ஆட்சி' என்றே சொல்லவேண்டும். அவர்கள் உண்மை நெறியினின்றும் தவறமாட்டார்கள். அரசர்களும் மற்றோரும் கோயில்களுக்கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும் அளித்த நிவந்தங்களைக் கவனித்தால் அக்காலத்தில் அரசனும், அவனைப் பின்பற்றி நாட்டுமக்களும் பழைய மரபுகளை அனுஷ்டித்து வந்தார்கள் என்பது தெரியவரும்.

அரசியல் நிர்வாகம்

அரசன் ஈசுவராம்சமாகவே கருதப்பட்டான். அவன் தெய்வத்திற்கு அஞ்சிக் குடிகளின் க்ஷேமத்தைக் கருதியே நடந்துவந்தான். எல்லா அதிகாரங்களையும் அரசனே தலைமைபூண்டு செலுத்திவந்தான். அவன் எதையும் தான் விரும்பியவாறு செய்து முடிக்கும் உரிமை பூண்டவன். ஆயினும், அவன் மந்திரிகளைக் கலந்து அவர்களுடைய உதவியைப்பெற்றே இராஜ்யநிர்வாகம் செய்துவந்தான். அவ்விதம் அரசனுக்குத் தக்கது கூறி இராஜ்ய பாரத்தை உடனிருந்து தாங்கியவர்கள், 'உடன் கூட்டம்' எனவும், 'கூட்டப்பெருமக்கள்' எனவும் படுவர். அவர்கள் எப்

"திண்படை வயவர் பிணம்படு செங்கள மதனிடை முன்சிலர்
புண்படு வழிசோரி யுங்குடர் போங்கிய கழுகு பருந்தோடு
கோண்டெழுபொழுதினுமுன்செயல்குன்றுதல்இலர்தலைநின்றனர்
விண்படர் கோடிவிடு பண்பயில் விஞ்சையர் குமரரைவென்றனர்"

இச்செய்யுளில் '**விண்படர் கோடி**' என்பது காற்றாடி அல்லது பட்டம் ஆகும். வெட்டுண்டு கிடந்த போர்வீரரின் குடல்கள் நூலாகும். அக்குடல்களை எடுத்து ஏகும் கழுகுகளும் பருந்துகளும் காற்றாடிகளாகும். இச்செய்யுளில் சேக்கிழார் பெருமான் கொண்டிருக்கும் உவமேயம், கம்பர் கொண்ட இரணகளத்துப் பொருளே ஆக இருப்பது வியக்கத் தக்கதாகும். மிகப் பெரியார்களின் மனோபாவமானது ஒரே விஷயத்தில் பாயும் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு இவ்விரு கவிஞர்களின் உவமைகளும் இலக்காகி இருக்கின்றன அல்லவா? மேலும் சேக்கிழார் காலத்தில் காற்றாடிகளைக் கழுகுகள் போலவும் பருந்துகள்போலவும் செய்து பறக்கவிட்டனர் என்றும் ஊகிக்கலாம் அல்லவா?

இவ்விதம் தமிழ் மொழியில் இரண்டு பெரிய புலவர் பெருமக்களும் காற்றாடியை ஓர் உவமையாகக் கொண்டிருப்பதை நாம் கவனிக்குங்கால், அன்னவர் காலத்தில் காற்றாடியானது சிறுவர்கள் வழக்கத்திலே கொண்ட ஒரு விளையாட்டுக் கருவியாக இருந்தது என்பதும், அக்கருவியை மனிதன், கழுகு, பருந்து ஆகிய உருவங்களாகச் செய்து விளையாடினார்கள் என்பதும், அவ்விளையாட்டு ஒரு பிரபலமான விளையாட்டாக இருந்தது என்பதும் நாம் ஊகிக்கலாம். அவ்விரண்டு புலவர்கள் வாழ்ந்த காலமாகிய 11, 12-ஆம் நூற்றாண்டுகளிலே காற்றாடிஒரு பிரபலமான விளையாட்டுப் பொருளாக இருந்ததனாலேஅதற்கு முந்திப் பல நூற்றாண்டுகளாக அவ் விளையாட்டுப்பொருள் தென்னிந்தியாவில் தமிழர்பால் நிலைத்திருக்க வேண்டுமென்றும் நாம் எண்ணலாம் அல்லவா?

யால் உத்தரவை அளித்து அதை நிறைவேற்றி வைக்க 'ஆணத்தி' யையும் குறிப்பிடுவான். அதைக்கேட்டிருந்த 'திருவாய்க்கேள்வி' என்னும் அதிகாரி சொல்ல ஓலை எழுதும் மந்திரியான 'திருமந்திர ஓலை' அதை எழுதி, 'ஓலை நாயகம்' என்னும் அதிகாரியைக்கொண்டு ஒப்பிட்ட பிறகே மற்ற அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள். அந்த ஓலை தானம் கொடுக்கப்பட்டதைத் தெரிவிப்பதாக இருந்தால், அதைத் 'தீட்டுப்'படிப் 'புரவுவரி' என்போர் 'வரிப் பொத்தகம்', 'வரிப் பொத்தகக் கணக்கு' ஆகியவற்றில் எழுதி, 'வரியிலீடு,' 'முகவெட்டி,' 'கண்காணி' ஆகிய அதிகாரிகளுக்குக் காட்டிப் 'பட்டோலை' அதிகாரியைக் கொண்டு நாட்டார்க்குத் திருமுகம் அனுப்புவார்கள்.

இவற்றால் நிலவரி சம்பந்தமாகப் பல அதிகாரிகள் இருந்து வந்தனர் என்பது தெரியவரும். அவர்கள் அதைத் தவிர வேறு பல அதிகாரங்களையும் வகித்து வந்தார்கள். சிலர் கோயில்களின் வருமானத்தையும் செலவையும் ஒழுங்கு செய்ததையும், வேறு சிலர் கிராமச்சபைகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் சரிவர நடத்துவதில் உதவி புரிந்ததையும், மற்றும் சிலர் கிராமச்சபையினர் அமைக்கும் 'அறவோலை' முதலியவற்றைத் தணிக்கைசெய்து ஒப்பம் இட்டதையும் சாஸனங்களின் மூலமாக அறிகிறோம். அவ்வதிகாரிகள் குற்ற விசாரணைசெய்து நீதி செலுத்தியும் வந்தனர் என்று தெரிகிறது.

நியாயம் வழங்கும் முறை

நியாய விசாரணை செய்து நீதி செலுத்துவதற்குத் தனி அதிகாரிகள் இருந்தனர். 'நியாயத்தார்' எனப்படும் அவர்கள் கூடி விசாரணை செய்யும் இடம் 'தர்மாசனம்' என்று வழங்கப்பெறும். அக்காலத்தில் விசாரணை எப்படி நடத்தப்பட்டது என்பதை அறியமுடியவில்லை. என்றாலும், சிறிய குற்றங்களும், உரிமைகளும், ஊர்ச் சபையோராலேயே விசாரிக்கப்பட்டு நியாயம் வழங்கப்பட்டு வந்தன.

பொழுதும் அரசனுடன் சேர்ந்தே இருப்பார்கள் என்று தெரிய வருகின்றது. அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அரசியற் பிரிவின் தலைவரா என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியாது. ஆயினும், அவர்கள் அரசனுக்கு வேண்டியவற்றை எடுத்துரைத்தும், அவன் ஆணைகளை வெளியில் உள்ளோருக்கு விடுத்தும் வந்தனர்.

அரசியலை நடத்துவதற்குப் பல அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் கருமிகள் என்றும், பணிமக்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தனர். கருமிகள் எனப்படும் அதிகாரிகள், பெருந்தரம், சிறுதரம் என இரு வகைப்படுவர். சாஸனங்களினின்றும் ஒவ்வொரு வகையிலும் பல அதிகாரிகளின் பெயர்கள் நமக்குத் தெரிய வருகின்றன.

அவ்வதிகாரிகளுக்கு இப்பொழுது உள்ளதைப்போலச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி அரசனிடமிருந்து நிலத்தையோ, அதன் வரும்படியையோ பெறுவர். அதை அவர்கள் ஜீவிதமாக அனுபவிப்பார்கள்.

அரசன் பல சமயங்களில் நாட்டைச்சுற்றிப் பார்வையிட்டு வருவான். அதற்காக அவனும் பரிவாரங்களும் தங்குவதற்கு ஒவ்வொரு முக்கியமான இடங்களிலும் அரண்மனைகள் இருந்து வந்தன. அவை இல்லாத இடங்களில் அரசன் கோயில்களிலும் மண்டபங்களிலும் தங்குவான்.

இவ்விதம் அரசன் நாட்டின் பல பாகங்களுக்கும் செல்லும் காலங்களில், குடிகள் தங்கள் குறைகளை அரசனிடம் முறையிட்டுக் கொள்வதற்கு வேண்டிய உதவிகள் இருந்தன.

அரசனிடம் உத்தரவு பெறவேண்டிய விஷயத்தைப் பற்றி உடன் கூட்டத்து அதிகாரிகளுள் ஒருவன் விண்ணப்பம் செய்வான். அதைக்கேட்ட அரசன், உடனேயோ, பின்பு மந்திரிகளைக் கலந்தோ முடிவுசெய்து வாய் மொழி

இப்பொழுது உள்ளதைப் போல அக்காலத்தில் வழக்கு அறியும் முறை சிக்கல் கொண்டதாக இல்லை. நியாயத்தார் முன்னிலையில் 'முறைப்பாடு' செய்தவுடன், அவர்கள் அம் முறை யீடு நியாயமானதா என்பதை முதலில் ஆராய்ந்து, பிறகு முறையீடு செய்தவனைத் தன் கட்சியை ஆட்சி (வழக்கம்) ஆவணம் (பத்திரங்கள்) 'அயலார் தங்கள் காட்சி' (சாட்சி) ஆகிய மூன்றனுள் ஒன்றுலோ பலவற்றுலுமோ நிரூபிக்கும்படிச் சொல்லுவார்கள். அவன் அங்ஙனம் நிரூபித்து விட்டால், அதற்குப் பிறகே மற்றவன் தானும் அவ்விதமே மறுத்துக் கூறுவான். அவற்றை ஆய்ந்து உண்மை தெளிந்து நியாயத்தார் முடிவு கூறுவார்கள்.

இவை யாவும், இக்காலத்தைப் போல அதிக காலம் ஆகாமல் விரைவில் முடிந்துவிடும். ஒரு கிராமத்தாருக்கும் மற்றொரு கிராமத்தாருக்கும் இடையில் ஏற்பட்ட எல்லைச் சண்டை போல்வன பலகாலம் இழுத்துச் செல்வதும் உண்டு. அப்படிப்பட்டவை காலத்தாலேயே முடிவு செய்யப் படுவன போலும்.

இராஜத் துரோகக் குற்றங்களை அரசனே நேரில் விசாரித்து முடிவு செய்வது வழக்கம் என்று தெரிகிறது. குற்றவாளிகளைத் தண்டிப்பதுடன், அவர்களுடைய சொத் துக்கள் பறிமுதல் செய்து ஆஜ்ஞ்யாக்கிரயம் (அரசன் ஆணையால் விற்பனை) செய்யப்படும்.

கோயிற் சொத்துக்களை அபகரித்துச் சிவத்துரோகம் செய்தவர்களுடைய நிலங்களைப் பறிமுதல் செய்து அந்த நிலங்களையோ அல்லது அவற்றை விற்றுக் கிடைத்த விலையையோ நஷ்டம் அடைந்த கோயிலுக்கு உரிமை யாக்கி விடுவார்கள்.

போர் நிகழ்த்திய முறை

அக் காலங்களில் சோழர்கள் நிகழ்த்திய போர்ச் செயல்கள் இராஜ நீதியில் உள்ள விதிகளுக்கேற்ப நடந்

தன வென்று கூறமுடியாது. கைப்பற்றிய நாட்டைச் சூறையாடி, நகரை எரியூட்டிப் பாழ்படுத்திப் பல கொலைகளும் துஷ்கிருத்தியங்களும் புரிந்து திறைகொள்வது வழக்கம் என்றே சொல்லலாம். வெற்றியை அடைந்த அரசனுடைய படை தோற்றவனுடைய நாட்டுள் 'தீயையும் வாளையும்' ஏந்திச் சென்றன. ஆயினும் போர் வீரர்கள் யுத்தகாலத்தில் முதுகிட்டு ஒடமாட்டார்கள். 'பழியொடு வாழ்வதிற் சாவது சாலநன்று' என்ற கொள்கையைக் கொண்டவர்களாக உயிருள்ளவரை போர் புரிந்தே வீர சுவர்க்கம் அடைவார்கள். போர்க்களத்தில் முதுகிட்டு ஓடினவரைத் துரத்துவது கூடாது என்று இராஜநீதி கூறினாலும், எப்போதும் அக் கொள்கை அனுஷ்டிக்கப்படுவதில்லை.

கிராம சபைகள் முதலியன

அக் காலத்திலே நாடு காவலை அரசன் நடத்திவந்தாலும் பொதுக் காரியங்களிற் பல, கிராமங்களிலும் நகரங்களிலும் வசிக்கும் மக்களே கவனித்து வருமாறு விடப்பட்டிருந்தன. அநேகமாக ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு சபை இருந்துவந்தது. கிராமத்தில் உள்ள ஆண்மக்கள் யாவரும் ஊர்ச் சபையின் உறுப்பினராயினும், தேர்ந்தெடுத்த ஆளுங் கணத்தாரே, நிர்வாகத்தை நடத்தி வந்தனர். கிராம ஆட்சி முழுவதையும் அவர்களே நடத்தி வந்தனர் எனலாம்.

இச் சபைகளின் உறுப்பினரைப் பொது மக்கள் ஆண்டுதோறும் 'குடவோலை' வாயிலாகத் தேர்ந்து எடுப்பார்கள். உறுப்பினர் வித்துவான்களாகவும், பக்ஷபாதமில்லாதவர்களாகவும், நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருத்தல்வேண்டும். வினைக்கேடு செய்தவர்களும், கடமையைச் செலுத்தாதவர்களும், கைக்கூலி பெறுபவர்களும், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களும், சில

குறிப்பிட்ட காலத்திற்கு உறுப்பினராக இருந்தவர்களும் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்.

இந்தச் சங்கங்கள், வரி வசூலிப்பது, தங்கள் கடமையைக் கிராமப் பொதுமக்களுக்குப் பங்கிடுவது, நியாயம் வழங்குவது, மக்களின் தினசரி வாழ்க்கை சரிவர நடைபெறுவதற்கு அவசியமான வியவஸ்தைகளை விதிப்பது ஆகிய காரியங்களைக் கவனித்து வந்தன என்பது கல்வெட்டுகளால் விளங்குகின்றது.

வரிகள்

அரசனது முக்கியமான வருமானம் நிலவரியாகும். அதை வசூலிப்பது அரசாங்கத்தின் முக்கியவேலையாகும். நன்செய், புன்செய், தோட்டக்கால் என்பனபோல் நிலம் பலவகைப் பட்டிருந்தது. நீர்வளம் நிலவளத்திற்குத் தக்கவாறு தீர்வை விதிக்கப்பட்டு வந்தது. விளைவின் ஒரு பகுதியே தானியமாகவோ, காசாகவோ, தீர்வையாகப் பெறப்பட்டது. அரசனால் பல சமயங்களில் தானம்செய்யப்பட்ட இறையிலி நிலங்களும் இருந்து வந்தன.

இந்நில வரியைத்தவிரக் குடிகள் வேறு பல 'சில்லிறை'களையும் கொடுத்து வந்தனர். அவற்றின் பெயர்களாகச் சாஸனங்களிற் காணப்படுவன பல. அவை பொதுவாக 'ஊரிடு வரிப்பாடு' என்று கூறப்படும். கண்ணாலக் காணம், குசக்காணம், நீர்க்கூலி, மீன்பாட்டம், தறியிறை, தரகு, தட்டாரப் பாட்டம், ஓடக்கூலி, செக்கிறை, வண்ணாரப்பாறை, நாடுகாவல், உல்கு, ஈழம் பூட்சி என்பன அவற்றுட் சில. கடன், கூலி, இறை, பாட்டம், பூட்சி என்பன வரிகளை உணர்த்தும் சொற்களாம். கண்ணாலக்காணம் என்பது கல்யாண தினத்தன்று மணமகனும் மணமகளும் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய அரைக்கால் பணமாகும் என்பது முதற் பராந்தகன் காலத்துக் கல்வெட்டு ஒன்றால் தெரியவருகின்றது. உல்கு என்

பது சுங்கவரியாகும். ஈழம் பூட்சி என்பது கள் இறக்கு வதற்குச் செலுத்தவேண்டிய வரி. தறியிறை, தட்டாரப் பாட்டம், செக்கிறை, வண்ணாரப்பாறை என்பன போன் றவை அந்த அந்தத்தொழிலைச் செய்பவர்கள் செலுத்த வேண்டிய தொழில் வரியேயாகும். இங்ஙனமாக அக்காலத் தில் குடிகள் செலுத்தவேண்டியனவாகச் சாஸனங்களில் பலவித வரிகள் காணப்பட்டாலும் அவையாவும் எல்லாக் குடிமக்களாலும் ஒவ்வொரு வருஷத்திலும் செலுத்தப்பட வேண்டுவன என்று கொள்ளக்கூடாது.

குடிகள் தாங்கள் செலுத்தவேண்டிய வரிப்பணத்தை முட்டு இன்றிச்செலுத்தி வந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் வறுமையாலோ வேறெக்காரணத்தாலோ வரி செலுத்த இயலாமல் கிராமத்தைத் துறந்து வெளியூர்களுக் குச் செல்வதும் உண்டு. ஊரைத்துறந்து வெளியில் செல் லாதவர்களைச் சில காலங்களில் படையிலார் தண்ணீரில் போட்டும், வெயிலில் நிறுத்தியும் பலவேதனை செய்து வசூல் செய்திருக்கிறார்கள்.

வாணிகம்

அக்காலத்தில் தமிழ் நாட்டினர் அலைகடல் கடந்து பிற நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தனர். மேற்கே அரபி யர்களுடனும் கிழக்கே ஸ்ரீவிஜயம், சீன முதலிய தேசத் தவர்களுடனுமே முக்கியமாக வியாபாரம் செய்தார்கள். வணிகர்களுக்குள், வளஞ்சியத்தார், மணிக்கிராமத்தார், நான தேசிகள், நகரத்தார், என்ற பல சங்கங்கள் இருந் தன. இச்சங்கங்களைச் சேர்ந்தவர்களைப் பற்றிய குறிப் புக்கள் சில சுமத்ராவில் கிடைக்கும் கல் வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஹிந்து புராணக் கதைகளை விளக்கு வனவும் தமிழ் நாட்டுச் சிற்பங்களைப் போல்வனவுமாக வுள்ள சிற்பங்கள் சீன தேசத்துக் கோயில்களில் காணப் படுகின்றன. இங்ஙனம் மக்கள் வெளி நாட்டாருடன்

9. சுற்றுப் பிரயாணங்களும் பயனும்

சுற்றுப் பிரயாணங்கள் என்றால் நாட்டையோ, தேசத்தையோ, உலகத்தையோ, சுற்றிச் செய்யப்படும் பிரயாணங்கள் என்று பொருள்படும். மானிடர் யாவரும் இயைந்தவளவு ஊர் சுற்றிப் பார்க்க வேண்டியது அவசியம். அவ்வாறு அவர் செய்யாரேல், உண்மை அறிவு அவர்களுக்கு நிரம்பியது என்றுகூறுவதற்கில்லை இக்காரணம் பற்றித்தான் மேனாட்டுக்குப் படிக்கப்போகும் நம்மவருட் பலர் உலகத்திலுள்ள பல தேசங்களையும் சுற்றிப் பார்த்து வருகின்றனர். அதுபோலவே, மேனாட்டார் பலர் நம் நாடு வந்து பார்த்துப் போகின்றனர் என்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். மேலும் உலகமெங்கும் சுற்றிப் பார்க்கும் எண்ணத்துடன் சிற்சில சமயங்களில் சிறு சிறு கூட்டத்தார் ஆங்காங்கு புறப்படுகின்றனர் என்பது சமாசாரப் பத்திரிகை படிக்கும் எவரும் அறிந்ததே.

ஆனால், தற்காலத்திற் செய்யப்படும் பிரயாணங்களுக்கும் முற்காலத்திற் செய்யப்பட்ட பிரயாணங்களுக்கும் வேற்றுமை யுண்டு. முற்காலத்திலே இரயில் வண்டிகள் கிடையா; மோட்டார்கள் இல்லை; ஆகாயக் கப்பல்கள் முயற்கொம்பே. ஆதலால் அக்காலத்து, மக்கள் பெரும்பாலும் நடைமேலும், சிறுபான்மை கட்டைவண்டி, குதிரை இவற்றிலுமாகவே பிரயாணத்தை மேற்கொண்டனர். அங்ஙனம் நடைமேற்செல்லுங்கால், அவர்கள் பற்பல விநோதங்களைக் கண்டு அறிந்து ஆனந்தித்திருக்கக் கூடும்; இயற்கை யன்னையின் எழிலைக்கண்டு வியந்து போற்றியிருக்கக்கூடும்; பலதிறப்பட்ட மக்கள் வாழும் ஊர் வழியே சென்று அவர்களுடைய நடையுடை பாவனையை அறிந்திருக்கக்கூடும். ஆனால், தற்காலத்திலோ துரிதமாகச் செல்லும் இரயில் வண்டிகள், உறுமிக்கொண்டு ஓடும் மோட்

வாணிகம் செய்து வந்ததால், இத்தேசத்தில் வெளி நாட்டார் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பொருள்களுக்குச் சுங்கம் விதிக்கப்பட்டது. அதனாலும் அரசாங்கத்துக்கு வருமானம் உண்டாயிற்று. பணமும் 'கையெழுத்து ஓலை'யின்மேல் கொடுக்கப்பட்டு வந்ததால், நாணயச் செலாவணியும் விருத்தியாயிற்று. அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து சீன முதலிய தேசங்களுக்கு முத்து, தந்தம், பவழம், கண்ணாடிக்கல், பாக்கு, சந்தனக்கட்டை, ஏலம், பளிங்குக் கல், துணி, சாயம் தோய்ந்த பட்டு நூல் கலந்த துணி ஆகியவைகளும், பலவிதமான வாசனைத் திரவியங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

டார் வண்டிகள், நிம்மதியாகச் செல்லும் நீராவிக் கப்பல்கள், வாயுவேகம் இதுதானே என்று சொல்லும்படி பறந்து போகும் ஆகாயக் கப்பல்கள் எல்லாம் ஒரூரிற்கும் மற்ருேர் ஊரிற்குமுள்ள தூரத்தை அற்பமாக்கி விடுகின்றன. அம்மட்டோ! வீட்டில் செய்துகொள்ளக்கூடிய சௌகர்யங்களில் பலவற்றை இவ்வாஹனங்களில் செய்துகொள்ள முடிவதால், ஒருவரையும் பார்க்கவேண்டாம் ஒருவரோடும் பேசவேண்டாம் என்று நினைப்பார் கூட்டத்திடையேயும் தன்னந்தனியாகச் செல்லக்கூடியவர்களா யிருக்கிருர்கள். சில ஊர்களுக்குச் செல்லுவோர் மாலையில் வண்டியிலேறிப் படுத்தால் காலையில் குறித்த விடஞ்சென்று விழிக்கின்றனர். இடையே நிகழ்ந்தது என்ன, என்ன என்ன ஊர்வழியே இரவில் சென்றது, ஒரூரிற்கும் மற்ருென்றுக்கும் காணப்பட்ட வித்தியாசம் என்ன, ஒரூரிலிருந்து வந்த மக்களுக்கும் மற்ருேரூரிலுள்ள மக்களுக்கும் உள்ள மாறுபாடுகள் என்ன என்ற விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்ளக் கவலையின்றிச் செல்கின்றனர் பலர். இவ்வாறு புறக்கணித்துச் செல்வது, கால்நடையாகவோ, கட்டை வண்டியிலோ, குதிரைமீதோ, முற்காலத்திற்போல் பிரயாணம் செய்யப்படுமாகில் சாத்தியமா என்பது சந்தேகமே.

கிணற்றுத் தவளையாக இராமல் நானுவித நாட்டு வளப்பங்களையும் மக்கள் அறியவேண்டுமென்னும், உயரிய எண்ணத்துடன்தானே யாத்திரைகள் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று நினைக்க இடமுண்டு. யாத்திரை செல்லுங்கால், மனைவியையும் அழைத்துச் சென்று நீராடி க்ஷேத்திரத்தைத் தரிசிக்காவிட்டால் புண்ணிய மில்லையென்று பல நூல்கள் நுவலுவது பெண்பாலாரும் அத்தகைய அறிவு வாய்க்கப் பெற்றவராக வேண்டும் என்னும் நேரிய கருத்தினலன்ருே? எனவே, சிதம்பரத்தைச் சேவிக்க முக்தியென்று பலர் அங்குப் போவதற்கும், பள்ளிகொண்ட பரமனைப் பார்க்கலாமெனச் சீரங்கத்திற்குச் சிலர் செல்வதற்கும், பட்டினத்

தார் மணலிற் புதைந்துகொண்ட திருவொற்றியூரேகித் திருத் தியாகேசரைத் தரிசிக்கலாம் எனப் பக்தர் பலர் அடைவதற்கும், வடலூர் ஞானசபை, சேக்கிழார் வாழ்ந்த குன்றத்தூர், கதவு திறக்கப்பட்ட திருமறைக்காடு முதலான இடத்திற்கு ஆன்மகோடிகள் நண்ணுவதற்கும், கங்கை கலக்கும் மகாமகக்குள ஸ்நானங்கருதிக் கும்பகோணம் குறுகுவதற்கும், உள்ளூர ஓர் அருங்கருத்துப் பொதிந் திருக்கிறது என்றால் அது பிழையன்றே.

சமயப்பற்றுடன் பிரயாணம் மேற்கொள்வோர் சில ரிருக்க, கல்வி குறித்தோ, தொழில் குறித்தோ அதனை மேற் கொள்வோர் பலருண்டு. ஆனால், பிரயாணஞ் செய்யும் பொருட்டுப் பிரயாணம்—அதாவது சிறுவர் அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கும், முதியோர் அனுபவத்தை யடை வதற்குமான பிரயாணஞ்—செய்பவர்களது தொகை நம் நாட்டில் மிகச்சிறிதே என்று சொல்லிவிடலாம். இப் பொழுது பிரயாணத்திற்காகவே பிரயாணஞ்செய்பவர்களை விட நம் நாட்டில் அதிகமான பேர்கள் பிரயாணத்தை மேற் கொள்ளவேண்டும். எந்த இரயில்வே கம்பெனிக்காவது ஏஜண்டாக இருந்துகொண்டோ, எந்த மோட்டார்க்கார ருடைய தூண்டுகோலின்மீதோ இது இவ்வாறு எழுதப்படு கிறது என்று எவரும் எண்ணவேண்டாம். நண்பர்கள் தத் தமக்குள்ள அறிவை இன்னும் பெருக்கிக்கொள்ள வேண் டும் என்ற ஒரே கருத்தினாற்றான் இது வரையப்படுகிறது.

நிற்க, பிரயாணங்களால் ஏற்படும் நன்மைகள் எவை யென்பதை நோக்குவோம். அறியாமையாற் றம்மையே பெரியாராக மதித்து வருஞ் சிலருக்குப் புத்தி வரும். தன் னளவு பெரிய சீமான் தன்னூரிலில்லை என்று அகங் கரித்துத் திரியுமொருவன் வேற்றூர் சென்று பார்ப்பானே யானால் “இவர் செல்வத்துக்கு நம்மது எம்மாத்திரம்?” என்று அவனே சொல்லும்படி சிறந்தோங்குஞ் சீமானைக் கண்டு இறுமாப்பொழிவான். தன்னூரில் பட்டம் பெற்ற

வன் வேறொருவனில்லை என எண்ணித் தலை கால் தெரியாது திரியும் ஒருவன் பிறிதோர் ஊர் சென்று வருவானேயானல், "பட்டதாரிகளைக் கூடைகூடையாக வாங்கலாம் போலிருக்கிறதே" என்று கண்டு தன்னகந்தை அகற்றுவான். இப்படியே கைத்திறமிக்க தொழிலாளியும், சக்திமிக்க மந்திரவாதியும், முக்கால முரைக்கும் ஜோசியனும், தீராத நோயைத் தீர்க்கும் வைத்தியனும், நன்ருக அலங்கரிக்கும் அர்ச்சகனும், சக்கர வட்டமாகப் பேசுஞ் சொல்வல்லானும் உண்மையறிந்து செருக்கொழிவர்.

இரண்டாவதாக, பிறரைப்பற்றிய தப்பெண்ணங்கள் நீங்கும். "ஆணைதாண்டவபுரத்தார் அத்தனை பேரும் அயோக்கியர்கள், கும்பகோணத்தார் அவ்வளவுபேரும் போக்கிரிகள், காரைக்காலார் அனைவரும் கயவர்கள், மதராஸார்முழுவதும் முடிச்சவிழ்க்கிகள்" என்பனபோன்ற தப்பபிப்பிராயங்கள் நீங்குவதற்கு அவ்வவ்வூரைச் சென்று சேர்ந்து காண்பதே தகுந்த வழியாக இராநின்றது.

மூன்ருவதாக, சமாதானமும் அமைதியும் நாட்டில் நிலவுவதற்குப் பிரயாணங்கள் பயன்படுகின்றன. நம் நாட்டாரைப்பற்றிப் பிறநாட்டார் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களை, பிரயாணஞ் செய்யுங்கால் களைந்து வருவோமாயின் அவர்கள் நம்பால் நேசமும் அன்புங்காட்டிப் பழகுவார்கள். ஆதலால், ஊர் திரும்பியதும் அவர்களிடத்து வெறுப்புக் காட்டலாகாது என நம்மனோர்க்குச் சொல்லி, ஊரில் அமைதியையும் சமாதானத்தையும் பொருத்துவிக்கலாம்.

நான்காவதாக, வருவாய் விருத்தி யுண்டாகும். நாம் சுற்றுப்பிரயாணஞ் செய்துவரும் சமயங்களிலே, எவ்வெவ்வூரில் எந்த எந்தச் சாமான் மலிவாகக் கிடைக்கிறதென்பதை அறிந்துகொண்டால், ஊர் திரும்பியதும் அவ்வச் சாமானை அங்கங்கிருந்து தருவித்து ஊதியம் பெறலாம். அதேபோல, எவ்வெவ்வூரில் எந்த எந்தச் சாமான் அருகி

யிருக்கிறது என்பதை அறிந்துகொண்டால் அங்கங்கு அந்த வந்தச் சாமானைச் சேர்ப்பித்தும் ஊதியமடையலாம்.

ஐந்தாவதாக, தன்னம்பிக்கை பிறக்கும். பல ஊர்களிற் சுற்றுங்கால், ஒரு துறையில் இல்லாவிட்டால் இன்னொரு துறையில் இறங்கி, ஒரு தொழில் இல்லாவிட்டால் இன்னொரு தொழிலை மேற்கொண்டு உயிரை உடலுடன் வைத்துக் கொள்ளக்கூடிய சக்தி தனக்குமுண்டு என்பதில் நம்பிக்கை பிறக்கும்.

ஆறுவதாக, எவ்வளவு குறுகிய மனமும் விரியும். இன்னாரோடு பேசலாகாது, இன்னாரோடு பழகலாகாது, இன்னாரைத் தொடலாகாது, இன்னாருக்குக் கொடுக்கலாகாது என்றவைபோன்ற குறுகிய எண்ணங்கள் எல்லாம் குறுகி, "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்றது போன்ற விரிந்த நோக்கம் பிறந்து வளரும்.

10. புழுப் பூச்சிகள்

புழுக்களும் பூச்சிகளும் மிகவும் அற்பமானவை என்றும் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி வீண்காலப் போக்கே யென்றும் நம்மில் பலர் எண்ணுகின்றனர். படித்தவர் களிற் சிலரே இப்படி இருக்கும்பொழுது படிக்காதவர் களைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. நம்மைச்சுற்றி வீட்டிலும் வெளியிலும் பலவகைப் புழுக்களும் பூச்சிகளும் இருக்கின்றன. இவற்றை நன்கு கவனித்து இவற்றின் தன்மைகளையும் குணவிசேஷங்களையும் தெரிந்துகொள்ள நமது வீட்டுப்பெரியோர் நம்மை விடுவதில்லை. சிறுவர் களாயிருக்கும்பொழுது பூச்சிகளைக் கவனித்து இவற்றுடன் விளையாட நமக்கு விருப்பமிருந்தது. ஆனால் நம் வீட்டில் பெரியோர்கள் அவ்வாறு செய்வதைத் தடுத்திருக்கின்ற னர். அதனால் இப்பிராணிகள் அற்பமானவை என்ற எண்ணமே நம் மனத்தில் ஊறியிருக்கிறது.

இப்பிராணிகளுக்கு முதுகெலும்பு இல்லை. இவற்றில் எத்துணையோ வகையுள்ளன. ஒவ்வொரு வகையிலும் கோடானுகோடி சீவராசிகள் இருக்கின்றன. பூச்சிகளே உலகத்துப் பிராணிவர்க்கங்களில் அதிகமானவை. நமது வீடுகளில் சாரை சாரையாக எறும்புகள் கிளம்புகின்றன; கூட்டங்கூட்டமாகக் கொசுக்களும் புறப்படுகின்றன; வீட்டை அசுத்தமாக வைத்திருந்தால் ஈக்கள் மொய்க்கின் றன; வீட்டைக் கவனியாமலே விட்டால் நூல் நூறகத் தெரிந்த பூச்சிகள் தமது வேலையைத் தொடங்குகின்றன; அப்பொழுது ஒட்டடைகளும் சிலந்திக் கூடுகளும் மலியும்; ஆகவே நாம் கவனிக்காத வீடுகளைப் புழுப்பூச்சிகள் கவ னிக்கத் தொடங்கிவிடுகின்றன என்பது ஏற்படுகிறது; அவைகளே வீட்டுக்கு உடைமையாளிகளாகின்றன!

இச்சிறு பிராணிகளின் உணவு பல வகைப்படும். பல நிறங்களைப் பெற்ற அழகிய வண்ணாத்திப்பூச்சி சலபப்

பூச்சிகளும், தேனீயும் வேறுசில வண்டுகளும் மலர்களில் உண்டாகும் தேனையே ஆகாரமாகக் கொள்ளும். இப்பிராணிகளால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. செடிகொடிகள் காய்பிடிப்பதற்கு ஒரு மலரிலிருக்கும் மகரந்தப்பொடி மற்றொரு மலருக்குக் கொண்டுபோகப் படவேண்டும். இவ்வாறு மகரந்தம் கொண்டுபோகப்படுவது பெரும்பாலும் வண்டினங்களாலேயே நடைபெறுகிறது. தேனீக்கள் கட்டும் கூடுகளிலிருந்து நாம் தேனைப் பெறுகிறோம். திரவமான ஆகாரத்தையே தேடும் வேறு சில பூச்சிகள் உள்ளன; கொசு, மூட்டைப் பூச்சி, தெள்ளுப் பூச்சி, பேன் முதலியன பிராணிகளின் இரத்தத்தை விரும்புகின்றன. ஈயோ அசுத்தங்களில் உட்கார்ந்து அதிலுள்ள திரவமான பொருளைத் தன் வாயிலுள்ள குழாய் மூலமாக இழுத்துக் கொள்ளும். தத்துக்கிளி கம்பளிப்புழு முதலியன இலைகளை உணவாகக் கொள்ளும்.

புழுப்பூச்சிகளில் நமக்குத் தீமை விளைக்கின்றவை சில உள்ளன. இவற்றை ஒழிப்பதற்காகவாவது இவற்றின் குணாதிசயங்களை நன்கு அறிவது அவசியமாகும்; ஈயால் பல வியாதிக் கிருமிகள் பரவுகின்றன. அசுத்தமே இது வளருவதற்குக் காரணமாதலின் அசுத்தத்தை உடனுடன் அப்புறப்படுத்தி வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கொசுவால் மலேரியா என்ற விஷக்காய்ச்சல் பரவுகின்றது. கொசுக்களில் இரண்டுவகை; ஒன்று அனோபிலிஸ், மற்றொன்று கூலக்ஸ். இவற்றில் முதல் வகைப் பெண் கொசுக்களே மலேரியா கிருமிகளை ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவனுக்குக் கொண்டு செல்லுகின்றனவாம். எலிகளை வாகனமாகக்கொண்ட தெள்ளுப் பூச்சி பிளேக் என்ற கொடிய தொத்து வியாதியைப் பரப்புகிறது. பிளேக் நோயை உண்டாக்கும் பல கிருமிகள் தெள்ளுப்பூச்சியால் சுமந்து செல்லப்படுகின்றன. தெள்ளுப் பூச்சியைப்போல் வியாதியைப் பரப்பும் பூச்சிகள் இன்னும் பலவாகும். தொத்து வியாதிகளைக் குறைப்ப

தற்கு நாம் கையாளும் ஒரு வழி இப்பூச்சிவகைகளை ஒழிப்பதே.

சிற்சில புழுப் பூச்சிகளால் விபரீதமான தீமையில்லாவிடினும் முற்றிலும் தொந்தரவு இல்லாமற் போகவில்லை. சிலந்திகள் கூடுகட்டி வீட்டை அசுத்தமாக்கும். பாச்சை இரவில் பாடிக் காதைத்துளைப்பதுடன் நமது புத்தகங்கள் ஆடைகள் இவைகளிலும் சிறிய துளைகளையும் செய்யும்; நமது விரல்களைச் சில விடங்களில் கடித்துவிடுவதும் உண்டு. குளவிகளும் பெரிய கருவண்டுகளும் நம்மைக் கொட்டிக் கொட்டிய பாகத்தைச் சிறிது நேரம் பிசைந்துகொண்டிருக்கப்பண்ணும். பூரான், செவியான், தேள் முதலியன அதிகமான தொந்தரவைக் கொடுக்கக்கூடியன. இவற்றைக் கண்டாலே பலருக்கு அதிக பயமுண்டு. எறும்புகள் நமது ஆகாரப் பொருள்களைப் பங்கு கொள்ளாமல் அவற்றை விலக்குவது நமக்குப் பெருந்துன்பமாயிருக்கிறது. சர்க்கரை, சர்க்கரை சேர்த்த உணவுப் பொருள்கள் விஷயத்தில் நமக்கும் எறும்புகளுக்கும் யாதோர் அபிப்பிராய பேதமு மில்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது! எறும்பின் ஒரு வகையான கரையான் மரங்களையும் புத்தகங்களையும் ஜீரணிக்கத்தக்க குடலைப் பெற்றிருக்கின்றது. மாணவர்களால் ஜீரணிக்கமுடியாத புத்தகங்களையும் கரையான் ஒரு கை பார்த்துவிடும்!

மனிதர்களுக்கு நன்மையே செய்யும் பல புழுப் பூச்சிகளும் இருக்கின்றன. தேனீயின் உதவி முன்பே கூறப்பட்டது. மண்புழுவோ தோட்டக்காரர்களுக்கு நண்பனாகும். மண்ணைத் துளைத்துச் செல்லும் குணமுடையதால் ஆயிரக்கணக்கான புழுக்களுள்ள ஒரு தோட்டம் இவற்றால் நன்றாக உழப்படுவதுபோலாகிறது. வண்ணாத்திப் பூச்சி தேனீ முதலியவற்றால் தாவரங்கள் காய் பிடிப்பதும் குறிப்பிட்டாயிற்று. சலப் பூச்சியின் ஒரு வகையே பட்டுப் பூச்சி; இதன் புழுக்கள் முருங்கை இலையைத் தின்று

வளர்ந்து பிறகு கூட்டுப் புழுவாகின்றன. இவை ஆக்கும் கூட்டு நூலே பட்டாகிறது. எறும்பு முதலிய சிலவற்றால் துன்பமிருப்பினும் நன்மையுமுண்டு; நாம் ஒதுக்கும் சில பொருள்களை இவை எடுத்துச் செல்வதால் வீடுகளைச் சுத்த மாய் வைக்கின்றன.

புழுப் பூச்சிகள் நமக்கு நன்மை கொடுப்பினும் தீமை விளைப்பினும், பொதுவாக இவற்றின் வாழ்க்கை கவனிப் போருக்குப் பெரிதும் இன்பத்தைத் தரும் பொழுது போக் காயுள்ளது. எத்துணையோ மனிதர்கள் அவ்வாறு கவனித் திருக்கின்றனர். எக்காலத்தும் கவிகள் வண்டுகள் முதலிய வற்றைப்பற்றிப் பாடியிருக்கின்றனர்.

பூச்சிகளின் வாழ்க்கையில் மிகவும் ஈடுபட்ட மேனாட்டு விஞ்ஞானி ஜீன் ஹென்றி வாப்ரே நத்தை, தவளை, தத்துக் கிளி, வண்டு, முதலிய பிராணிகளின்மேல் சிறுவயதிலேயே மோகங்கொண்டார். எளிய குடியில் பிறந்து மிகவும் கஷ் டப்பட்டாராயினும் இச் சிறு பிராணிகளைப்பற்றி அறி வதை அவர் எக்காலத்தும் கைவிடவில்லை. தக்க வயது வந்த போது அவர் ஊருக்கு வெளியே ஒரு வீட்டில் வாழ்ந்து வந் தார்; குடும்பத்தாரும் அவருக்கு மிகவும் உதவியாயிருந்த னர். அவருடைய தோட்டத்தில் பலவித புழுப் பூச்சிகள் போஷிக்கப்பட்டு வந்தன. அவரும் குடும்பத்தோரும் அவற்றைத் தினம் கவனித்துக் குறிப்புக்கள் எடுப்பதுண்டு. ஒரு கண்ணாடிக் கூண்டில் பத்துப் பன்னிரண்டு தேள்கள் விட்டிருந்தார்; வாப்ரேயும் அவர் மனைவிமக்களும் பலநாள் வரையில் இரவில் உண்டபின் அக் கூண்டைச் சூழ்ந்து அமர்ந்து கவனித்து வந்தனர். தேள்களுடைய கூட்டுற வும் வாழ்க்கையும் எவ்வாறு நடைபெறுகின்றன என் பதும் பிற செய்திகளும் கவனிக்கப்பட்டுவந்தன. இப்படி யாகச் சிறு பிராணிகள் உயிருடன் வாழும்பொழுதே கண் டறியப்பட்ட விஷயங்களையெல்லாம் அவர் பெரியதொரு நூலாக்கி நமக்கு உதவியிருக்கிறார்.

வாப்ரே போன்ற பல விஞ்ஞானிகளின் அபாரமான ஆராய்ச்சிப் பலனால் இச்சிறிய பிராணிகளைப்பற்றிப் பல அதிசயங்களை நாம் எளிதில் அறிந்துகொள்ளுகிறோம்.

பல பூச்சிகள் முட்டையினின்று வெளிவரும்பொழுது பெற்றோரைப்போ லிருப்பதில்லை. வண்ணாத்திப் பூச்சி பட்டுப்பூச்சி இவை முட்டையினின்று வெளிவரும்பொழுது புழுக்களை யொத்திருக்கின்றன. இப்புழுக்களுக்கும் கண்ணைக் கவரும் இறக்கைகளையுடைய வளர்ந்த பூச்சிகளுக்கும் யாதொரு ஒற்றுமையும் காணப்படுகிறதில்லை. புழுக்களே இலைகளைத் தின்று வளர்ந்து கூட்டுப்புழுவாக அசைவற்றுக் கிடந்து, பிறகு முற்றும் வளர்ந்த பூச்சிகளாக மாறிக் கூட்டைப் பிய்த்துக்கொண்டு வருகின்றன. தேனீ, எறும்பு, கொசு, ஈ முதலியவற்றின் வளர்ச்சியும் பொதுவாக இவ்வாறே உள்ளது. கொசுவின் வாழ்க்கை தேங்கிக் கிடக்கும் நீரில் தொடங்குகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் 'கொசுக் குழந்தைகள்' நீரில் நீந்தி நெளிக்கின்றன. இவையே காலக்கிரமத்தில் கொசுக்களாகி நீர் வாழ்க்கையை விட்டுப் பிராணிகளின் இரத்தத்தில் வாழத் தொடங்குகின்றன. கொசுப் புழுக்கள் நீரில் வாழும் பொழுது அவை அடிக்கடி நீர்மட்டத்திற்கு வந்து ஒரு சிறு குழாயை வெளியே நீட்டி மூச்சுவிடுகின்றன என்று தெரிகிறது. இதனால் கொசுக்களை அழிப்பதற்கு நீர்நிலைகளில் சிறிது எண்ணெயைக் கொட்டினால் போதும் என்று கண்டுபிடித்துள்ளனர்; ஏனெனில் எண்ணெய் படர்ந்த நீரின் வழியே அது நிலைத்துநின்று சுவாசிக்க முடியாதுபோகிறது!

மனித சமூகத்தைத் திருத்தியமைக்க வேண்டுமாயின் தேனீக்களிடமும் எறும்புகளிடமும் சென்று நாம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். என்ன கட்டுப்பாடு! இவை இரண்டும் தொழிலாளர்களின் சமூகம் என்று சொல்லலாம். சமூகத்தின் விருத்திக்குத் தடையாகவோ

உபயோகமின்றியோ இருக்கும் தேனீக்களும் எறும்புகளும் இச்சமூகத்தாரால் அறவே ஒழிக்கப்படும். தேனீயின் கூட்டில் இராணி ஈ கருக்கொண்டு முட்டையிடத் தொடங்கியபின் சோம்பேறிகளாகிய ஆண் ஈக்களையெல்லாம் வேலைக்கார ஈக்கள் அழித்துவிடுமாம். இரண்டு இராணி ஈக்கள் ஒரு கூட்டிலிரா. இவ்வேலைக்கார ஈக்கள் கூட்டிற்கு அனுகூலமான வேலைகளைத் தம்முள் பகுத்துக்கொண்டு சரிவரச் செய்துவருகின்றனவாம். தனக்கென்று ஓர் ஈயும் தேன் திரட்டுவதில்லை: எல்லாம் சமூக நன்மைக்கே. அநேகமாக இவ்வாறே எறும்புகளின் சமூகமும் வாழுகிறது.

சில புழுக்கள் தம்மைக் காத்துக்கொள்வது மிகவும் அதிசயத்தைக் கொடுக்கிறது. இலைப்பூச்சி அது வசிக்கும் இலைமேல் அமர்ந்தால் அதனுடைய விரோதிகள் அதைக் கண்டுபிடிப்பது மிகவும் அரிது. தத்துக்கிளி புல் வெளியில் கிடக்கும்பொழுது அதைக் காண முடிகிறதில்லை. குச்சி போலவே நிறமும் உடலும் படைத்த ஒரு பூச்சியும் இருக்கிறது. இது உலர்ந்த குச்சியைப் பற்றிக்கொண்டுநின்றால் இதை அக்குச்சியினின்றும் பிரித்தறிவது அரிதாகும். ஆப்பிரிக்காவில் விளக்கு ஈ என்று ஒரு பூச்சியுள்ளது; இதன் தலைமட்டும் மிகச் சிறிதாயிருந்தாலும் உருவத்தில் முதலையின் தலையைப்போலவே இருக்கிறதாம். இதன் காரணத்தை ஆராய்ந்ததில் இப்பூச்சிகளை ஆகாரமாகக் கொள்ளும் குரங்குகளைப் பயமுறுத்தவே இத்தலைகளைக் கொண்டிருக்கின்றன என்று தெரிகிறது. முதலைகள் குரங்குகளை ஆகாரமாகக்கொள்வதால், இவற்றிற்கு முதலைகளைக்கண்டால் பயம். இப்படிப் பலவகைகளில் பூச்சிகள் தற்பாதுகாப்பைச் செய்துகொள்ளுகின்றன. பூச்சிகளின் வகைகளையும் அவற்றின் வாழ்க்கை விநோதங்களையும் பார்க்கப் பார்க்க இச்சிருஷ்டியின் பெருமையை அறிகிறோம். பூச்சிகளைப்பற்றிய ஆராய்ச்சி வீண்காலப்போக்கே என்று சொல்வது பொருந்துமா என்று இப்பொழுது யோசித்துப் பாருங்கள்.

11. இலக்கியமும் விஞ்ஞானமும்

மனிதன் தோன்றிய நாள்முதல் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்துக்குக் காரணம், உலகிடைக்காணப் படும் பொருள்களின் தன்மைகளை அவன் அறிந்துள்ள அறிவே என்று கூறலாம். இந்த அறிவைக்கொண்டு தான் காணும் பொருள்கள் அனைத்தையும் அவன் ஏதாவ தொரு வகையில் தனக்குப் பயன்படுத்திக்கொள்ள முயல் கின்றான். இப்படிப் பார்க்கையில் அவனுக்குப் பயன் படாத பொருளே உலகில் இல்லை என்று துணிந்து கூற லாம். அவ்விதம் அப்பொருள்களைத் தனக்குப் பயன் படுத்திக்கொள்ள இயலச் செய்யும் அவனது அறிவை இலக்கியப் பகுதியென்றும் விஞ்ஞானப் பகுதியென்றும் இருபெருங் கூறுகளாகச் சொல்லலாகும். இலக்கியம் வெளிப் பொருள்களின் தன்மைகளை விடுத்து மனிதனது மனத்தையும் வாழ்க்கை லட்சியங்களையும் உருவாக்கவே பெரும்பாலும் முயல்கிறது. ஆகவே அது கால தேச வேறு பாட்டிற் கிணங்கவும், ஆங்காங்குள்ள சமுதாய வாழ்க் கைக்கொப்பவும் வேறுபட்டிருக்கும். ஆனால் விஞ்ஞான மோ, பொருள்களின் தன்மைகளை உள்ளது உள்ளவாறு உரைத்தலையே கொண்டிருக்கிறது. ஆகவே அத்தன்மை கள் காலதேச வேறுபாட்டினலாவது, சமூக வேறுபாட்டின லாவது பாதிக்கப்படாமல் எங்கும் எப்பொழுதும் ஒரே சீராய் இருக்கின்றன. இவ்விரண்டினல் ஏற்படும் உபயோ கத்தின் தராதரத்தைக் கடவுளாலும் கூறமுடியாது. அந்த அந்தக் காலத்திற்கேற்பவும், அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளுக்குப் பொருத்தமாகவும் அவைகளின் உபயோ கத்தில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றுகின்றன.

இலக்கிய விஞ்ஞான அறிவின் சக்திகளை ஓர் எல்லைக் குள் கட்டுப்படுத்த இயலாது. அவைகள் எல்லையற்ற சக்தி கள் பொருந்தியவை. இரண்டின் தன்மைகளும் வெவ் வேறானவை. அச்சக்திகள் நாளுக்கு நாள் வளர்ந்து

கொண்டே வருகின்றன. அவை கடலிலும் ஆழமுடையன; இமயத்தினும் உயர்ந்துள்ளன; வான வெளியினும் மிகுந்த பரப்பையுடையன. இவ்விரு பகுதிகளையும் துருவி உள்நோக்கின் அவைகளுள் கோடிக் கணக்கான பல துறைகள் தோன்றுகின்றன.

இன்று மனித வாழ்க்கையைச் சற்றே கவனித்தோமானல், பஞ்ச பூதங்களையும் மனிதன் தன் விஞ்ஞான அறிவின் மூலம் அடிமையாக்கி, அவைகளை எந்த எந்த வகையில் தனக்கு ஊழியம் புரியச் செய்துகொண்டிருக்கிருனென்பது தெளிவாகும். விடியுமுன் எழுப்பக் கடிகாரம் முதல், பிரயாணம் செய்ய மோட்டார், ரயில், ஆகாய விமானம், கப்பல் வசதிகளும், தொலைதூரச் செய்திகளை உடனுடன் கேட்க வானெலியும், தொலைப் பொருளைக் காண இயலச் செய்யும் கருவிகளும், ஏனைய பிறவும் விஞ்ஞான அறிவால் ஏற்பட்ட வசதிகளே அல்லவா! விஞ்ஞான அறிவு இழக்கப்படின் மனித ஜீவ யாத்திரையே நடவாது போலவே தோன்றுகிறது. ஆனல் இதனேடு இன்னெரு கேள்வியும் எழ இடமில்லாமலில்லை. இந்த விஞ்ஞான அறிவின் பயனல் தானே மனித சமூகம் தன்னை அழித்துக்கொள்ளப் புதுப் புது நாசகாரிகளையும் கொலைக் கருவிகளையுங்கூட, கண்டு பிடித்துத் தன் அழிவை நோக்கி விரைகின்றதென்றும் கேட்க முடியும். ஆனல் யோசித்துப் பார்த்தால் இந்நிலைக்கு விஞ்ஞான அறிவு காரணமன்று என்பது விளங்காமற் போகாது. மிதமிஞ்சிப் புசித்த உணவு நஞ்சாகிப் புசித்தவனைக் கொல்வதுபோல, தேவைக்கு அதிகமாகவும், வகைமுறையின்றியும் கொள்ளப்படும் விஞ்ஞான அறிவினல் ஏற்படுந் தீமைகளே அவை. பயன்படுத்துவோரின் பிழையால் அமுதும் நஞ்சாகலாம். ஆகவே, விஞ்ஞான அறிவை உயர் வகைகளில் உபயோகிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப் போதுமான மனப் பண்பு ஏற்படின் அக் குறைபாடு நீங்

கும். அவ்வகை மனப் பண்பு, இலக்கிய அறிவுப் பெருக் கத்தால்தான் ஏற்பட முடியும்.

மனித சமுதாயத்தின் அழிவை நாடாமல் நாம் முன் னேற வேண்டுமானல் இலக்கிய அறிவுப் பெருக்கத்தில் அக்கறை கொள்வது அவசியமாகும். இம் மண்ணுலகுக்கு இறைவன் அளித்தருளிய அமிர்தமென்றே இலக்கியத் தைக் கூறலாம். உலக சிருஷ்டியின் தத்துவமே இலக்கிய சிருஷ்டியில் பிரதிபலிக்கிறது. உலக சிருஷ்டி தத்துவத் தின் 'பிரதிபிம்ப' மென்றே இலக்கிய சிருஷ்டி தத்துவத் தைக் கூறல் வேண்டும். இலக்கியத்துக்கு மூப்பில்லை, மரணமில்லை. அது என்றும் இளமைகொண்டு இலங்கு கின்றது. இலக்கியச் சுவை கண்டோர் அதை எவ்வளவு பருகினும் தெவிட்டாது. மனிதனை மனிதனுக்குவது இலக்கிய அறிவே. வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை மனிதன் பரிகரித்துக்கொள்ள உதவிபுரிவது இலக்கிய அறிவே. தம்முள் இயங்கும் ஆசை, பாசம், பகை, சினம், பொருமை, புறங்கூறல், முதலிய தீவிசைகளால் தம் மனது அலைக்கப்படுதலை உணராதார் உளரோ? அப்போது வாழ்க்கையாகிய செடி வாடத் தொடங்குகிறது. அச் செடிக்கு மறுமலர்ச்சியைத் தருவது எது? இலக்கிய அறிவே. அஃதின்றேல் மனிதன் விலங்காகிருன்; இருளால் சூழப்படுகிருன். தன் முன் அவன் ஒளியை இழக்கிருன். அவ்வறிவே அப்போது அவனுக்கு உறு துணையாகி ஆறு தலையும், மனப் பண்பையும் தருகிறது. இவ்விதம் மனித னின் உளம் வளம்பெற்று வராவிடில் நாளடைவில் மனித னின் இலட்சியம் கீழ்நோக்கிச் செல்லுமாதலால் மனிதக் கூட்டம் விலங்குக் கூட்டமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

மனித சமுதாயம் முன்னேறி நல்வாழ்வில் இலங்க வேண்டுமானல் இலக்கிய விஞ்ஞானமாகிய இவ்விரண்டின் அறிவும் சமமாக முன்னேறி வருதல் இன்றியமையாத தாகும். இவை இரண்டும் தொடர்பற்றவையல்ல. சிறிது

கவனித்தால் இவைகளில் எது குறைவுபடினும் அதனுல் சமுதாயம் பாதிக்கப்படுவது தெரியும்.

இவை இரண்டும் ஒன்றற்கொன்று தொடர்புடையன என்பது எங்ஙனமெனில், விஞ்ஞான அறிவைப் பிறர்க்கு அளிக்கும் முறை இலக்கிய ஒழுங்கைச் சார்ந்ததாகும். விஞ்ஞானமே இலக்கியத்துக்கு விஷயமாகின்றது. வேறு வகையாகக் கூறின் ஒன்றில்லையேல் மற்றதும் இல்லை. ஆகவே இவ்விரண்டு அறிவுத் துறைகளும் சமுதாயத்துக்கு இரண்டு கண்கள் எனத்தகும். இவ்விரண்டு கண்களும் எவ்வித ஊனமுமின்றி எப்பொழுது பாதுகாக்கப்படுகின்றனவோ அப்பொழுதே மனித சமுதாயம் அமைதியில் நிலவும் என்று கூறுவது உயர்வு நவிற்சியாகாது.

12. அரைகுறைப் படம்

ராஜா ரவிவர்மா—ஓவிய உலகத்திலே தமது கீர்த்தியை நிலைநாட்டிய பெருங் கலைஞர்—மலை நாட்டை விளக்க வந்தவர். இன்றும் ஒவ்வொரு வீட்டின் சுவர்களிலும் தொங்கும் சித்திரங்களில் கொலு வீற்றிருக்கிறார். புராணங்களிலும் மந்திர சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்ட செய்திகளை அறிந்து அவற்றிற்கு விரோதமில்லாமல் தெய்வங்களின் அழகிய திருவுருவங்களைச் சிருஷ்டித்துத் தந்தவர் அவரே. எந்தத் தெய்வத்தைப்பற்றி நினைத்தாலும் ரவியினுடைய படந்தான் நமது அகக்கண் முன்வந்து நிற்கின்றது.

அவருடைய தூரிகை (வர்ணம் தீட்டும்கோல்) எவ்வளவோ தெய்வ உருவங்களைச் சிருஷ்டித்த மகிமை உடையது. அதற்கு ஒரு நாயின் உருவத்தை எழுதும் ஆற்றலில்லாமற் போயிற்றென்பதை நம்ப முடியுமா? உண்மையில் அந்த ஆற்றல் அந்தத் தூரிகைக்கு ஒரு சமயம் அமையவில்லை.

யாரோ ஓர் ஆங்கிலக் கவி தம்முடைய நாயைப் பாராட்டிப் பாடியிருக்கிறாரல்லவா? ரவிவர்மா தம்முடைய அருமை நாயைச் சித்திரிக்க விரும்பினார். அதன் வளம் செறிந்த உருவத்தை அழகாக எழுதி முடித்தார். அதன் வாயில் நுரை இருப்பதாக அமைக்க வேண்டியஃதுதான் பாக்கி.

'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்பது ஒரு பழமொழியல்லவா? அவருடைய ஓவியத்திறமை நாய்வாய் நுரையை எழுதுவதிற் பலிக்கவில்லை. பலமுறை எழுதி எழுதி அழித்தார். வர்ணந் தீற்றித் தீற்றிக் கலைத்தார். ஒரு முறையாவது அவருடைய கண்களுக்கு அந்தச் சித்திரம் பூர்த்தியடைந்ததென்ற திருப்தியுண்டாகவில்லை.

மேஜையின்மீது நாயின் படம் கிடக்கிறது. கடைசி முறையாக வர்ணந்தீற்றிப் பார்த்த ரவிக்கு மனம் சலிப் படைந்து விட்டது. வாய் நுரையைத் தம்மால் எழுத முடியாததற்காக வருந்தினர். எந்த எந்த வர்ணங்களைக் கலக் கலாமென்று யோசித்தார். ஒன்றும் தெரியவில்லை. சாய்வு நாற்காலியில் வந்து படுத்துக்கொண்டார்.

அவருக்கு யோசிக்க யோசிக்க கோபந்தான் உண்டா யிற்று. பக்கத்தில் ஒரு பலகையில் கடற்பஞ்சும் அதனருகில் சுத்த ஜலமும் இருந்தன. சித்திரங்களில் வர்ணங்களை அழிப்பதற்குப் பயன்படுபவை அவை.

“இனி இந்த முயற்சியில் பயனில்லை. இது ஒழிந்து போகட்டும்” என்று பல்லைக் கடித்துக் கொண்டார். ஈரமாக இருந்த கடற்பஞ்சை எடுத்துக் கோபத்தோடு மேஜையின் மீதிலிருந்த படத்தின்மேல் எறிந்துவிட்டுத் தொப் பென்று சாய்வு நாற்காலியில் விழுந்து கண்ணை மூடிக் கொண்டார். மிகவும் கஷ்டத்துடன் வீடு வாசல்களைத் தியாகம் பண்ணிவிட்ட துறவியின் மனத்தைப்போல அவர் மனம் இருந்தது.

பத்து நிமிஷங்கள் செயலற்றுக் கிடந்தார் ரவி. அவருடைய உணர்ச்சி கொஞ்சம் சாந்தமாயிற்று. “என்ன காரியம் செய்துவிட்டோம்! பொறுமையை இழந்து ஒரு பிரேம பூர்வமான காரியத்தை உருக்குலைத்து விட்டோமே! மயிர் படியவில்லையென்று கழுத்தையே வெட்டிவிட்டோமே!” என்று இரங்கினர். பல நாளாக யோசித்து அன்பினல்செய்த ஒரு காரியம் பொறுமை இல்லாமல் வீணுக் கப்படலாமா?

தட்டித்தள்ளாடி எழுந்தார் ரவி. தடுமாற்றத்தோடு தமது கோபத்துக்கு இலக்கான படத்தருகில் மெல்ல வந்தார். நெடுநாளாக அன்புடன் வளர்த்துவந்த ஒரு குழந்தையின் பிணத்துக்கருகில் செல்லும் ஒருவனைப்போல்

13. கலாசாலைப் படிப்பு

உலகின் பல பாகங்களி லிருந்தும் மாணவர்கள் குறித்த ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து பல பொருள்களைப் பற்றிப் படிக்குமிடம் கலாசாலையேயாம். ஆசிரியரும் மாணக்கருமாக, உலகின் பல வேறு பாகங்களிலிருந்து ஒன்று கூடித் தங்கள் அபிப்பிராயங்களைக் கலந்து கொள்ளுவதாலும், நடைமுறையில் காட்டுவதாலும் கலாசாலை பலவிடங்களின் நாகரிகத்தை உணர்வதற்கு ஏற்ற இடமாகின்றது. 'கலப்பு - உறவு' என்பது மனித இனத்திற்கு இயற்கையில் அமைந்த குணம். மக்கள் பலரும் விரும்பி நாடுவதும் அதுவேயாகும். பலவகைப் பட்ட மக்களின் உறவைப் பெறும் இடம் கலாசாலை ஒன்றே. அம்மட்டோ! பலவகைப்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் அங்கு மலிந்து கிடப்பதால், கூடும் மாணவர் அம்முன்னோர் எழுதியவற்றை வாசித்து அவர்களுடன் உறவுபெறவும், தற்காலத்தவர் எழுதுவதைப் படித்து அவர்களின் நிலை, நாட்டு நிலை முதலியவைகளை அறியவும் கலாசாலை உதவி செய்கின்றது. கல்வியை நாடிப் பல்வேறிடங்களுக்கு நம் நாட்டு மக்கள் ஒரு காலத்தில் அலைந்து கொண்டிருந்தனர். ஆனால் தற்காலத்தில் பல்வேறு நாட்டு அறிஞர்கள் ஓரிடத்திற் கூடவும், அவர்களிடம் மாணவர் தங்கி அறிவுபெறவும் தக்க வசதிகள் கிடைத்திருக்கின்றமையால் கலாசாலை பல விதக் கலைகளை ஒரே இடத்தில் பல மாணவருக்கு ஊட்டி வருகின்றது.

"பல கலைகளும் எளிய நடையில் எழுதப்படின் புத்தகங்கள் போதுமே, ஆசிரியர் எதற்கு?" என்பது சிலர் மனத்தில் எழும் நூதன எண்ணமாகும். கையில் புத்தகத்தை வைத்துக்கொண்டு, அதனைப் பிறர் வாயாற் கேட்க வேண்டுமென்று தக்க ஆசிரியர்களைத் தேடி அலைபவர் எத்தனைபேர்! இவர்கள் இவ்வாறு அலைவது ஏன்? ஆசிரி

அவர் காணப்பட்டார். அவர் கண்கள் இதயத்தையே இழந்துவிட்ட ஒருவனுடைய நோக்கத்தோடு காணப்பட்டன. அவருடைய உழைப்பை அவரல்லவா அறிவார்!

மேஜைக்கருகில் வந்தார். தாம் எறிந்த கடற்பஞ்சை மெல்ல எடுத்துக் கீழே எறிந்தார். ஆ! என்ன ஆச்சரியம்! இது கனவா; அல்லது நனவுதானு! அவர் தம் கண்களையே நம்பவில்லை. என்ன செய்தி? அந்தப் படத்தின் வாயில் யாராலும் அமைப்பதற்கரிய நுரையின் வடிவம் மிகவும் அழகாக அமைந்திருந்தது. இது உண்மைதானு? முற்றிலும் உண்மை. ரவி எறிந்த கடற்பஞ்சு நேராகப் படத்தில் நாயின் வாயிருந்த இடத்தில் வந்து விழுந்தது. அதில் அளவாக இருந்த ஈரம் அந்தப் பத்து நிமிஷங்களில் நுரை போல ஓர் உருவத்தை அமைத்துவிட்டது.

ரவியின் நாய்ப்படம் கடற்பஞ்சால் முற்றுப்பெற்றது. அவருடைய மனம் குதூகலமடைந்தது.

கலந்து கற்பதனுல்தான் கல்வி தெளிவுபெற முடியும். கல்விமட்டுமோ! அரசியல் துறையும் அவ்வாறே! சட்ட சபைகள், பாராளு மன்றங்கள் இவற்றின் அவசியம் என்ன? நாட்டுக்குத் தேவையானதைக் கலந்து ஆலோசித்துச் செய்வதற்கல்லவோ! மன்னவன் தன் எண்ணப்படி எவரையும் கேளாது அரசியற் காரியங்களைச் செய்வது தவருக இருக்கலாம் என்று உணர்ந்தே, ஓர்ந்து செய்வதற்காகச் சட்டசபைகளும் பிற மன்றங்களும் ஏற்பட்டன. உண்மையில் இவற்றை அரசியல் கலாசாலை எனினும் ஒக்கும்; எவ்வாறு? அங்கு அறிஞர் ஒன்றுகூடி நாட்டுக்கு நன்மைபுரியும் நோக்கத்துடன் கலந்து ஆலோசிப்பதால். நாட்டின் பல்வேறு மதங்களும் எவ்வாறு பரவப் பெறுகின்றன? ஆலயங்களிலும், மடங்களிலும், பள்ளிகளிலும் குருக்கள் செய்யும் போதனைகளை மக்கள் கேட்டு மனமகிழ்வதால் அல்லவா! கலாசாலை வகுப்பு முறையில் மத குருக்கள் உபந்யாசங்களும் குறித்த இடங்களில் தொடர்ந்து நடப்பதால் மக்கள் நாள்தவருமல் வந்து கேட்டு ஒவ்வொரு கொள்கைக்குத் தம்மை உரிமைப் படுத்துகின்றனர். இவ்விடங்களைச் சமயக் கலாசாலை என்பது பொருந்தும்.

பல நாட்டு மக்கள், பல கொள்கை மக்கள், பல கலை மக்கள் ஓரிடத்திற் கூடி ஆராய்ந்து படிப்பதால் கலாசாலை மாணவர் எதனையும் மூடமாகப் பற்ருமல், ஆராய்ந்து உண்மை உணர்வுபெற அக் கூட்டம் ஏதுவாகின்றது. சரீர வளர்ப்புக்குப் பொருள்தேடக் கல்விதரும் கலாசாலை அவ்விடத்திற்றுனே மாணக்கனுக்கு 'உண்மையை நாடு' என்று உபதேசிக்கின்றது, உண்மையை நாடுவதாவது என்ன? புத்தியைப் பெருக்கித் தெளிவுறுதலே உண்மையை நாடுதலாம். புத்தியைப் பெருக்கித் தெளிவுபெறல் என்றவுடன் மாணக்கர் தம் திறமையால் ஏதேனும் ஒன்றில் சிறந்து விளங்குதல் என்று கருதக்கூடும். பலவகை விளையாட்டுப் போட்டி, நாவன்மைப் போட்டி, இசைப் போட்டி, கைத்தொழிற் போட்டிகளிற் சிறந்தவர் பெயர்களைப் பாடசாலை

யர் முகங்காணுது புத்தகங்களை மட்டும் கற்றுத்தெளிந்தவர் களாயிருப்பின், அவர்கள் மனத்தைவிட்டு அறியாமை, ஐயம், திரிபுகள் ஒருநாளும் நீங்குவனவல்ல. பேச்சில் வல்லார் ஒன்றைப் பிறழக் கூறினும் இவர்கள் அதனை மறுக்கத் தெரியாமல் மருண்டு நிற்பர். ஆசிரியர் மூல மாகக் கல்வி கற்று நெஞ்சழுத்தங் கொண்டவரோ, உள் ளத்தில் உண்மை உணர்ச்சி வேரூன்றி யிருக்கின்றமை யின் தகாதனவற்றைக் கடிகின்றனர்; தக்கவற்றை ஒப் புக்கொள்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? ஆசிரிய ரால் பல ஐயங்களும் அகற்றப்பெற்றுத் தாம் கற்ற கல்வி யில் அடைந்துள்ள உறுதியே அன்றே! ஆசிரியரின்றிக் கற்ற கல்வி அரைகுறைக் கல்வியாய், கற்றாரைக் கண்டஞ் சும் நிலையில் ஒருவரை வைக்கின்றது. ஆசிரியரே நூல் ஆக்கியோர் கருத்துக்களைத் தெளிவாக்கி விளக்குகின்றார். இக்காரணத்தால் மாணவர் ஆசிரியரை விருப்புற்றுப் பாராட்டுவது போல புத்தகங்களைப் பாராட்டுவதில்லை. ஏன்? மாணக்கன் ஐயுறுங்காலத்து இவை உதவி புரிவன அல்லவே! ஆதலின் விஷயங்களின் உண்மையை அவ்வக் கலைகளில் வல்லார் வாய்க்கேட்டு உணரவேண்டியதே முறையாகும்.

அவையத்து முந்தி யிருக்கும் ஆற்றல்பெற ஒருவன் தக்க கல்வியும் நல்லொழுக்கமும் பெற்றிருக்கவேண்டும். கல்வியும் ஒழுக்கமும் சேர்ந்த நிலையே நிறையென்று கூறப்படும். நிறைவுடைமை எவ்வாறு ஒருவனிடம் நிலவ முடியும்? பெரியோர் கூட்டுறவால் அது ஏற்படவேண் டும். நம்நாட்டு மக்கள் இற்றைநாள் உள்ளத்திலும், ஒழுக்கத்திலும் பெரியோரைப் பின்பற்றுவதிலும் அவர் தம் புறக்கோலத்தினையே அதிகம் பின்பற்றுகின்ற னர். அன்னாரை நல்வழிப்படுத்த ஓர் ஆசிரியர் அவசிய மாவார். ஓர் உத்தம ஆசிரியரால் பல உத்தம மாணவர் தோன்றக்கூடும். இந்நிலைமை ஏற்படுவதற்காகவே கலா சாலைகள் ஏற்பட்டுள்ளன.

களிலும் பத்திரிகைகளிலும் எழுத்திலும் படத்திலும் காட்டிச் சிறப்பிப்பது வழக்கமாக இருக்கின்றது. இது புத்தியின் பெருக்கத்துக்குச் சான்றாகாது. இது அவ்வக் கலையில் அம் மாணவர் கொண்ட ஆர்வத்தையும் அதனால் அவர் பெற்றிருக்கும் தேர்ச்சியையும் வெளிப்படுத்தும். பின்னர், அறவு வளர்ச்சி என்பதுதான் என்ன?

உலகம் பலவகைப்பட்ட மக்களைக் கொண்டுள்ளது. ஒருவன் பலவாண்டுகளாகப் படித்த கல்வியின் பயனால், பலவகைப்பட்ட மக்கள் வாழும் உலகத்தில் அமைதி குலையாமல் வாழக் கற்றுக்கொள்வதே புத்தியின் பெருக்கமாகும்.

“பலகற்றும் உலகத்தோ டோட்ட ஒழுகல்
கல்லார் அறிவிலா தார்”

என்று திருவள்ளுவர் கூறிப்போந்தார். கலாசாலைப் படிப்பின் பெருநோக்கு இதுவேயாகும். இதற்காகவே பல கலைகளைக் காட்டியும் பல செய்திகளை அறிவித்தும் மாணாக்கர் மனத்தைப் பண்படுத்துகின்றனர்.

தாய் கட்டிய கூட்டில் வாழ்ந்த பார்ப்பு உலக வெளியில் வந்தவுடன் அறியாமையில் தான் முன்னிருந்ததை உணரும் அம்முறையில் கலாசாலை வாழ்வுபெற்ற ஒரு மாணவன் அக்கல்வியை முடித்த நாளில் தன் முக்கிய நிலையை நினைத்தால், தான் முற்றும் மாறியிருப்பவனாக உணரவேண்டும். தன் முன்னைய மடமையை எண்ணி முறுவல் கொள்ளவேண்டும். அவ்வாறாயின் அவன் கலாசாலை சென்றதால் பயன்பெற்றவ னாவான். அவ்வாறன்றி, “என்ன கலாசாலை, நல்ல விடுதிச்சாப்பாடு, நல்ல இருக்கை, நல்ல உடுக்கை, நல்ல விளையாட்டு, நல்ல யோக்யதா பத்திரம்” என்று இம்மட்டோடு ஒருவன் திருப்தியுறுவானாயின் அவன் கற்றும் கல்லாதவனே. ‘அறிதோறும் அறியாமை’ கண்டவனே உண்மை கண்டவன்; அவனே உயர்ந்தவன்; அவனே இவ்வுலகம் பின்பற்றத் தக்கவன்.

14. சிறையிருந்த செல்வி

பூவினை வெறுத்து அயோத்தி மன்னன் பொன்மனை புகுந்து கணவனுடன் நாடு துறந்து காடு புகுந்த கமலச் செல்வியை இலங்கை வேந்தன் தங்கை தன் கண்களால் நோக்கினுள். பெண்மையும் பேதுறும் பேரழகு வாய்ந்த சீதையைக் கண்ட பொழுது,

"கண்பிற பொருளிற் செல்லா
கருத்தேனில் அஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால்
என்படும் பிறருக்" கென்று

அரக்கர் கோன் தங்கை திகைத்து நின்ருள். பின்னர் அம்மங்கை மானபங்க மடைந்து இலங்கை மாநகரில் இணையற்ற வேந்தனுக விளங்கிய தமையனிடம் தன் முறையை முறையிடும் வாயிலாகச் சீதையின் திருந்திய நலத்தைச் சிறிது சொல்லியும், சொல்லாமல் மறைத்தும் அரக்கன் மனத்தில் ஆசையென்னும் அனலை மூட்டினுள். "ஐயனே ! * * * நீ நாளையே சென்று அந்நலங்களைக் காண்பாயாதலின் நான் சொல்வதும் மிகையாகும்" என்று வீரன் தங்கை வினயமாக மொழிந்தாள். இம்மொழிகளைக் கேட்ட மன்னன் தங்கையின் பொருட்டு அமர்புரிந்து ஆவிதுறந்த கரனையும் மறந்தான். மானபங்கமுற்ற தங்கையால் தனக்கு நேர்ந்த கடும்பழியையும் மறந்தான். வலிமை வாய்ந்த கோசல வீரனது வரிசிலையையும் மறந்தான். நிறையமைந்த மாதரை முறையிகந்து பற்றினுல் சிரம் வெடிக்குமென்று அயன் அருளிய சாபத்தையும் மறந்தான். செவியாரக் கேட்ட சீதையை மறவாது தன் உள்ளத்தில் அந்நங்கையை அழகொழுக எழுதி அவ்வுயிர் ஓவியத்தைக் கண்டு உளம் களித்தான். அசோகவனத்தில் அருஞ்சிறை வைப்பதன் முன்னரே அரக்கர்கோன்

அழகிற் சிறந்த அம்மங்கையைத் தன் மனச் சிறையில் வைத்து மகிழ்ந்தனன்.

"மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான்"

என்று கம்பர் அரக்கன் செயலை அழகுறக் கூறி அருளினார். இவ்வாறு பூவினை நீத்துவந்த புனித நங்கை அரக்கன் புன்மனம் புகுந்தாள்.

இங்ஙனம் மங்கையை மனத்தில் வைத்த மன்னவன் அவள் நலங்களையே நினைந்து நினைந்து நலிவானாயினான். * * * இவ்வாறு நையலுற்ற இலங்கை மன்னன் தன் மாமனான மாரீசனை மாயமானாக அனுப்பி மங்கையின் மனத்தை மயக்கி வீரர் இருவரும் இல்லாதபோது மாயத்தால் சீதையைக் கவர்ந்து இலங்கை மாநகரில் ஓர் அழகிய சோலையிற் சிறை வைத்தான். இவ்வாறு நஞ்சனைய இலங்கைநாதன் மனத்திலும் மனையிலும் புகுந்து சிறுமை எய்திய தன் நிலையினை நினைந்து சிந்தை யழிந்த சீதை, " அந்தோ! பொன்மானாக வந்த மாயமானைக் கண்டு மயங்கி, அதனைப் பற்றித் தருமாறு என் தலைவனை அனுப்பினேன். மானைத் தொடர்ந்து சென்ற மன்னனுக்குத் தீங்கு நேர்ந்ததென்று மயங்கி, மனம் பதைத்து, காத்துநின்ற இளைய வீரனைக் கடிந்து கணவன்போன வழியே போக்கினேன். இவ்வாறு எவரும் துணையின்றி எளியளாக நின்ற என்னைக் கள்ள அரக்கன் கவர்ந்து கடுஞ்சிறையி லிட்டனன். நிறையமைந்த மாதர் பிறர் நெஞ்சு புகாராதலின் இலங்கை வேந்தன் மனத்திலும் மனையிலும் புகுந்த என்னை இனி உலகம் ஏற்குமோ ?" என்று உலைந்து வருந்தினாள்.

"வஞ்சனை மானின்பின் மன்னனைப் போக்கியேன்
மஞ்சனை வைதுபின் வழிக்கோள் வாயென
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கையான்
உஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ ?"

என்று கம்பர் அருளிய இன்கவியால் சீதையிருந்த அகச்சிறையும் புறச்சிறையும் அழகுற இலங்கக் காணலாம்.

இனி, கருங்கடல் சூழ்ந்த இலங்கை மாநகரில் கற்பகத் தருக்கள் நிறைந்த கனகச் சோலையில், மெலிந்த மேனியோடும் கலங்கிய கண்களோடும் சிறையிருந்த செல்வியை விடுவித்து வீரத்தையும் மானத்தையும் காக்குமாறு இராமன், வலிமை சான்ற தம்பியோடும் வானரத் துணைவரோடும் இரக்கமற்ற அரக்கருடன் போர் புரிந்து அவர் வெங்குலத்தை வேரறுத்தான். இலங்கை நாதனும் அயோத்தி அண்ணலும் நெடும்பொழுது கண்டவர்க்கன்றிக் கேட்டார்க் குரைப்பரிய கடும்போர் நிகழ்த்தினர்கள். விலக்கலாகாவிதியின் விளைவால் இலங்கைவேந்தன் ஆவியிழந்து பூமியில் விழுந்தான். போர்மகளைத் தழுவிய பொருப்பனைய தோள்களால் பார்மகளைத் தழுவினன். திருமகள் ஒளியும் கலைமகள் ஒளியும் ஒன்றித் திகழ்ந்த உயரிய முகங்களை நிலமகள்மீது நெடிது வைத்தான். வாளும் யாழும் தழுவிய வலியகரங்கள் வெட்டுண்ட வாழை போல் வீழ்ந்துகிடந்தன. இலங்கை நாதன் எழிலார் மேனியை எள்ளிருக்க இடமின்றி இராமபாணம் துளைத்திருந்தது. இத்தகைய கோலத்தை மையறுமனத்தாளாய மண்டோதரி கண்ணுற்றாள். மரங்களும் மலைகளும் உருக வாய்திறந்து அரற்றினள்.

"வெள்ளெருக்கம் சடை முடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

என்று மயன்மகள் பன்னிய மொழிகள் பண்புவாய்ந்தனவாம். தேவர்க்கும் தெரியவரிய தெய்வக்கற்புவாய்ந்த

15. டாக்டர் ஐயரவர்களின் தரிசனம்

தமிழ்த் தாயின் மீது அளவற்ற ஆர்வங்கொண்டு, அங்குமிங்கும் மக்கிக் கிடந்த ஓலைச் சுவடிகளை யெல்லாம் பொறுக்கிச் சேர்த்து, அச்சிற் பதிப்பித்துவருதலைத் தம் தொண்டாகக் கொண்ட **மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய** ரவர்களை நேராகச் சந்தித்து அவருடன் சில நாழியாவது வார்த்தையாடி வரவேண்டுமென்னும் விருப்பம் வெகு காலமாய் எனக்கிருந்துவந்தது. நல் விருப்பம் எல்லோர் மனத்தினும் இருப்பது இயல்பே; அதனை நிறைவேற்றிக்கொள்வதே அரிதாகும். எனினும் எப்படியாவது ஐயரவர்களைப் பார்த்தே தீரவேண்டும் என்ற அவாமேலீட்டினல் ஒரு திங்கட்கிழமையன்று திருவல்லிக்கேணியிலிருக்கும் அவர்களது இல்லத்தை நாடிச் சென்றேன். ஒரு சாதாரணத்தெருவுதான்; வீடும் ஒரு சாதாரண வீடு தான்.

அவ்வில்லத்தில் காலெடுத்து வைத்தவுடன் என் மனம் திகிலடைந்தது. அறிவில் மேம்பாடடைய விரும்பும் எவரும், தம்மைப் பார்க்கிலும், மற்ெருருவர் அறிவுடையவர் என்று கேட்ட மாத்திரத்தில், இயற்கையிலே பணிவும் குருபக்தியும் கொள்கின்றனர். 'எப்படி அவர்களுடன் பேசுவது?' என்ற ஐயத்துடனும் அச்சத்துடனும் மேல்மாடிக்குச் சென்றேன். தற்கால நாகரிக முறைப்படி அங்கே அவர்கள் நாற்காலியில் அமர்ந்திருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனல் அவர்களோ தமிழரின் ஆசாரத்துக்குப் பொருந்த, பாயின்மேல் உட்கார்ந்து, ஒரு பலகையின்மேல் ஒரு புத்தகத்தைவைத்து, ஏதோ கூர்ந்து எழுதிய வண்ணமாயிருந்தார்கள். அவர்களுடன் மற்ெருருவரும் கூடி உதவிபுரிந்துகொண்டிருந்தார்.

என்னைக் கண்டவுடன் ஐயரவர்கள் எழுந்துவந்து, அன்புடன் வரவேற்றுப் பின், "நாங்கள் எல்லாம் தமிழ்

திருமகளைத் தன்மனச்சிறையில் வைத்த மன்னனை அணு வணுவாக ஆராய்ந்து கரந்த காதலைக் கவர்ந்து செல்லக் கருதிய முறையில் வீரன் வாளி தலை முதல் தாள் வரை துளைத்ததோ என்று மண்டோதரி வாயிலாக கவிஞர் கூறும் கனிந்த மொழிகளில் மனச்சிறை மீண்டும் நம் கண்ணெதிரே தோன்றுவதாகும். இன்னும் காவலன் மனத்தில் அழுந்தியிருந்த காதலை அகழ்ந் தெடுத்து, சீதையை அகச்சிறையினின்றும் விடுவிக்கக் கருதி இராம பாணம் உடலிற்புகுந்து துருவியதாகக் கம்பர் அமைத்த கற்பனை கற்றோர் மனத்தைக் கவர்கின்றது. மேலும் வீரன் விடுத்த வெஞ்சரம் சீதையிருந்த சிறையைத் தடவிச் சென் றதோ என்று கவிஞர் அமைத்த முறை ஆராய்தற்குரித் தாகும். ஒருவனுக்குரிய பொருளைக் களவு செய்த கள்வன் அதனை எவரும் அறியாதவாறு ஒளித்தும் மறைத்தும் பாது காக்கும் பான்மைபோல் இராமன் மனைவியாகிய சீதையைக் களவு செய்த இராவணன் அவ்வரும் பொருளின் அரு மையை அறிந்து உள்ளத்தின் கண்ணே ஒளித்து வைத்தான் என்றும், அவ்வாறு மறைத்துவைத்த இடத்தை அறியாது மெல்ல மெல்ல, வீரன் அம்பு ஆராய்ந்துசென்றது என்றும் கவிநாயகர் அமைத்த அழகு ஆயுந்தோறும் அளவிலா இன்பம் அளிப்பதாகும். தவம் முயன்று அரிதிற்பெற்ற தன்னுயிரையும் காக்க மனமற்ற மன்னவன் மங்கையின் உருவினை மனத்திடை வைத்துக் காத்தானென்றால் அத் திருமகளை உயிரினும் அருமையாக அவன் நேசித்துப் போற்றினன் என்பது சொல்லாமலே அமையுமன்றோ? இவ்வாறு அம்பினை ஏவி அயலானது அகச்சிறையினின் றும் சீதையை மீட்டிய மன்னவன் அநுமனை ஏவி அம்மங் கையை அசோகவனச் சிறையினின்றும் மீட்டினன். இவ் வாறு இருவகைச் சிறையினின்றும் நீங்கிய நங்கை கற் பினுக் கணியாய்க் களித் திலங்கினள்.

ஆசாரத்தின்படி பாய்மேல் உட்கார்ந்துதான் எங்கள் வேலைகளைச் செய்கிறது" என்று கூறிக்கொண்டே என்னை ஒரு நாற்காலியில் அமரும்படி செய்தார்கள். நாங்களிருந்த மேல்மாடி யறை ஒருவாறு இருண்டிருந்ததைக் கண்டு, "மாசில்லாமணி யம்மையார் வந்திருக்கும்பொழுது, வீடு மாசில்லாமலிருக்க வேண்டும்" என்று கூறிக்கொண்டே மின்சார விளக்கின் பித்தானை அமுக்கி, மாசில்லா வெளிச்சம் எங்கு மிருக்கும்படிச் செய்தார்கள். பின்னர், தாமும் ஓர் நாற்காலியில் அமர்ந்தார்கள்.

தமிழ் நூல் ஆராய்ச்சியின்மேல் சில நிமிடங்கள் வார்த்தையாடினேம். பின், ஐயரவர்கள் பணத்திற்கென்று வேலை செய்யாது, முழு ஆர்வத்தோடு தமிழ் நூல்களை ஆராய்ச்சியோடு பயின்று, மற்றவர்க்குப் பயன்படும் முறையில் எழுதுவது இக்காலத்தில் நமக்கு மிகவும் தேவை என்று கூறிவிட்டுத் தாம் இளம் பிராயத்தில் தமிழாசிரியர்களை இடைவிடாது நாடிச்சென்று தமிழில் பரந்து கிடக்கும் இலக்கண இலக்கியங்களைக் கேட்டறிந்த விதத்தையும் எனக்குச் சுருக்கிக் கூறிக்கொண் டிருக்கையில் ஐயரவர்கள் எழுதிய 'ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்' என் நினைவிற்கு வந்தது. பின்பு சங்கநூல்களின் தூய்மைத் தன்மையையும் அவைகளின் சிறப்பியல்புகளையும் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், காலஞ்சென்ற போப் ஐயர், பவர் ஐயர், கால்ட்வெல் ஐயர் முதலியவர்கள் தமிழுக்குக் காட்டிய அபிமானத்தையும் நாலடியார் திருக்குறள் இவைகளை மேல் நாட்டுப் பாஷையில் மொழி திரும்பும்படி போப் ஐயர் எடுத்துக்கொண்ட பிரயாசத்தையும் எடுத்துக்கூறினார்கள். பின், பிள்ளைத்தமிழ், கோவை, கலம்பகம் முதலிய பிரபந்தங்களைக் கற்பதனால் வரும் பயன்களை எடுத்துக்கூறி, நான் கற்ற பிரபந்தங்களில் ஏதேனும் ஒரு செய்யுளைக் கூறும்படி கேட்கவே, நான் குமரகுருபரர் இயற்றிய மதுரைக் கலம்பகத்தில் ஒரு செய்யுளைக் கூறினேன். அக்கலம்பகச் செய்யுட்கள் சிலவற்றில் மிளிரும்

நயங்களை ஐயரவர்கள் எடுத்து விளக்கிக் காட்டியது நிரம்பவும் அருமையாயிருந்தது.

“தங்கள் இருப்பிடம் எது?” என்று ஐயரவர்கள் வினவ, “மதுரை” என்று நான் விடை பகர்ந்தேன். “மதுரை தமிழுக்கு முதலிட மாயிற்றே” என்று கூறிக் கொண்டே, மதுரைத் தமிழ்ச் சங்கத்தைக் குறித்த சில விஷயங்களை யெடுத்துக் கூறினார்கள்.

பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றிய அஷ்டப் பிரபந்தத்தைக் குறித்துச் சிறிதுநேரம் சம்பாஷணை செய்தோம். ஐயரவர்கள் புத்தகத்தை எடுத்துக்கொடுத்து, திருவேங்கடத் தந்தாதியிலும், அழகரந்தாதியிலும் சில பாடல்களை வாசிக்கும்படிக் கூறினார்கள். அப்படியே நான் வாசித்த பின், “இசையோடு வாசிக்கும் பழக்கமுண்டோ?” என்று கேட்டார்கள். “இல்லை” என்று நான் விடை பகரவே, திருவேங்கடத் தந்தாதியிலிருந்து சில பாடல்களை யிசையுடன் பாடிக்காட்டினார்கள். பாடல்களெல்லாம் ஒன்றுக்குப் பின் ஒன்றாய், அவர்களுக்கு மனப்பாடமாய்த் தெரிந்திருப்பதைக் கண்டு வியப்புற்றேன்.

இங்ஙனம் நாங்கள் தமிழ் நூல்களின் சிறப்பியல்புகளைக் குறித்து வார்த்தை யாடிக்கொண் டிருக்கையிலே ஐயரவர்களைக் காணவேண்டுமென்று ஸ்ரீமான் நீலகண்ட சாஸ்திரிகள் வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இரண்டொரு நிமிஷத்தில் ஸ்ரீமான் சாஸ்திரிகளும் எங்களுடன் சேர்ந்துகொண்டார்கள். அவரைக்கண்டு மகிழ்வுற்ற ஐயரவர்கள், தமது மகிழ்ச்சியானது இராமபிரான் கானகத்தினின்று திரும்பிவருகிற செய்தியை யறிந்த பரதாழ்வான் கொண்ட பரவசத்துக்கு ஒத்ததாயிருக்கிறது என்று கூறிக் கொண்டே கம்பராமாயணத்தை யெடுத்து அப்பாடல்களை வாசிக்கும்படி சிநேகிதரொருவரிடம் கொடுக்க, அவர் அப்பகுதியைச் சேர்ந்த சில பாடல்களை வாசித்தார். அச்செய்யுட்க ளொன்றில் அனுமன்,

"அய்யன் வந்தனன் ஆரியன் வந்தனன்
மெய்யின் மெய்யனே நின்னுயிர் வீடினல்
உய்யு மேயவன் என்றுரைத் துட்புகாக்
கய்யி னுலேரி யைக்கரி யாக்கினன் "

என்று கூறுமிடத்தில் "எரியைக் கரியாக்கினன்' என்று கம்பர் கூறும் வார்த்தைகள் மிகவும் சாதாரண வார்த்தை களாயிருந்தாலும் எவ்வளவு ஆழமும் சந்தமும் செறிந் திருக்கின்றன"வென்று ஸ்ரீமான் சாஸ்திரிகள் அத்தொட ரின் சிறப்பை வியந்த வண்ணமாயிருந்தார்கள்.

"தவலருந் தோல் கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி"

என்னும் நாலடிச் செய்யுள் என் நினைவுக்கு வந்தது.

இங்ஙனம், ஒரு மணி நேரத்துக்குமேல், தமிழ் நூல் களின் சிறப்பைக் குறித்து வார்த்தையாடிக் கொண்டி ருந்தபின் நான் திரும்பிவந்தேன். பல நாட்களாய் நான் மனத்திற்கொண்டிருந்த விருப்பம் பூர்த்தியானதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியுற லானேன். அன்றிரவெல் லாம் எனக்கு அதே நினைவு!

16. உலக மாயம்

பத்து வருஷமாகப் பாகவதம் படித்தார் ஒரு சாஸ்திரிகள்.

அவரை அரசன் மெச்சினன்; "சாஸ்திரிகளே, தங்கள் பக்தியும் சிரத்தையும் என் மனத்தை உருக்குகின்றன; தங்கள் குடும்ப வாழ்வு எப்படி நடக்கிறது?" என்ருன்?

"இரவில் 4-மணி நேரம் பாகவதம்; அதில் வரும் வரும்படி உப்புப் புளிக்குச் சரி; அரிசி வகையராவிற்குப் பகல் முழுதும் புரோகிதம்—அலேகிறேன்."

"தங்களுக்கு இக்கவலே வேண்டாம்; குடும்பத்திற்கு வேண்டிய சாமான்கள் அரண்மனே உக்கிராணத்தினின்று போகும்."

"மஹாராஜன் நன்ருயிருக்கவேண்டும்!"

அன்ன விசாரம் ஒழிந்தது. ஆறுமாதம் சென்றது. **அரசன்**: "சாஸ்திரிகளே, இப்போது கவலேயில்லாமல் பக்தி நடக்கிறதா?"

"என்ன சொல்லட்டும்? ஆத்துக்காரி தினுசு தினுசாகப் பட்டுப்புடைவை வேண்டுமென்கிருள். 50 ரூபா போட்டால் தானே ஒரு டில்லி தர்பார் புடைவையாவது வாங்க முடிகிறது! சாப்பாட்டுக் கவலே தான் இல்லேயே, சம்பாதிக்கிற பணத்திற்குப் புடைவை வாங்குங்கள் என்கிருள்."

"கவலே வேண்டா. வருஷம் நான்கு புடைவைகளும் வேண்டிய ஆடைகளும் தருகிறேம். பக்தி நடக்கட்டும்!"

ஆறு மாதம் கழிந்தது.

"பக்தி எப்படி?"

"மஹாராஜா, புடைவை துணிக் கவலேயில்லே; சம்ஸாரம் நகை நாணயம் வேண்டுமென்று பிடுங்கித் தின்கிருள். அதற்காக அல்லும் பகலும் சம்பாதிக்க வேண்டியிருக்

கிறது; 'கிருஷ்ண, ராமா' என்று சொல்லக்கூடப் போதில்லை."

"கவலை வேண்டா. வேண்டிய ஆபரணம் தருகிறோம்; பக்தி நடக்கட்டும்."

ஆறுண்டுகள் ஆயின.

"பக்தி எப்படி?"

"தெய்வம் வீடு நிறையக் குழந்தை கொடுத்துவிட்டது; 5 பெண் குழந்தைகள். ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்றால், ஏழையின் கதி என்ன? முதல் இரண்டு பெண்களுக்கும் இந்தத் தை தப்பாது கலியாணம் ஆக வேண்டும். இந்தக் காலத்துப் பிள்ளையாண்டான்கள் பை பையாகப் பணம் கேட்கின்றனர். ஐந்து பெண்களுக்கும் சுமார் 20,000 ரூபாயாவது இருந்தால் தான் மானமாகத் தாலி கட்டி முடியும். இதைப்பற்றி அவளுக்கும் எனக்கும் வாக்கு வாதங்கள் நடக்கின்றன."

இவ்வளவு தானே, இந்தாரும் பணம்! கவலை யற்றிரும்." சரி.

ஆறு மாதம் ஆனது.

"பக்தி எப்படி?"

"மஹாராஜா பெண் பார்க்க வருகிறவர்கள், 'இந்தக் கூரைக் குச்சில் நான் பெண்ணெடுக்க மாட்டேன்' என்கின்றனர். வீட்டை நாகரிகமாகக் கட்டவேண்டு மென்கிறாள் மனைவி."

"அதுவும் சரி; உங்களுக்குப் பெரிய பங்களா அமைத்துத் தருவோம்."

சரி. குச்சு போச்சு பங்களா வந்தது! நாலு வருஷம் ஆனது.

"பக்தி எப்படி?"

"மஹாராஜா! வீடு சரிதான். இரண்டு காணி இருந்தால் தானே கவலையில்லாதிருக்கும் என்று மனைவி தூண்டு

கிருள். இந்தக் காலத்தில் தான தர்மங்கள் யார் செய்கிறார்கள்? கோதானம் பூதானம் எல்லாம் ஆதிகாலம்; மஹாராஜாதான் கண் பார்க்கவேண்டும்."

"இதற்கென்ன பிரமாதம்; தங்களுக்குப் பத்து வேலி ஆற்றோரத்தில் தானம் செய்கிறேன்."

"மஹாராஜா நீடூழி வாழ்க!"

ஒரு வருஷம் ஆயிற்று.

"பக்தி எப்படி?"

"மஹாராஜா! என்னென்று சொல்வேன்! ஆசைக்கொரு ஆண் குழந்தை வேண்டுமென்று இருக்கிறது. அதற்காகக் காசி யாத்திரை போக வேண்டும்."

"சரி, போம்; இந்தாரும் பணம்."

காசி யாத்திரை ஆண் குழந்தையாகப் பழுத்தது. பயல் செழு செழுவென்று வளர்ந்தான். பி.ஏ. தேறினன். ரூ. 2,000 வரதட்சிணையுடன் பெண் வந்தது; போலீஸ் சேவகம் கிடைத்தது; மனைவியைக் கூட்டிக் கொண்டு துண்டாய்ப் போனன்; தகப்பனுடன் சண்டை.

"பக்தி எப்படி?"

"அந்தப்பயல் செய்கிற அக்கிரமம் பொறுக்க முடியவில்லை; என் பணத்தை யெல்லாம் வாரிக் கொட்டிக் கொண்டு, படித்து, வரதட்சிணைப் பணத்தையும் தன் பெயருக்குப் போட்டுக்கொண்டு துண்டாகப் போய் விட்டான்; வயது காலத்தில் திண்டாட விட்டான். பெண் குழந்தைகள் அவரவர் வீடுகளில் குடித்தனம் செய்கின்றன."

"போனது போகட்டும், கவலையற்று, பக்தி பண்ணும்!"

* * *

"இப்போது பக்தி எப்படி?"

குறிப்புரை

க. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்து என்ற பகுதியில் முதலிரண்டு செய்யுட்களை அருளிச்செய்தவர் மாணிக்கவாசகர். இவருடைய சொற்கள் மாணிக்கம் போன்றவை என்று சிவபெருமான் இவருக்கு இப்பெயரை அளித்தனர். திருவாதவூரர் என்பது இவரது வேறு பெயர். சைவசமயாசாரியர் நால்வரில் இவர் ஒருவர். இவரியற்றிய நூல்கள் திருவாசகம் திருக்கோவையார் என்பன. இங்கே வந்துள்ள செய்யுட்கள் திருவாசகத்தைச் சேர்ந்தன. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி.

1. வளி - காற்று. ஒளி - பிரகாசம்; இங்கே தீயைக் குறிக்கிறது. ஊன் - உடல்; ஆகுபெயர். கோன் - தலைவன். 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்ற தேவார அடியை நினைத்து, கடவுளைக் கூத்தாட்டுவான் என்றார்.

2. எந்தை - எம்தந்தை. ஆய் - தாய். பிரான் - தலைவன். தனக்கு அஃது இலான் - தனக்குத் தாய் தந்தை முதலியவர்களை இல்லாதவன்.

3. இச் செய்யுளின் ஆசிரியராகிய பட்டினத்தார் வணிக மரபிற் பெருஞ் செல்வராகத் தோன்றிப் பிறகு செல்வத்தில் பற்று நீங்கித் துறவுபூண்டார். இவர் பாடல்கள் பட்டினத்தார் பாடல் எனப்படும். அவை துறவறத்தையும் எளிய வாழ்க்கையையும் வற்புறுத்துவனவாகும். இவர் சைவரிற் சிறந்த பெரியாராவர்.

'தெய்வம் ஒன்றென்றிரு; உண்டென்றிரு' என்று கூட்டுக.

4. வேதநாயகம்பிள்ளை மாயூரத்திலும் பிற விடங்களிலும் ஜில்லா முனிசிப்பாக 60 வருடங்களுக்கு முன் இருந்தவர். கிறிஸ்துவர். சமரச பக்திரஸக் கீர்த்தனை, பெண்மதிமாலை, நீதிநூல் என்னும் செய்யுள் நூல்களையும் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி என்னும் வசன நூல்களையும் பல தனிப்பாடல்களையும் எழுதியுள்ளார். இவருடைய பாடல்கள் எளிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டனவாகத் திகழ்கின்றன.

சுதி - ஸ்ருதி. தருக்கள் - மரங்கள். பொதி அலர் - தேன்பொதிந்துள்ள மலர். பூதம் - நிலம், நீர் முதலிய பஞ்ச பூதங்கள். அகம் - மனம். கடவுளை வணங்கும் முறைகள் பலவென்பதை இக்கவி விளக்குகின்றது.

"நான்பக்தி பண்ணி வாழ வில்லையா? பாகவதமும் போயிற்று! துண்டாய்ப் போனவன் ஒரு கலகத்திலே மண்டையுடைந்து மாண்டு போனான்! வயிறும் பிள்ளையுமாக நாட்டுப் பெண் வீட்டிலிருக்கிறாள். என் செல்வத்திற்கு அவள் பக்கம் சீட்டு விழுந்தது. இரண்டு பெண்கள் கணவரை இழந்து நண்டுஞ்சிண்டுமாக ஒரு டஜன் குழந்தைகளுடன் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டனர். மற்றொரு பெண்ணைப் பேயிடம் கொடுத்தேன். அடிக்கிறான்; திட்டுகிறான். மற்றொன்றிற்குக் காசக்காரன் வாய்த்தான்; ஒரு சுகமுமில்லை: சதா கவலை. அவளுடம்பும் மனமும் உடைந்து போயின. என்ன செய்வது?"

"இதற்கென்ன செய்யலாம்? நான் செய்யக்கூடியதைச் செய்தேன். தங்கள் மனம் குடும்பச் சக்கரத்திற் சுழல்கிறது."

"ஆம்! மன்னா! உண்ண, உடுக்க இருக்கக் குறைவில்லை; மனைவியும் இருக்கிறாள்; குழந்தைகளும் இருக்கின்றன. உலகின் இன்ப துன்பங்களை வெல்ல முடியவில்லை; மனத்தை இதில் புகுத்தினால் மீட்ப தரிது; பாகவதத்தை மூளையில் ஏற்றி வாயால் சொன்னால் போதாது; இதயத்தில் வைத்து அனுஷ்டானத்தில் காட்டவேண்டும்" என்றார் பாகவதர்.

மறுநாள் அவரைக் காணோம். ஓராண்டு கழித்து ஒரு மலைக் குகையில் மௌனமாகத் தியானித்திருக்கக் கண்டு, அரசன், 'இதுவே பாகவதப் பயன்' என்று அவரை வணங்கினான்.

அல்லது மேன்மை. கை - ஒழுக்கம். மாக்கள் - மிருக சுபாவமுடையவர்கள். இழிப்பும்எடுத்தேத்தும் - இழிவு மொழிகளும் புகழ்ச்சியும்.

4. நாள், வைகல், பகல் என்பன ஒரு பொருளைத் தரும் சொற்கள். ஒல்வ - இயன்றவற்றை. படாவாம் - தோன்றுவாம். கண் : ஏழனுருபு. இடம் என்ற பொருளில் வந்தது.

5. வாள் மதியம் - ஒளிபொருந்திய சந்திரன். சந்திரனைத் தொழுதல் மரபு; 'அந்தி ஆரண மந்திரத்திவனை வந்தியாதவர் வானினும் மண்ணினும் இல்லை'; முக்காலத்தில் கன்னிப் பெண்கள் நல்ல கணவனைப் பெறும் பொருட்டுப் பிறையைத் தொழுது வந்தமை தமிழ் நூல்களால் தெரியவருகின்றது. குன்றிய சீர்மையர் - பெருமையில்லாதவர். சந்திரனிடம் தோன்றும் களங்கத்தை முயல் என்றார்.

6. வேங்கை - ஒரு மரத்தின் பெயர். எறிபுனம் - மரங்களை வெட்டி உண்டாக்கிய தினைப் புனம்.

7. தாளாண்மை - முயற்சி. ஊன் இரை - மாமிசமாகிய இரை. கால்தொழில் - அற்பமான வேலை; கை - ஒழுக்கம். இங்கே கால், கை என்ற சொற்கள் உறுப்புக்களை உணர்த்தாமல் அப்பொருளைக் குறிப்பிட்டது இலக்கணத்துள் தோனி என்ற நயமாகும்.

8. ஒண்பொருள் - செல்வம். ஆள்வினை - இடைவிடாத முயற்சி.

10. நாறுத் தகடு - வாசனையற்ற இலை; புற விதழுமாம். பொற்பாவாய் - இலக்குமியே. நீறாய் - சாம்பலாய். விளி - அழிந்துபோ; அரோ : அசை. நாறுத தகடு புன்மக்களுக்கும் பொன் நன் மக்களுக்கும் உவமை.

2. திருக்குறள்

இரண்டடிகளாலாகிய வெண்பா, குறள் எனப்படும். குறட்பாக்களாலாகிய நூல் 'குறள்' என்று வழங்குகிறது. 'திரு' என்பது அடைமொழி. இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளைப் பற்றிக் கூறுவதால் முப்பால் என்றும் வழங்கப்படும். இதுவும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று*.

இதனை அருளிச்செய்த திருவள்ளுவருடைய சாதி, மதம் முதலியவை விளக்கமாகத் தெரியவில்லை. பலர் பலவாறு கூறுவர். இவர் சுமார் 1800 ஆண்டுகட்கு முற்பட்டவராவர்.

இஃது ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களை யுடையது. பத்துக் குறள் சேர்ந்தது ஓர் அதிகாரம். ஓரதிகாரத்துக்

---

* பதினெண்கீழ்க் கணக்கைப் பற்றிய விரிவை நாலடியாரின் குறிப்புரையிற் காண்க.

உ. நீதி

1. நாலடியார்

நான்கடிகளையுடைய வெண்பாவாலாகிய நூல் என விரியும். 'ஆர்' சிறப்பினை உணர்த்தும். நான்கடிகளாலாகிய நீதி நூல்கள் பிறவும் உள்ளனவாகவும், இதுவே நாலடியார் எனப்படுவதற்குக் காரணம், நான்கடி நீதிச்செய்யுட்களாக இந்நூலே முதன்முதல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் போலும். இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் முதலாவதாகக் கூறப்படுவதாகும். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களாவன : நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியது நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பதென்னும் நால்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்னும் நால் ஐந்திணை, முப்பால் என்னும் திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி கைந்நிலை என்னும் பதினெட்டுமாம்.*

இந்நூல் நாலடி நானூறு, வெள்ளான் வேதம் என்றும் வழங்கும். இதனையும் திருக்குறளையும் இணைத்துக் கூறுவர். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பதும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டிற் காணலாம்' என்பதும் இவ்விரு நூல்களின் பெருமையை உணர்த்தும். இந்நூலை ஜி. யூ. போப்பையரென்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

ஒவ்வோரதிகாரத்துக்கும் பத்துப் பாடல் வீதம் நாற்பது அதிகாரங்களை உடையது இந்நூல். இக்கவிகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமண முனிவரால் பாடப்பெற்றது. இந்நூலை அதிகார அடைவு படுத்தியவர் பதுமனார் என்ற ஜைன முனிவராவார். இந்நூலைப்பற்றி வழங்கும் கதையை ஆசிரியர்பால் கேட்டறிக.

1. இச்செய்யுள் மூன்று திருக்குறட்பாக்களின் கருத்துக்களைக் கொண்டதாகும். உறுவது - நம்மைவந்து அடைவனவாகிய காரியங்கள். உலகு என்பது உயர்ந்தோரைக் குறிக்கும்.

2. அம்கண் விசும்பு அழகிய இடம் அகன்ற ஆகாயம். பாரித்தல் - பரப்புதல். ஆற்றும்-சகித்துக்கொள்ளும். தெருமந்து - மனம் சுழன்று ; தெருமா : பகுதி.

3. ஆன்ற - உயர்ந்த. மிகை மக்கள் - பெரியோர், நயம் - நீதி

---

*நாலடி நால்மணி நால்நாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்திலைய வாங்கீழ்க் கணக்கு.

கும் அதனை அடுத்த அதிகாரத்துக்கும் தொடர்புஅமையுமாறு வள்ளுவர் நீதிகளைக் கூறிச் செல்கிறார். இத்தொடர்பைப் பரிமேலழகர் உரை அழகாக எடுத்துக் காட்டுகிறது. இங்கே தரப்பட்ட பாடப் பகுதியில் தொடர்ச்சியாக உள்ள நான்கு அதிகாரங்களின் பொருட்பொருத்தம் பரிமேலழகர் வாக்கினாலேயே காட்டப்பெற்றிருப்பதை ஊன்றிப் படித்தல் அவசியம்.

1. உள்ளம் உடைமை-ஊக்கமுடைமை. பொருள் உடைமை -செல்வம்.

2. ஆக்கம் - செல்வம். அதர் வினாய் – வழி கேட்டுக்கொண்டு. அசைவு இல்லா – இடையூறு முதலியவற்றால் தளர்தலில்லாத. உழை : ஏழன் உருபு.

3. உயர்வு- தம் உயர்ச்சியையே தள்ளினும் - விதிவலியால் கூடிற்றில்லையாயினும். நீர்த்து - தன்மையையுடையது.

4. பரியது - பேருடம்பினது. வெரூஉம் - அஞ்சும். புலி ஊக்கமுடையதென்றும், யானை அஃது அற்றதென்றும்கொள்க.

5. நெடுநீர் - விரைந்து செய்வதனைக் காலந்தாழ்த்துச் செய்யும் இயல்பு. மடி - சோம்பல். மறவி - மறதி கெடுநீரார் -இறக்கும் தன்மையை யுடையவர்கள். காமக்கலன் - விரும்பி ஏறும் மரக்கலம்.

6. படி உடையார் பற்று- நிலமுழுதும் உடையவர்களுடைய செல்வம். அழியாமற் காக்கும் முயற்சி இல்லாமையின் அச்செல்வம் அழியும்என்றபடி.

7. ஒன்னார் - பகைவர் மடிமை : எழுவாய்.

8. மடியாண்மை - சோம்பலை ஆளுந் தன்மையை. குடி ஆண்மையுள் - குடியுள்ளும் ஆண்மையுள்ளும்.

9. வினை விழைவான் - வினை முடித்தலை விரும்புகின்றவன். கேளிர் - சுற்றத்தார் முதலியோர். கேளிராகிய சுமையைத் தாங்கும் தூண் ஆவான்.

10. பொறி - விதி.

11. 'தெய்வம் நோக்கியிராமல் முயல்க' என்பது கருத்து.

12. ஊழ் - விதி. உப்பக்கம் காண்பர் - புறங்காண்பர். (தோற்றுப்போம் படிச் செய்வர்.) உலைவு இன்றி - இளையாமல். உஞற்றுபவர் - முயல்பவர்.

13. வெள்ளம் - கடல், இடும்பை - துன்பம்.

15. இன்பத்துள் இன்பம் விழையாதான் - இன்பம் வந்த காலத்து அந்த இன்பத்தை மனத்தால் விரும்பாதவன். இரண்டையும் ஒரு தன்மையாகக் கொள்ளுதலின் அவற்றின் பயன்கள் இல்லாமற் போகும்.

16. ஒன்னார் விழையும் சிறப்பு - பகைவர் நன்கு மதித்தற்குக் காரணமாகிய பெருமை.

3. அறநெறிச்சாரம்

அறநெறி அல்லது ஒழுக்கத்தைப்பற்றிக் கூறும் சாரமான விஷயங்களையுடைய நூல் அறநெறிச் சாரம் என்று பெயர் பெறும். சங்க காலத்தது அல்லவாயினும் சங்க மேறிய நீதிநூல்களைப் போன்ற சுவையுடையது. இதனை இயற்றிய திருமுனைப் பாடியார் சமண சமயத்தைச் சார்ந்தவர்.

1. கட்டு - பறித்து. எரு அட்டி - எருப்போட்டு. பைங்கூழ் - பசுமையான பயிர்; கூழ்: ஆகுபெயர். சிறுகாலை - இளமையில். அறஞ்செய் வார்க்கு வேண்டும் தன்மைகள் இச் செய்யுளில் கூறப்பட்டுள்ளன. உருவகம்.

2. ஏமாப்பு - உதவிசெய்வது. பிறப்பில் - பிறப்பைப் போல்.

3. எள்ளி - இகழ்ந்து. இன்னா - இனிமையாகாத. என்னும் - யாதும்.

4. தோற்றியார் - படைத்துள்ளவர்கள். கண் ஏழனுருபு ஆற்ற-மிகுதியாக. பயிற்றி - பழக்கி. வயிற்றுப் பெருமான் என்றதில் நகைச்சுவை தோன்றுகிறது.

5. நிறை - மன அடக்கம். எம்மை - எம் தாயார்.

6. காய்தல் - கோபித்தல். ஆய்தல் - ஆராய்தல்.

4. நீதி நெறி விளக்கம்

நீதிமார்க்கத்தை விளக்கும் நூல் என்பது இதன்பொருள். இதனை இயற்றியவர் ஸ்ரீகுமர குருபர சுவாமிகள். இவர் ஸ்ரீ வைகுண்டத்தில் வேளாள குலத்திற் பிறந்தவர். ஐந்தாண்டு வரை மூகராயிருந்து பின் திருச்செந்தூர் முருகன் திருவருளால் பேசத் தொடங்கி இளமையிலேயே துறவு பூண்டார். திருக்குறளின் கருத்துக்களை யெல்லாம் அழகாக இவர் நீதி நெறி விளக்கத்தில் அமைத்துள்ளார். இவர் அநேக சிறு நூல்களை எழுதியுள்ளார். அவைகள் யாவும் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்ற நூலாக வெளிவந்திருக்கின்றன.

1. வியப்பிப்பான் - தன்னைப் பிறர் வியக்கும்படி செய்வதற்காக தற்புகழ்தல் - தன்னையே புகழ்ந்து கொள்ளுதல். நலம் - இன்பம்.

2. களைகணு - பற்றுக்கோடாக (ஆதரவாக) உற்றுழியும் - துன்பம் வந்தபோதும். விளைவு- பயன். உன்னி - நினைத்து. தளர் நடையது - அழியும் தன்மையது ஓம்புதற்கு - காப்பாற்றுதற்கு

3. காலம் - தமக்கு நல்லதாகும் காலம். இடம் - தம் வெற்றிக்கு ஏற்ற இடம். மூலம் - காரணம். சூழ்வன - ஆராயவேண்டியவற்றை. துணைமை வலி - துணையாக இருப்போரின் பலம்; துணைமை ஆகுபெயர்: ஆள் வினை - முயற்சி.

4. குலம் - குலத்தின் ஒழுக்கம். விற்று - அழித்து. வெறுக்கை - செல்வம். ஊன் - உடல்; ஆகுபெயர். உரிமை நமக்குரிய சுதந்தரம். தலை - மிகச் சிறந்தது.

5. நல் கூர்தல் - தரித்திரர் ஆதல். ஓஒகொடிது - மிகவும் கொடிது. நாகொன்று - நாக்கை வருத்தி. கம்மியன் - கொல்லன். இன் சொல்லைப் பேசமுடியாதபடி தீவினையாகிய வாய்ப்பூட்டிடப்பட்டார் என்பது கருத்து. ஆவா : இரக்கக்குறிப்பு.

---

௩. காதை

1. சிலப்பதிகாரம்

சிலம்பு காரணமாக எழுந்த நூல் சிலப்பதிகாரமாகும் இந்நூல் கோவலன் கண்ணகி இவர்களின் கதையைக் கூறுவது. இந்நூலால் அக்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள நாகரிகச் சிறப்பும் பிறவும் தெரியவரும். தமிழ் வேந்தர்களாகிய சோழ சேர பாண்டியர் மூவரின் ராஜ்ஜியங்களைப்பற்றிய பல செய்திகள் இதனால் தெரியவருகின்றன. இந்த நூலுக்குப் பழங்காலத்தில் எழுதப்பெற்ற அரும்பதக் குறிப்புரைஒன்றும் அடியார்க்கு நல்லார் என்பவரால் எழுதப் பெற்ற விரிவான உரை ஒன்றுமாக இரண்டு உரைகள் உள்ளன.

இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள்; சேர அரச பரம்பரையைச் சேர்ந்தவர்; இளமையிலேயே துறவி யானவர். இவர் மதம் சைவமோ, சமணமோ என்று தெரியவில்லை. இவர் சேர மரபினராக இருந்தும் தம் நூலுள் நடுநிலைமை வகித்து மூவேந்தர்களையும் அவர்களுடைய நாட்டையும் உள்ளபடி புகழ்ந்து கூறியுள்ளார். இவர் துறவியான காரணத்தைப்பற்றி வழங்கும் வரலாற்றை ஆசிரியர்பால் கேட்டறிந்துகொள்ளுக.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இந்நூலைச் சிறந்த பதிப்பாக முதன் முதல் அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

2. அறிவறை போகிய - அறிவு கீழற்றுப்போன. பொறி அறு - புண்ணியமற்ற.

3. இறைமுறை - இராஜநீதி. பிழைத்தோன் - தவறியவன்.

4. அரி - சிலம்பினுள் வைத்திருக்கும் உள்ளீடு; பரல் என்றும் வழங்கப் பெறும்.

5. கடையகத்தாள் - கடைசி வாசலில் இருக்கிறாள்.

6. அடுக்குத் தொடர்.

7-10. பாண்டியன் பெயர்கள் ஐந்து தரப்பட்டுள்ளன.

11. செற்றனள் - முகத்தில் கோபம்கொண்டவள். அல்லது மாற்சரியத்தை யுடையவள். செயிர்த்தனள் - மனக் கோபமுடையவள்.

12. தொழில் - வேலைப் பாடு.

16. கோயில் - அரண்மனை.

19. யாரை : இதில் 'ஐ' இடைச் சொல்.

22. புள் - இங்கே புறு. புன்கண் - துன்பம். தீர்த்தோன் - சிபிச் சக்கரவர்த்தி ; இவன் சோழவமிசத்தவன் என்பர்.

23. நா நடுங்க - நாவானது அசைய.

24. கடைமணி - கண்ணின் கடையிலிருந்து.

25. ஆழி - தேர்ச் சக்கரம். மடித்தோன் - மனுச்சோழன்.

20-25. தன் ஊரைக்கூறும் முகத்தால் சோழரின் இராஜ நீதியின் மேன்மையைக் குறித்தது, பாண்டியன் அரசியல் தவறியதை உணர்த்துவதற்காக.

27. இசை - புகழ். பெருங்குடி - வணிகர் வகைகளுள் ஒன்றன் பேர்.

29. ஊழ்வினை - விதி. சிலப்பதிகாரம் கூறும் முக்கியமான மூன்று நீதிகளுள் 'யாவும் முன் ஜென்மத்து விதிப்படியே நடக்கும் என்பது, ஒன்று. அதனைஇளங்கோவடிகள் அடிக்கடி வலியுறுத்துவர்.

மற்ற இரண்டு நீதிகள் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், பத்தினிப் பெண்டிர் பிறரால் தொழப்படுவர் என்பவை யாகும்.

31. பகர்தல் - விற்றல்.

35. வெள் வேல் கொற்றம் - இராஜநீதி. ஒள் இழை - பிரகாசமான ஆபரணமுடையாள் ; அன்மொழித் தொகை.

38. தேமொழி இனிய சொற்களை யுடையாள் ; அன்மொழித்தொகை. செவ்வை - செம்மையான.

47. என்முதல் - என்னைத் தொடங்கி.

2. கம்பராமாயணம்

கம்பர் இயற்றிய ராமாயணம் என்பது இதன் பொருளாகும். தமிழில் சங்க காலத்தில் ஓர் இராமாயணம் இருந்தது. அஃது இப்பொழுது இல்லை. கம்பராமாயணம் சிறந்த தமிழ் நூல்களுள் சிறந்த ஒன்றாகப் பாராட்டப்படுகிறது. இராமாயணம் ஏழு காண்டங்களை யுடையது, அவற்றுள் முன் ஆறு காண்டங்களையே கம்பர் பாடியுள்ளார்.

கம்பர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரில் உவச்சர் குலத்திற் பிறந்தவர். திருவெண்ணெய் நல்லூரிலிருந்த சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப்பெற்று அவர் இல்லிலேயே வளர்ந்து வந்தார். அவரை இவர் தம் இராமாயணத்துள் பலவிடங்களில் பாராட்டிச் செல்கிறார். இவர் மதம் வைணவமென்று தோன்றினும் ஊன்றி நோக்குவார்க்கு இவர் சமரச பாவமுடையவர் என்பது புலனாகும். 'கல்வியிற் பெரியர் கம்பர்; 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பன இவருடைய பெருமையைப் புலப்படுத்தும்.

விபீடணன் அடைக் கலப் படலமென்பது யுத்த காண்டத்தில் உள்ளது. இராமர் வானர சேனைகளுடன் கடற்கரைக்கு வந்து சேர்ந்ததும், இராவணன் மந்திரி பிரதானிகளையும் தம்பியர் தனயர் போன்றாரையும் ஒருங்குகூட்டி 'இனிச்செய்வது யாது?' என்று ஆலோசனை கேட்டான். எல்லோரும் ஒருமுகமாகப் போர்செய்வதையே வலியுறுத்தினார்கள். இராவணனுடைய தம்பியாகிய விபீடணன் 'சீதையை விட்டு இராமரைச் சரண மடைதலொன்றே நல்லது' என்று பலவகை ஆதாரங்களைக் காட்டிக்கூறியும் இராவணன் அவன் மொழிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் விபீடணன் இலங்கையை விட்டு வெளியேறி இராமரை அடைக்கலம் தரும்படி வேண்டுகிறான். வானரர் எல்லோரும் இராவணன் தம்பி இவன் என்றும், உறவாடிக் கெடுக்க வந்தவனென்றும்கூறி அவனை ஏற்றுக் கொள்ளல் தகாது என்கிறார்கள். அநுமான் முன்பு இலங்கைக்குச் சென்றிருந்தபோது விபீடணனுடைய நல்லியல்புகளை அறிந்திருந்தாராதல் பற்றி அவனை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்று கூறுகிறார். அதற்குப் பின்னுள்ள கதை உங்கள் பாடத்தில் தரப்பட்டுள்ளது.

காண்டமென்பது நூலின் பேருறுப்பு; படலம் சிற்றுறுப்பு.

1. மாருதி - மருத்து (வாயு) வின் மகன், அநுமன் - தத்திதாந்தம். அமிழ்தின் - அமிர்தத்தைப் போல். மாந்தி-செவியாற் பருகி. இம்மாற்றம் என்றது பின்னர் இராமர் கூறப் போகும் மொழிகளை.

2. பெற்றி - குணமுள்ள சொற்கள். வீக - அழிக. 'தீமை வரினும் வருக; 'சரணமென்றவனை ஏற்றுக் கொள்ளாமலிரேன்' என்றபடி.

3 இன்று - இராவணனுக்கும் எனக்குப் பகைமூண்டபின் இன்றைக்கு. 'எந்தையை ஆயை முன்னைக் கொன்று வந்தான் என்றுண்டோ?'—தம் தாய் தந்தையரைக் கொன்றவனாயினும் சரணமென்று வந்தடைந்தால் அவனை ஏற்றுக்கொள்ளாமலிருத்தலாகாதுஎன்றபடி.

புகல் - அடைக்கலம். தொன்று - முன்பு. துணைவன் - சகோதரன்; மேல் 24-ஆம் கவியில் விபீடணன் தன் சகோதரனென்பதை இராமர் கூறும் விதத்தைக் காண்க. பின்றும் — தவறிழைப்பான்.

4. இடைந்தவர் - ஆலகால விடத்துக்குப் பயந்து பின்னிட்டவர். உடைந்தவர் - மனம் உடைந்தவர். அறமும் ஆண்மையும் எவையென்பதைப் பின்னிரண்டு அடிகள் விளக்குகின்றன. சிவபெருமான் விடமுண்ட கதை இதில் வந்துள்ளது.

5. பாடுறு - துன்பமிக்க. குளிரால் வருந்தி ஆகாரமில்லாது, கானகத்தில் தவித்த ஒரு வேடனை, தன்னிடம் வந்து உதவி காணாது வருந்தபவனாக நினைத்து ஒரு புறா செய்த அதிதிபூஜை இங்கே குறிக்கப்படுகிறது.

6. உய்ய - நான் பிழைக்க. நிற்கு - உனக்கு. அபயம் - அடைக்கலம். 'கையன்' என்பது எதுகைக்காகக் கய்யன் என்று வந்தது; கீழ்மகன்; போலி.

7. விரதப்பெற்றி - விரதத்தின் தன்மை. அவ்வுரை: இராமர் காட்டை அடைந்ததும் முனிவர்கள் அவரிடம் வந்து இராவணாதியர்களின் தீமைகளைப் பொறுக்க முடியவில்லை என்று சரணடைந்தபோது இராமர், "அவ் வரக்கர்கள் புகல் புகுந்திலரேல் வேறு லோகத்தில் மறைந்து வசித்தாலும் என் அம்புகளால் அவர்களை ஒழிப்பேன்" என்று கூறிய வாய்மை மொழி.

8. பூரியர் - அற்பர்.

9. கடப்பாடு - கடமை. கதிரோன் - சூரியன்.

10. கைபுகற்கு - வீடணன் இராமரைச் சரணமடைவதற்கு. அமைவதானன் - உடன்பட்டுத் தயாரானன். உறையுள் - இருப்பிடம்; ஒருவன் - விபீடணன்.

11. புல்லலர் - மனமொத்து நண்பராகார்; நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை" என்றும் "ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை" என்றும் வரும் வெற்றிவேற்கை அடிகள் இங்கே நினைவுக்கு வருகின்றன. ஒல்லை - விரைவாக. எல்லி - இரவு. விபீடணன் நிறம் கருமை, சுக்கிரீவன் நிறம் வெண்மை. எழு - தூண்.

12. வழுவல் இல் - தவறுதலில்லாத.

13. சிங்க ஏறு - ஆண்சிங்கம். கங்குல் - இரவு. கண் - கண்கள். கான்ற - பொழிந்தன. அங்கம் - உடல். அகம் - மனம்.

14. பஞ்சென - பஞ்சு என்று சொன்ன மாத்திரத்தில். பஞ்சுபோல பெண்களின் கால்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பைத் தோய்த்து அழகுபடுத்துவது அக்கால

வழக்கம்; கால்கள் அவ்வளவு மென்மை வாய்ந்தவை என்றபடி. தஞ்சு - அடைக்கலம். நஞ்சு எனச் சிறந்தேன் - அந்த நஞ்சு கொடியதாயினும் சிவபெருமானின் கண்டத்தில் இருந்து வருவதால் அதற்கு ஒரு பெருமை உண்டாயிற்று. கொடியனாகிய இராவணனுடைய தம்பியாகிய நான் இராமரின் அருளால் அந்த நஞ்சைப் போற் சிறந்தவனானேன்.

15. மருள் - மயக்கம். தேரினன் - சூரியன்; சூரியன் இராவணனது ஆணைக்குப் பயந்து இலங்கை வழியாக வான வீதியில் செல்லாமல் வேறு வழியாகச்சென்று வந்தான் என்பது கதை. தெருள் - தெளிவு. கெட்டேன்; இரக்கக் குறிப்பு. அருளுடையோரை எதிர்த்து வெல்வதரிதுஎன்பதை நினைந்து 'பிழைப்பரோ அரக்கராயோர்' என்றான்.

16. செய்ய - செம்மையான. பிழைப்பது - தவறு செய்வது. வரை - (மந்தர) மலை. ஆர்கலி - (பாற்) கடல்.

17. அரி - குரங்கு. நாப்பண் - நடுவில், திரை - அலை. வெள்ளிய - வெள்ளை நிறத்ததான. பள்ளிதீர்ந்து இருந்தான் - பள்ளிகொள்வதை விட்டு உட்கார்ந்திருந்தான். பொலிதரும்- விளங்கும்.

18. கோலம் - அழகு. முத்தின் - முத்தைப் போல். வாள்+நுதல்—ஒளி பொருந்திய நெற்றி.

19. பெற்றவன் - தசரதன். மோலி - கிரீடம். இளையவன் - பரதன். சிற்றவை - சிறிய தாயாராகிய கைகேசி கைகேசியை இராமர் பெற்றவளாகக் கருதி வந்தமையால் 'பெற்ற சிற்றவை' என்றார். பின் மோலி சடை முடியை உணர்த்தும். சென்னி - தலை.

20. அஞ்சனம் - மை. நீதியோடு கூடிய அறத்தின் நிறம் வெள்ளை. இராமர் கரியவராயிருந்தும் நீதிமானா யிருப்பதனால் 'நீதி அற நிறம் கரிதோ' என்றான்.

21. பேர்வு அரும் - பேர்ந்து போதல் இல்லாததாகிய, வடி - கூர்மை. எல்லை தீர்ந்த - அளவற்ற.

22 முடியன் - விவீடணன். காதலன் - இராமருக்கும் விபீடணனுக்கும் பொருட் பொருத்தமுடைய சொல். வாரி - கடல்.

23. ஆழியான் - சக்கரத்தையுடைய திருமால்; இங்கே திருமாலின் அம்சமாகிய இராமர். தந்தேன் என்றது, தாம் வெல்வதன் உறுதியைக் காட்டும். இவ்வாறு கூறுவது இலக்கணத்துள் 'கோள்ளார் தேயம் கோடுத்த கோற்றம்' எனப்படும்.

24. குன்று - மேருமலை. மகன் - சுக்கிரீவன் உழை: ஏழனுருபு. அகன்: அகம் என்ற

தன் கடைப்போலி, விபீடணனைத் தம்சகோதரனுகக்கொண்டதால் இராமர் தசரதரை 'உம் தந்தை' என்ருர்.

25. உஞ்சனேன் - உஞ்சனன் என்றிருத்தல் வேண்டும்; உய்ந்தனன் என்பதன் போலி. ஊழ்முறை - விதிப்படி. அழகன்; இராமரைக் கம்பர் அடிக்கடி அழகனென்பார் துஞ்சல் இல் நயனத்து - தூங்குதலேயில்லாத கண்களையுடைய. மகுடம் - கிரீடம்.

3. நளவெண்பா

நளவெண்பாவை எழுதியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை மண்டல வேளாளர். மதம் வைணவம்; எனினும் சிவபிரான் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுக்கும் வணக்கம் கூறியுள்ளார். இவர் ஊர் பொன்விளைந்த களத்தூர் என்பது. மள்ளுவ நாட்டை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்ற சிற்றரசன் இவரை ஆதரித்தவன். அவனை இவர் தம் நூலில் புகழ்ந்து கூறியுள்ளார்.

நளவெண்பாவைத் தவிர்த்து நளசரித்திரத்தைத் தமிழில் கூறும் நூல் நைடதம் என்பது. அதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர். அது நளவெண்பாவுக்கும் பிற்பட்டது.

சூதாடி நாட்டை யிழந்த நளன் தன் மக்களை வீமராஜன் நாட்டிற்கு அனுப்பிவிட்டுத் தன் மனைவியுடன் காட்டை நோக்கி நடந்தான். காட்டில் தமயந்திக்கு விளையாடப் பிடித்துத் தரலாமென்று எண்ணி ஓர் அன்னத்தைப் பற்றும் முயற்சியில் தன் ஆடையை இழந்தான். பின் மாலைநேரம் வர ஓர் பாழ்மண்டபத்தைச் சேர்ந்தனர்.

1. வேலை - சமயம். மண் - ஜனங்கள்; ஆகுபெயர். தவம் கண்டான் - தான் ஆளவேண்டுமென்று அவர்கள் ஒருகாலத்தில் தவம் கிடத்தலைக் கண்டவன்.

2. மூரி - மிக்க. சோர்கூந்தல் - வாரிக்கொள்ளாத காரணத்தால் கலைந்த கூந்தல். போதராய் - வருவாய். புலந்து - மனம் வாடி.

3. வையம் - பூமி. யாழ் - வீணை. கொதுகு - கொசு. சில் - அற்பம். கெண்டை - ஒரு வகை மீன். தோட்ட - தொடுத்த. வார் - நீண்ட. கோதை - மாலை.

4. பேர்யாமம் - நள்ளிரவு.

5. புன்கண் - துன்பம். கூர் - மிகுந்த பொடியாதா - சாம்பலாகாதா?

6. தாமம் - மாலை. பார் - பூமி. அணை - படுக்கை. படைக்கண் - படை போன்றகண்; படை - ஆயுதம்; (வேல், வாள்.)

7. காரிகை - பெண்.

8. முதல் - வேர்.

9. ஒருகால் - ஒருதடவை. மீளும் - திரும்புவான். ஆயர் - இடையர். தோயல் - தயிர். வேலுக்கு யமன் உவமை

10. கோ - சிறந்த. காதலி - மகள். குறிக்கொண்மின் - பாது காத்துக் கொள்ளுங்கள். ஏதிலன் - அயலான்.

11. தாரு - கற்பகவிருக்ஷம். விரவார் - பகைவர்.

12. துகில் - ஆடை. ஒள் தொடி - பிரகாசமான வளையல். மறுகி - மனம் சோர்ந்து.

13. அழல் - நெருப்பைப் போன்ற; கோபகுண முள்ள.

14. தரியாது - சகிக்காமல். வெய்யோன் - சூரியன். வாவு - தாவுகின்ற.

15. என்னும் - என்பாள். வெய்து - கொடிது. பையவே - மெல்ல. ஏகும்-ஏகுவான். மன் - தலைவன். மயர்ந்து - திகைத்து

16. வெறித்த - திகைத்து நிற்கின்ற. நெறிக்கண் - வழியில். மான் - மான்போன்றவள்; ஆகுபெயர்.

17. கொம்பர் - மரக்கிளை; கடைப்போலி. குருகு-கொக்கு. அம்புயம் - தாமரைக்கொடி.

18. தாது - மகரந்தம். பொறி - புள்ளி.

19. ஆழிவாய் - கடலில். அலவ - நண்டுகளே.

20. பானல் குவளை மலர். சோலை - மரங்களின் செறிவு. கானல் - கடற்கரைச் சோலை. வேலை - கடல்.

21. நாவாய் - கப்பல்; நாக் கோடு கூடிய வாய்; சிலேடை. ஆர்கலி - கடல். தீவாய் அரவு - நெருப்பில் தவித்து வந்த கார்க் கோடகன்.

22. முன்னீர் - பழையநீர்; கடல். மடவார் - பெண்களின். முறுவல் திரள் - பற்களைப் போன்ற முத்துக்கள். பொன் நீர் முருகு - பொன்னின் தன்மையை யுடைய அழகை. அருகு - அருகிலே போய்.

4. வில்லி பாரத வரலாறு

வில்லிபுத்தூரார் எழுதிய பாரதம் வில்லிபாரதம் எனப்படும். இவர் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். இவர் வரலாறு வில்லி பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தால் தெரியவருகிறது. அப்பாயிரம் தான் பாடமாக வந்துள்ளது. அதனை அவர் குமாரர் வரந்தருவார் என்பவர் இயற்றினர்.

1. அவ்வை: போலி. பாடலைக் கேட்டு நெய்யும் பாலுமாகப் பாய்ந்ததால் பெண்ணையாற்றை, 'தமிழறிவினுல் சிறந்தது' என்றூர். "முத்தெறியும் பெண்ணை முதுநீரது தவிர்த்துத், தத்திய நெய்பால் தலைப்

பெய்து - குத்திச், செருமலை தெய்வீகன் திருக்கோவலூர்க்கு வருமளவும் கொண்டோடி வா" என்பது அவர் பாடிய பாடல். பவ்வம் - கடல்; போலி. தரணிமான் - நில மகள். உத்தரியம் - மேலாடை. மொய் - கூட்டமாக உள்ள. வரால் முதலியவை மீன் இனங் களின் பெயர்கள்.

2. பாவலர்: பொய்கையார், பேயார், பூதத்தார் என்ற முதல் மூன்று ஆழ்வார்கள். மொழி - பாடல்; ஆகுபெயர். முகுந்தன் - திருமால்.

திருக்கோவலூரில் ஒரு திரு விழாவின் சமயம் ஒரு வீட்டுச் சிறிய இடைகழி யொன்றில், மிக்க இருளில் இம்மூவரில் ஒரு வர் இருந்தார்; பின் மற்றொரு வர் வந்து இடம் பெற்றார்; பிறகு மூன்றும் அடியவர் வர, அவர்கள் இருவரும், "ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்க லாம், மூவர் நிற்கலாம், வாருங் கள்" என்று வரவேற்று உப சரித்தனர். இவர்களுக்கு அருள் செய்யவேண்டித் திரு மால் அந்த இருட்டில் வந்து இவர்களை நெருக்கினார். நெருக் கும் நான்காமவரைத் தெரிந்து கொள்ள மூவரும் ஒவ்வொரு பாடல் பாடி ஞான விளக் கேற்றினார்கள். அப்பொழுது திருமால் காட்சியளித்தார்.

திருமாலும் பிரமனும் சிவ பெருமானுடைய அடி முடி களைக் காணாததை மனத்திற் கொண்டு 'தேவரும்.,....இன்ன மும் காணா' என்றார். மூவர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர். இருவர்: அப்பர், சுந்தரர்.

3. கம்பலை - ஒலி. காவலர் - அரசர்களுக் குரிய. கரங்கள் - வரிப்பணம், நீக்கி - ஆறிலொரு பங்கைக் கழித்து. ஐம்புலத்த வர்: இறந்துபோனபிதிரர், தெய் வம், விருந்தினர், சுற்றத்தார், தாம் என்ற ஐவகையினர், 'உழுநர் ஈட்டி, நீக்கி, ஈந்து அறத்தினை வளர்த்தலாலே' என்று கூட்டுக. செம்புலக் கிழத்தி - பூமிதேவி.

4. அன்று - பாரிமகளிரின் திருமணத்தில் ஔவையார் பாட்டைக் கேட்டுப் பெண்ணை நதி நெய் பாலாகப் பெருகிய அன்று. இவை பாய்ந்து ஏழு கடல்களும் நெய்க்கடல் பாற் கடல்களாக மாறும்படி. பழ னம் - வயல், பண்ணை - மருத நிலம். பல்கு - மலிந்த. வண் ணம் நான்கு - அந்தணர், அர சர், வணிகர், வேளாளர்.

5. ஐந்து பா: வெண்பா, அக வல், கலிப்பா, வஞ்சி, மருட்பா என்ற ஐந்து வகைக் கவிகள். நால்வகைக் கவி-நான்கு வகைப் புலவர்கள்; அவர்கள், ஆசு கவி, மதுரகவி, சித்திரகவி, வித் தாரக் கவி என்பவர்கள். மணி முடி - அழகிய கிரீடம். சிறந்த புலவர்க்கு அக்கால மன்னர் கிரீடம் சூட்டிக் கொள்ளும் பெருமையைக் கொடுத்து வந் தனர். பரமன் - மேலானவன்.

6. கேரளர் - சேரர். செம்பியர் - சோழர்; சிபி வமிசத்தவர். முத்தமிழ்: இயல் இசை நாடகத் தமிழ்.

7. தாரகாயண தண்டலை - நட்சத்திர மண்டலத்தை அளாவிய சோலை; வண்டு அலை தண்டலை - வண்டுகள் அலைகின்ற சோலை. வீரராகவன் வில்லியின் தந்தையாவார். ஊர் அரா - ஊர்ந்து செல்லும் அரவு; ஆதிசேடன். காகளம் - திருச்சின்னம். அரசரும் கடவுளும் பவனி வருங் காலத்து ஊதப்படும் ஒரு கருவி. இது மரியாதைக்குரிய பொருள். அக்காலப் புலவர்களில் சிறந்தார் இந்த மரியாதையை அரசர்களால் பெற்று வந்தனர். இத்தகைய புலவர் **காளக் கவி** எனப்படுவார்.

8. குரிசில் - ஆண்களில் சிறந்தோன். கரு நடப்பேர் வெள்ளம் - கன்னடம் பேசும் பகைவராகிய வெள்ளம். ஆட்கொண்டான் ஒரு சங்கம் ஸ்தாபித்தான் என்று இதனால் தெரிகிறது.

9. மற்று அவன் — ஆட்கொண்டான். வளவன் - சோழன். வழுதித் தெவ்வு - பாண்டியனாகிய பகைவன். அவனுக்கு அச்சோழனுக்கு கொற்றவை - போருக்குரிய தேவதை; துர்க்கை. மலைகளில் பேரை எழுதுதல் என்பது புழைப் பரப்புவதற்கு அறிகுறிக.

10. கல் நாட்டி:—தம் கட்சியில் மிக்க வீரங்காட்டி இறந்தவர்க்குக் கல்லை நாட்டி அதனைப் பிறர் வழிபடும்படி செய்தல் அக்கால வழக்கம். இந்தக் கல் **வீரக்கல்** எனப்படும். வீரக் கல்லுக்கு வேற்று நாட்டு நதியின் நீரை அபிடேகம் செய்ததுண்டு. இது 'நீர்ப்படை' எனப்படும். கண்டன் - சோழன். வேங்கை - புலிக்கொடி. ஒருநாட்டைப் பெற்றால் அதனைச்சேர்ந்த மலையில் தம் அடையாளத்தை எழுதுவது அக்காலத் தமிழர் வழக்கமாகும்.

11. அளகை-குபேரனுடைய பட்டணம். கவின் - அழகு. அமரரூர் - தேவர்களின் பட்டணம்; அமராவதி. மாற்றிய - அமராவதி அழகில்லை என்று சொல்லும்படி மிக்க அழகு வாய்ந்த. வக்கபாகை - ஆட்கொண்டானின் ஊர். 'கொங்கர் பிரான்', 'தமிழான்' என்பவை ஆட்கொண்டானைக் குறிக்கும். தன் திருப்பேர் மொழி கொண்டு - ஆட்கொண்டான் என்ற பெயருக்கு ஏற்ப புவியெல்லாம் ஆட்கொண்டு. புரந்தான் - பாதுகாத்தான்.

12. பிறந்துய்யக் கொண்டவன்-ஆட்கொண்டான். கூரும்- மிகும். இசை - கீர்த்தி.

13. இருக்கு - இருக்குவேதம். மொழிந்தோன் - வியாசர். பெருக்காளர் - வேளாளர்.

அவன் - வில்லிபுத்தூரர். பதிகம் - பாயிரம்.

5. குசேலோபாக்கியானம்

இந்நூல் வல்லூர்த்தேவராச பிள்ளை யியற்றியதாக வெளிவந்துள்ளது. இவர் பங்களூரில் இருந்த பெரிய பணக்காரர். தமிழில் மிரம்பஆர்வங்கொண்டு திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களை வருவித்து அவரிடம் இலக்கண இலக்கியங்களை ஒழுங்காகப் பாடங்கேட்டவர் குசேலோபாக்கியானத்தை இவர் எழுதத் தொடங்கிச் சில செய்யுட்களை முடித்து மேலே எழுதக் கஷ்டப்பட்டு வருகையில் பிள்ளையவர்கள் அக்கதையினைப் பாடி முடித்து, தேவராச பிள்ளையின் பெயராலேயே வெளிவரல் வேண்டுமென்று வற்புறுத்தினுர்கள் என்றசெய்தியை 'ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்' என்ற நூலில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

குசேலருக்கு 27 குழந்தைகள் பிறந்தனர். குடும்பத்தை வறுமை அதிகமாகப் பாதிக்கவே கற்புடைய இவர் மனைவி சுசீலை, 'மக்களின் பொருட்டுத் துவாரகைக்குச் சென்று ஸ்ரீ கண்ணபிரான் பால் பொருள் பெற்றுவருக' என்று தன் கணவனை வேண்டுவதாகவும், அவர் முதலில் பல காரணங் காட்டி மறுப்பதாகவும், பிறகு ஒருவாறு உடன்பட இவள் கையுறையாக அவலைத் தயாரித்து அனுப்புவதாகவும் உள்ள பகுதி இங்கே பாடமாக வந்துள்ளது.

1. பொற்பு - அழகு. மிடி - வறுமை. சாகரம் - கடல். அமயம் - சமயம். சொல் - புகழ்.

2. முத்தழல் - அந்தணர் போற்றும் மூன்றுவிதத் தீ; ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணுக்கினி. கோது இலா - குற்றமற்ற. ஈரொன்பான் - பதினெட்டு. மூரல் - சோறு. திரை - அலை.

3. கலாம் - கலகம்.

4. வடவை - பெண் குதிரை முகத்தின் வடிவாகக் கடலுள் மறைந்து கிடக்கும் பெருந் தீ; இது ஊழிக்காலத்தே மேல் வந்து உலகை அழிக்கும் என்பர். ஆகரம் - வீடு; உறைவிடம், தழைவனம்: வினைத்தொகை.

5. யாதவர் - இடையர். வகுப்பார் - சொல்வார்கள். பீதாம்பரன் - பொன் ஆடையை உடையவன்; பீதாம்பரன் என்றதால் செல்வ மிகுதியைத் தோற்றுவித்தாள். செல்லல் — வறுமை.

5. எழிலி - மேகம். வளம் - செல்வ வளம். ஐயமது - சந்தேகம்; அது: பகுதிப்பொருள் விகுதி பளகு + அறு — குற்றமற்ற. போன்மென்று - போலும் என்று. மாற்றம் - வார்த்தை.

7. மாலிகை - மாலை நிறம் மார்பு. கமலை - திருமகள். மண்ணிய மணியை - கழுவப்பெற்ற மணி போன்றவனை. எண்ணியாங்கு - நினைத்தபடி. உய - உய்ய; தொகுத்தல் விகாரம். நண்ணி - பொருந்தி.

8. மடத்தகை - அறியாமை மேற்கொண்ட. கேட்டி : கேள் + த் + இ. முன்பவம் - முற்பிறப்பு; போன ஜென்மம். ஆன்ற - பெருமை மிக்க. என் - என்ன காரணம்.

9. போற்ற - காப்பாற்ற. நநதிய : நத்திய என்பதன் விகாரம்; விரும்பிய. சேமவைப்பு - சேமித்து வைத்த ஆஸ்தி. எந்த + இடம் - எந்திடம்; தொகுத்தல் விகாரம்.

10. ஒல்லும் - பொருந்திய. அரி - கோடு உண் கண்—மையுண்டகண். துடி - துடி என்னும் தோற்கருவியைப்போன்ற.

11. கருப்பை உயிர்க்கும் அண்டத்து உயிர்க்கும்; அண்டம் - முட்டை. புல்லுணவு - அற்ப உணவு. புனம் - முல்லை நிலம். துழாய் - துளசி. கண்ணி - தலையில் அணியும் மாலை. மைந்தர்க் காவாது - மைந்தர்களைக் காக்காமல்.

12. புந்தி மாழ்கேல் - புத்தி மயங்காதே. மாதர் - அழகிய வாள் - ஒளி. முத்த மூரல் - முத்துக்களைப் போன்ற பற்கள்.

13. வடிவ - அழகிய. வில் - உடல். சேய் - குழந்தைகள்.

14. உஞற்றிடார் - செய்யார். தரு; கற்பகவிருட்சம். துரந்து - அகற்றி. மருவு - பொருந்திய. கிளை - சுற்றம்.

15. முனிவு - சினம். கறை கெழு - குற்றமுள்ள. அறை - பலரும் புகழ்கின்ற.

16. புலத்தர் - அறிவுடையோர்.

17. கோடிர் - கொள்ளுங்கள். சிமிழ்த்தல் - பிடித்தல். மருங்குல் - இடை. மாண் - மாட்சிமை.

18 பொருவறு - ஒப்பற்ற. பந்தம் - பற்று. ஒருவ - நீங்க. கருவினுட் புகுத்தும் - பிறவியைத்தரும். கரிசு - குற்றம் வெறுக்கை - வெறுக்கப் படுவது என்ற பொருளை யுடையது; செல்வம்.

19. ஞான்று - பொழுது. பறிபோன்.

20. பாடு - பெருமை. கதிர் - சூரியன்; மின்னல் என்பாரும் உளர். மல்லல் நீர் - கடல். செல்வம் என்று உறுவதற்கு - சென்று விடுவோம் என்னும் பொருளுடையதற்கு. அல்லல் - துன்பம்.

21. எதிர் மறுத்தல் பரித்திடும் - விரோதமான பொருளைத் தாங்கிடும்; தரித்திரம்

'நெடுநாள் தங்கி இருக்க மாட்டோம்' என்பது எதிரிடையான பொருள்.

22. நாற்கதி - நால் வகைப் பிறப்பு. சேல் என்ற மீனைப் போன்ற.

23. வாள் + கண். சுடர்த் தொடி - பிரகாசமான வளையல்களை அணிந்தவளே ; அன்மொழித் தொகை. பேனம் - நுரை. ஆர் - நிறைந்த.

24. நந்தல் இல் - அழிவற்ற. அருளாகி - நீங்காதவளாகி.

25. உகற்றுவன் = உஞற்றுவன் - செய்வன். பேரறிஞர் என்றது, திருவள்ளுவ நாயனாரை. "முயற்சி திருவினையாக்கும் ; முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்பது குறள். நவில்வார்-சொல்லுவார்.

26. ஐம்படை : சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு.

27. அடல்-வலிமை. வீங்கும்-மிகுகின்ற. உடல் பவம் - வருத்தும் பாவங்கள் ; வினைத் தொகை. ஆகரம் - வீடு.

28. திரை- அலை. புடவி-உலகம். கமலை-திருமகள்.

29. உறுமிடியவர்-மிக்க தரித்திரர். கன்றுமாறு - மனம் வருந்தும்படி. நவிற்றுவர் — சொல்லுவர். மன்ற-நிச்சயமாக.

30. இற்றென - இத்தன்மையதென்று.

31. அறலில் - நீரில்.

32. கறை - உரல். கரிசு - உமி தவிடு முதலிய குற்றம். நேடி - தேடி. மறை யிட்ட - வேதங்கள் கூறிய. பவம் - பிறவி.

6. புலவர் புராணம்

இதனை இயற்றியவர் முருகதாஸர் என்பவர். இவர் சமீப காலத்தி லிருந்தவர். முருகப்பிரான்மேல் மிகுதியான அன்பு பூண்டவர். சந்தக் கவிகளைப் பாடுவதில் வல்லவர். பழம் புலவர்களின் மதிப்பை உள்ளபடி அறிந்து உவப்பவர்.

1. சோழ நாட்டில் பட்டீசுரம் என்ற ஸ்தலத்துக்கு மிகச் சமீபத்திலுள்ளது சத்திமுற்றமென்பது சத்திமுற்றப் புலவரின் சந்ததியார்கள் இப்பொழுதும் இங்கு இருக்கிறார்கள். அத்தி - யானை. சியஏறு - ஆண் சிங்கம் ; புலவர்களுக்குச் சிங்கம் என்றபடி.

2. மாழ்கி - மயங்கி.

3. இறை - அரசன். மாமகள் மருவிடச் செய்வல் - செல்வம் செழிக்கச் செய்வேன். இசைத்தான் - கூறினான். புனையும் - வர்ணிக்கும். அம்மா : அசை.

4. அரசு - அரசன். உருவும் வாள். தேர் அருகு.

5-6. நாரை விடு தூதாக இவர் பாடியுள்ள செய்யுள் இப்

புத்தகத்தின் 47-ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. சீரை - அழகை. மேயதும் - பொருந்தியுள்ளதும். ஆதிய - முதலிய. மிடி-வறுமை. தமிழை வளர்க்கும் பாண்டியனுடைய மதுரையில் ஒரு புலவரை விடாமல் வறுமை வருத்தும் என்றால் அது பெருமை உடையதன்றே என்ற கருத்தைக்கொண்டு சத்திமுற்றப் புலவர் பாடியிருப்பதால் 'மிடிப் பெருமையுங் கூறி' என்றார்.

6. கிரித்தலை இறால் தேன் சொரிந்தென - மலையின் மீதுள்ள தேனடை தேனைச் சொரிந்தாற்போல. வேன் - வெற்றி; வென் என்பதன் விகாரம். வாழ்க்கையில் புலவருக்கு வெற்றி யுண்டாக்க இப்பாடல் காரணமாயிருந்தமை நோக்கத் தக்கது.

7. படரில்-வேலையாட்களில்; வடசொல். அவ்வயின் - அந்த இடத்தில்; தேரடியில் படுத்தான். இரண்டாம் வேற்றுமையாதல்பற்றி விகாரமாயிற்று. படுத்தானை.

8. வேந்தன் ஆள். வேம்பு அணிவான் - பாண்டியன். மால் - திருமால். அரசர் திருமாலின் அம்சமாவார் என்பர்.

9. புற்கைக்கு அலந்து - கூழுக்குத் துன்பமுற்று. அம் சுகம் - அழகிய கிளிப்பிள்ளை. ஓர் எறும்புக்கும் என்றிருக்க வேண்டும். செய்யுளாதல்பற்றி உம்மை தொக்கது. ஆர்பதம் - உணவு பொற்பு - அழகிய. அறும் பட்சத்தன் - அன்பில்லாதவன்; வடமொழி நடை. ஐயுற்றனன் - சந்தேகித்தனன். "வெறும் புற்கையும் அரிதாம்; கிள்ளை சோறும்; என் வீட்டில் வரும் எறும்புக்கும் ஆர்பதமில்லை" என்பது அந்த அரைப் பாட்டு.

10. அமரர்கோன் முடிவிழ அடர்த்தோன் - உக்கிர குமார பாண்டியன்; அவன் செயலை இப் பாண்டியனுக்கு ஏற்றிக் கூறினர். இக்குறைக் கவி - இப்பாட்டின் மிகுந்தபாகத்தை. பணிகள் - நகைகள். தொக்குறும் - பலரும் சேர்ந்துள்ள.

11. வங்கிசம் - வமிசம். அவன் - மாயவனாகிய கண்ணன். சமைத்தான் - ஏற்படுத்தினன்.

12. சென்றவன் - அரசன் அனுப்பிவைத்த உத்தியோகஸ்தன். புனை இழைகலை - அலங்கரிக்கப்பட்ட இழைகளையுடைய ஆடை கவின்-அழகு. இவண்- இங்கே. தினை - மிகச் சிறிய அளவு; எதிர்மொழி பனை என்பது.

13. நாடி - தேடி. அடையாளம் தெரியாததால், 'நாடி' என்றார். களியியல் - மகிழ்ச்சியாகிய தன்மை. தகரம் - ஒருவித மயிர்ச்சாந்து. வார்-நீட்சி. இகல் - பகைமையை உடைய அல்லது, வலிமையை யுடைய.

14. இகல் தெரும் - பகைமை அல்லது வலிமையை அழிக்கின்ற.பூட்கை - துவாரமுடைய கையையுடைய. மால் - பெரிய கரி - யானை. கவளம் - யானையின் உணவு.

அப்பொழுது புலவர் கூறிய பாட்டின் பகுதி வருமாறு :

"முன்னாளில், என் இருங் கலியாம். குறும்பைத் தவிர்த்த
குடிதாங்கியைச் சென்று கூடிய பின், தெறும்புற்
கொல்யானை கவளங் கொள்ளாமல் தெவிட்டியதே."

இங்கே 'முன்னாளில்' என்பதனை அவர் முன்பாடிய அடியோடு சேர்த்தி ஒரு வாக்கியமாக்கல் வேண்டும்.

15. என் நுவன்றிடப்பால - சொல்லவேண்டியவை என்ன இருக்கின்றன; வியப்பைத்தரும் தொடர்; இது கவிக்கூற்று.

ச. இனிய பகுதிகள்

பல நூல்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட ரசமான பாகங்கள் இனிய பகுதிகள் என்ற தலைப்பின் கீழே தரப்பட்டுள்ளன.

1. கண்ணன் குழலூதும் சிறப்பு

கண்ணன்: கிருஷ்ணன் என்பதன் திரிபு; கரிய நிறத்தையுடையவன் என்பது பொருள். திருமாலிருஞ் சோலை என்னும் சோலை மலையிலுள்ள பெருமாளின் பெயர் அழகர் என்பது. அழகர் விஷயமாகப் பாடப்பெற்ற கலம்பகம் **அழகர் கலம்பகம்** எனப்படும்.

பலவகைப் பாக்கள், பலவகைச் செய்திகள், பலவகை உறுப்புக்கள் முதலியன கலந்து வரும்படி இயற்றப்படும் நூல் கலம்பகம் எனப்படும்; கதம்பம் போன்றது கலம்பகம்.

இதன் ஆசிரியரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

தறித்த - வெட்டிய. சித்திர காயம் - சித்திரத்தில் காணப்படும் உருவம்; புலிக்குச் சித்திரகாயம் என்று ஒரு பெயர் உண்டு. கொடும்பணிகள் - கொடிய பாம்புகள். மாலையவாய் - வரிசையாக. குலரத்ன விளக்கேற்ற - தம் தலையிலே உள்ள மேலான ரத்தினங்களாகிய விளக்குகளை ஏற்ற. கன்று ஆன் - கற்றான்; கறவைப்பசு என்றபடி. மழவிடை - இளமையான காளைகள். மிக விளங்கு; ஓவியர் - சித்திரகாரர். திரிபங்கி - மூன்று வளைவுகள்; கண்ணன் குழலூதுங் கோலத்தைக் காட்டும் சித்திரத்தில் மூன்று வளைவுகள் காணப்படும். சுக இளம் கோவியர்; கோவியர் - கோபிகா ஸ்திரீகள். கோவியரின் மழலைச் சொல்லைப்போன்ற குழலை.

வேளாள மரபினர். முந்நூறுண்டுகட்கு முன்பிருந்தவர். கந்தர் கலிவெண்பா, நீதிநெறி விளக்கம், சகலகலா வல்லிமாலை, மதுரைக்கலம்பகம், ஸ்ரீமீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சிதம்பரச்செய்யுட் கோவை, சிதம்பர மும்மணிக் கோவை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் முதலியன இவரியற்றிய வேறு நூல்களாகும்.

புயல் - மேகம். கண்படுக்கும் - தூங்கும்; தங்கும். பாதபம் - மரம். இருவேறு உரு - முகம் ஒரு வடிவம்; உடல் வேறு வடிவம். வருக்கை - பலாப்பழம். எயிறு - பல். வள் உகிர் - கூரிய நகங்கள். தொடுத்த - தோண்டி எடுத்த. மானிட மடங்கல் - நரசிங்கமூர்த்தி. ஆடகப் பெயரின் அவுணன் - பொன்னைக் குறிக்கும் பெயரையுடைய அசுரன்; இரணியன் என்றபடி; ஹிரண்யம் - பொன். இறும்பூது - ஆச்சரியம். பணை - வயல்கள்.

4. பனையின் சிறப்பு

கள்குடிக்கும் வழக்கமுள்ள ஒருவன் பனைமரத்தைச் சிறப்பிப்பதாகச் செய்யப்படும் செய்யுள் கலம்பகத்தில் களி என்ற உறுப்பாகும். இச் செய்யுள் மதுரைக் கலம்பகத்திலுள்ளது. இதன் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள்.

மதுரேசன் - சொக்கநாதர்; கள்ளுக்கு ஈசன். அமரேசன் - அமரர்களுக்கு ஈசன். களியால் - களிப்பினால். கலம் - பாத்திரம் என்றபடி; இரண்டு கலம் என்ற அளவுமாம். தேறல் - கள். பனை குருமூர்த்திக்கு இணை சாற்றத் தகும். சான்றாண்மை பயின்றார் - பெரியோர்கள்; சான்றார் என்னும் சாதியினர். பலம் - பிரயோஜனம்; பழம். வீடு - குடியிருக்கும் வீடு; முக்தி. வற்று - வலிமையுடையது. எழுதாததோர் திருமந்திரம் - கள்; வேதமந்திரம்; வேதத்துக்கு எழுதாக்கிளவி என்பது பெயர்.

5. மறம்

குறவர்கள், தம் குலத்துப் பெண்ணை அரசருக்கு மணம் பேசவந்தவரை மறுத்து இகழ்ந்து கூறுவதாகச்செய்யப்படும் செய்யுள் மறம் என்ற உறுப்பாகும். இது திருவரங்கக் கலம்பகம் என்ற நூலிலுள்ளது. இதனை இயற்றியவர் பிள்ளைப் பெருமாளையங்கார் என்பவர். இவர் யமகம் திரிபு முதலியவை அமையுமாறு சொற்சுவை பொருட்சுவை மிகக் கவிகளை எழுதும் ஆற்றல் பெற்றவர். திவ்ய கவி என்ற பட்டப்பெயர் பூண்டவர். முதிர்ந்த வைணவ பக்தர். இவரியற்றிய நூல்கள் எட்டு; அவை அஷ்டப்பிரபந்தம் என்று வழங்கும். தமிழில் சிறந்த பயிற்சி பெற விரும்புவோர் அவசியம் இவர் நூல்களைக் கற்றல் வேண்டும்.

1. திருமுகம் - கடிதம்; அழகிய முகம். மறவர் கொம்பு-

2. சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்

சரபேந்திர பூபாலர் என்ற பெயரையுடைய தஞ்சை மன்னர் விஷயமாக இயற்றப் பெற்ற குறவஞ்சி நாடகம் என்பது இதன் பொருள். பாட்டுடைத் தலைவனை நினைந்து வருந்தும் ஒரு பெண்ணுக்குக் குறத்தி ஒருத்தி தன் இருப்பிடத்தின் பெருமையையும் குலப்பெருமையையும் எடுத்துக் கூறிய பின் குறி கூறுவதாகவும், குறவன் வேட்டையாடுவதாகவும் பலவாறு வருணித்து இசைப் பாட்டுக்கள் விரவிவர இயற்றும் நூல் குறவஞ்சி எனப்படும். இதனை நாடகமாக நடத்தி வந்ததும் உண்டு.

இந்நூலின் ஆசிரியர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் என்பவர் கும்பகோணத்துக் கருகிலுள்ள கொட்டையூரில் நூறு வருஷங்களுக்கு முன்பிருந்தவர். இவர் பரம்பரைச் சைவாசாரிய மரபினர். தஞ்சைச் சரபோஜி மன்னர் சமஸ்தான வித்துவானாக இவர் இருந்து வந்தார். சென்னையில் தமிழாசிரியராகச் சில வாண்டுகள் இவர் விளங்கிவந்தார்.

கோடீச்சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, சில வைத்திய நூல்கள், திருவிடை மருதூர்ப்புராணம் முதலியன இவரியற்றிய வேறு நூல்களாம். இவர் இயற்றிய பிரதபந்ங்கள் மூன்றையும் குறிப்புரையுடன் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

1. தங்கமகா மேருவினில் - பொன்மயமான மேருமலையில்; தங்குவதற்காக மேருமலையில். சாபமலை - சிவபெருமானுக்கு வில்லாக இருந்த மலை; சபித் தலையுடைய மலை; சாபம் - வில்; சபித்தல். திண்ணன் — கண்ணப்ப நாயனார். அம்குலவு - நீர் மிகுந்த. உற - அடைவதற்கு.

2. மால் கொண்ட மலை - திருமால் இருப்பிடமாகக் கொண்ட மலை; மயக்கத்தைக் கொண்ட மலை. இடும்பன் - முருகக் கடவுளின் சேவகன்; பிறரை அஞ்சுவிப்பவனைக் குறிக்கும் வழக்குமொழி. தூங்கல் மலை - யானை மலை; தூங்கு தலை உடைய மலை. கொல்லி - கொல்லிமலை; கொல்லுவது.

3. குரங்கும் பலாப்பழமும்

நான்குவகைச் செய்யுட்கள் அடுத்தடுத்து வந்து 40 கவிகளால் முடியும் நூல் நான்மணிமாலை எனப்படும். இந்நூல் திருவாரூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தியாகராஜப் பெருமான் விஷயமாக ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் இயற்றப் பெற்றது.

இவர் ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரிற் பிறந்தவர்; சைவ

மறவர் குடியிற் பிறந்தபெண். அற்றவர் - பாசபந்தங்களினின்றும் விடுபட்டவர். தோழன் - இராமாயணத்துள் வரும் குகன். குலம் - வேடர்குலம். அரசு - அரசமரம்; அரசன். பேசுவாய் - மணம் பேசுவாய்.

2. ஓலையில் ஏதோ எழுதியிருப்பதை அறியாமையால் செல் அரித்த ஓலை என்றார். பின்னை கேள்வர் - நப்பின்னைப் பிராட்டியாரின் கணவர். பட்ட மன்னர் - பட்டத்தை யுடைய மன்னர். கால் - மரக்கால்.

6. கவிஞன் கர்வம்

1. வாழ்க்கையை நதிக் கரையாகவும் அந்த வாழ்க்கையில் ஏற்படும் இன்பங்களை அந்த நதிக்கரையில் விளையும் விளைச்சலாகவும் உருவகப் படுத்தினர்.

2. துன்பக் கனவினிலும் ஒரு ஜோதியைக்கண்டு உவப்போம் - துன்பத்தை வர்ணித்திருக்கும் சோகரஸம் நிறைந்த பாடல்களிலும் ஒரு பிரகாசமான இன்பத்தைக் காண்போம்.

3. அளந்திடுவோம் - நன்கு புகழ்ந்து கூறுவோம். 'கற்பனையினால் இவ்வளவும் செய்வோம்' என்றபடி.

6. பொறித்திடுவோம்-எழுதிடுவோம்.

7. வீறு - பெருமை; ஒருவருக்கும் இல்லாத சிறப்பு. கவிதை - கவி.

8. கவிகள் கோழைகளை வீரராக்கும் என்றபடி.

ரு. தனிப்பாடல்

எந்த நூலையும் சேராமல், அப்பொழுது அப்பொழுது புலவர்களால் பாடப்பெற்ற தனிக்கவிகள் தனிப்பாடல் எனப்படும்.

வீரராகவ முதலியார் பிறவிக்குருடர். இவர் எழுதியுள்ள நூல்கள் இனிய நயம் வாய்ந்து விளங்குவனவாகும். கயத்தாற்று மன்னன், இலங்கையை ஆண்ட பரராசசிங்கம் முதலியவர்கள் இவரை ஆதரித்தவர்களாவார்கள்.

1. அம்புயப் பள்ளி - தாமரையாகிய கோயில்; தாமரையாகிய பள்ளிக்கூடம். கச்சி - காஞ்சிபுரம். முத்தமிழ் - இயல், இசை, நாடகத்தமிழ்.

2. பூதூர் துங்கவடுகன் - வீரராகவமுதலியாரின் தந்தை. வீரராகவர் - வீரம் பொருந்திய ராகவர்; என்றது இராமரையும் இப்புலவரையும். கலைமான் - மாரீசன். பல்கலைமான் - சரசுவதி; பலகலைகளுக்குரியவள். ஒரு மானை எய்யச்சென்று வசை பெற்றான் அவன், பல மான்களை எய்யச்சென்று

இவன் இசைபெற்ருன் என்பது நயம்.

3. முன்னாட்டு - யாவர்க்கும் முதன்மையாகச் சொல்லப்பட்ட; தவமுனி - அகத்தியர். சேடன் - ஆதிசேடன்; கல்வியிற் சிறந்தவருக்குச் சேடனை உவமை கூறுவர். முதல் இரண்டடிகள் நிரல் நிரையணி. முனி மலையிடத்தும், சேடன் பாரிடத்தும், வான்மீகன் புற்றிடத்தும். பாரிடத்தும்-பாதாளத்திலும். கவிவீரராகவ முதலியாரின் புலமைக்குப் பயந்து இந்த விடங்களில் ஒளிந்து கொண்டார்கள் என்றபடி. பொன்னுட்டுப் புலவர் - தேவர்கள்; தேவர்களுக்குப் புலவர் என்றபேர் உண்டு.

4. வினவும் அவைகளுக்கு உத்தரமும் (பதிலும்) அமையுமாறு செய்யப்படும் கவி வினவுத்தரம் எனப்படும். திருவேங்கட நாதா என்ற சொல்லை திரு + வேம் + கடம் + நா + தா என ஐந்து சொற்களாகப் பகுத்துக்கொண்டு முறையே ஒவ்வொரு வினவுக்கும் உத்தரமாகக் கொள்க. திரு - செல்வம். வேம் - வேகும். கடம் - கடன். நா - நாக்கு. தா - கொடு.

5. கடைமணி - பிறரால் நலியப்பட்டவரும் குறைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறவர்களும் மணியை அடித்துத் தங்கள் வரவை அரசருக்குத் தெரிவிப்பதற்காகக் கடைவாசலில் கட்டியிருக்கும் ஆராய்ச்சிமணி. முன்னிரண்டடிகளைப் பாடியவர் ஒட்டக்கூத்தர். நவம் - புதுமை. பத அம்புயம் - பாத கமலங்கள்.

6. வழுதுணங்காய் - கத்தரிக்காய். புள்வேளூர் - புள்ளிருக்கும் வேளூர்; என்றது திருக்கழுக்குன்றம்.

7. வெய்தாய் - விருப்பமுடையதாய்; சூடுள்ளதாய். அடகு - இலைக்கறி. கடகம் - வளையல்.

8. ஆன் - பசு. அரம்பை - வாழை. முக்கனி - மா, பலா, வாழை. தேம் - தேன். வெண்ணெய் - திருவெண்ணெய் நல்லூர். சடையா - சடையப்ப முதலியாரே. கம்பர் தம்மைப் படர்க்கையில் கூறிக்கொண்டார். இடவழுவமைதி. தாம் இறக்கும்போது இதைப்பாடினர்.

9. சோலை என்றது பூஞ்சோலையை; பூஞ்சோலைக்குள்ள குணங்களாகிய அலைதலும், கவடுபடுதலும், காய்த்தலும், இலையென்பதைப் பெற்றிருத்தலும் இல்லாத ஒருவனைச் சோலை என்று சொல்வது பொருந்தாது என்றபடி.

கவடு - கபடம்; கிளைகள். காயான் - கோபியான். இலை என்பது - இல்லை என்று சொல்வது; தழை என்பது.

10. வளவன் - சோழன். வெறியார் - வாசனை மிகுந்த. தொடை - மாலை. மீனவர் கோன் - பாண்டியன். முன்னிரண்டடிகளைப் பாடியவர் ஒட்டக்கூத்தர்.

11. தேர் - தேர்களையும். உளை - பிடரிமயிர். திறை - கப்பம். அதிகமான பரிசுகளோடும் தேர் பரி கரிகளோடும் வந்த புலவரை அரசனும் என்று மயங்கினன் என்க. பாணன் : பாடுதலைத் தம் தொழிலாகப் பூண்ட பழங்காலச் சாதியினருள் ஒரு சாரார் பாணர் எனப்பட்டனர். ஆறைநகர் - ஆற்றூர். வாணபூபதி - ஏகாம்பவாணன். நித்திலம் - முத்து. ஆர் - ஆத்தி. ஆர், வேம்பு, பனை என்பன அவற்றை அணிந்த சோழபாண்டிய சேரரை முறையே குறிக்கும். அரசு - அரசமரம்; பல அரசர்கள். அத்தி - அத்திமரம்; யானைகள்.

12. பாடு - சப்தம்; இங்கே சகுனம் என்றபடி மாறனுகிய வழுதி. வாடை - வடக்கேயிருந்துவரும் குளிர் காற்று. தழீஇ - தழுவி. பேழை - பெட்டி.

13. அம்பு - ஜலம்; பாற்கடல். சிலை - மந்தரம் என்ற மலை. தம்பிரான் - திருமால். தாலை - நாவை. 'அம்பிலே வில்லை வைத்து' என்பது தோணி என்ற அலங்காரம்.

14. இம்பர் நாடு - இவ்வுலகத்திலுள்ள நாடு. உம்பர் - தேவர்கள். கற்பகக் கா - கற்பகச் சோலை.

முற்றிற்று.

Printed at The Liberty Press, G.T., Madras